# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 58 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 10, திங்கட்கிழமை 23.01.2017



8th Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2017
27 28 29
ஜனவரி / January
10.00am - 8.00pm
Municipal Grounds - Jaffna
4 இன்னும் நாள்களில்


## அரிசியின் விலை 2 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, ஜன. 23
அரிசியின் விலை இரண்டு ரூபா தொடக்கம் நான்கு ரூபாவரை சந்தையில் குறைவடைந்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் துமிந்த பிரியதர்சன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேவையான அளவு அரிசி சந்தைக்கு விநியோகிக் கப்பட்டுள்ளது. >> 25

## கொழும்புக்கு விரைகிறார் ட்ரம்பின் பிரதிநிதி

யாழ்ப்பாணம், ஜன. 23
அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்பினால், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பதில் செயலர் அன்ஜுலா, கொழும்புக்கு நாளைய தினம் வருகை தரவுள்ளார். கொழும்பு அரசின் முக்கிய தலைவர்களையும், சிவில் சமூகத்தினரையும் அவர் சந்தித்துப் >> 04

## வயம்ப பல்கலையில் தமிழ் மாணவர்களுக்கு பகிடிவதைக் கொடுமை

மாணவி ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன. 23
வயம்ப பல்கலைக்கழகத்தில் கற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பகிடிவதைக் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 25

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உணவு ஒறுப்பு

வவுனியாவில் இன்று ஆரம்பம்

வவுனியா, ஜன.23
தமிழர் தாயகத்தில் கையளிக் கப்பட்டு, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் >> 25

## சிங்கள மக்களுக்கு நாவற்குழியில் வீடுகள்

இந்த மாத இறுதியில் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.23
நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சிங்கள மக்களுக்கு மானிய >> 25

## தென்னிலங்கை வான் பரப்பில் மர்மப் பொருள்



கொழும்பு, ஜன. 23
இலங்கையின் தென் பகுதி வான்பரப்பில் அடையாளம் தெரியாத பறக்கும் பொருள் நேற்று முன்தினம் இரவு பல்வேறு பகுதிகளிலும் அவதானிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வட்டவடிவத்திலான இந்த மர்மப் >> 04

### நாட்டைத் துண்டாட முயன்றால்

# ரணிலை ஓட ஓட விரட்டியடிப்போம்

## வீரவன்சவின் கட்சி சூளுரை

கொழும்பு, ஜனவரி 23
பிரிவினைவாதிகளின் தேவைக்கு ஏற்ப, புதிய அரசமைப்பின் மூலமாக நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட முற்பட்டால், அவரை நாங்கள் ஓட ஓட அடித்து விரட்டுவோம்.
இவ்வாறு, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீரகுமாரதுங்க திஸாநாயக்க கடுந்தொனியில் கூறினார்.
கொழும்பு, சுகததாச மைதானத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் மாநாடு நேற்று இடம்பெற்றது. இதில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். அங்கு மகிந்த முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் வீர குமாரதுங்க திஸாநாயக்க உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். >> 25

முச்சந்தி முனி



தமிழர் எண்டாலும் சரி தமிழருக்கு ஆரும் ஏதும் குடுத்தால் அவர்களையும் சரி ஓட ஓடத் தான் விரட்டுவினம் இவையள்...

## நாட்டைத் துண்டாட அரசு இணக்கம்

இப்படிக் கூறுகிறார் மகிந்த

யாழ்ப்பாணம், ஜன. 23
நாட்டைத் துண்டாடும் கூட்டாட்சித் (சமஷ்டி) தீர்வு உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை நான் அன்று ஏற்றுக் >> 25

### நிறைவேற்று ஜனாதிபதி ஒழிப்பு பற்றி

## அனைத்துக் கட்சிகளையும் கூட்டி உறுதியான முடிவு

சுவிஸில் தெரிவித்தார் ரணில்

கொழும்பு, ஜன. 23
நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் முறைமையை நீக்குவது தொடர்பில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி உறுதியான முடிவு >> 04



## ஆளுநர் அதிகாரங்களை குறைத்துவிட வேண்டாம்

சந்திரசிறி உள்ளிட்ட முன்னாள் ஆளுநர்கள் மைத்திரிக்குக் கடிதம்

கொழும்பு, ஜன. 23
மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாமென்று கோரி வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட ஆளுநர்கள் எட்டுப் பேர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 04



## பஸ் விபத்தில் நால்வர் காயம்

முல்லைத்தீவு, ஜன. 23
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமானபேருந்து விபத்துக் குள்ளானதில் அதில் பயணம் செய்த நான்கு பேர் படுகாய >> 04

## மகிந்தவை அகற்றாவிடின் கூட்டு எதிரணிக்குச் சிக்கல்

அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 23
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைக் கைவிடவில்லை என்றால், கூட்டு எதிரணி இன்னும் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் எச்சரித்ததாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
மகிந்த ராஜபக்சவின் வதிவிடத்தில் கடந்த வாரம், கூட்டு எதிரணியினருடன் நடத்திய சந்திப்பின்போதே, அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தை >> 25

## மிருகவதை தொடர்பில் டக்ளஸுக்கு கவலையாம்

யாழ்ப்பாணம், ஜன. 23
தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு, இங்கு நடைபெறும் மாட்டுவண்டிச் சவாரி என்பன தடைசெய்யப்பட வேண்டும். மிருகவதைக்கு நான் எதிரானவன்.
இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படக் கூடாது
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக் கூடாது. சிறுபான்மை மக்கள் பேரம் பேசும் சக்தியாக இருப்பதற்கு >> 25

## வாள்வெட்டுக் கும்பல் கொக்குவிலில் அடாவடி



யாழ். ஜன. 23
யாழ்ப்பாணம், கொக்குவில் - ஆனைக் கோட்டை வீதியில் உள்ள பள்ளத்தடிப் பகுதியில் நேற்றுப் பட்டப்பகலில் கூரிய ஆயுதங்கள் மற்றும் கொட்டன்களுடன் சென்ற அடாவடிக் கும்பல் இரண்டு வீடுகள் மற்றும் ஓர் வர்த்தக நிலையம் என்பவற்றின் மீது கடும் தாக்குதல் நடத்திக் கண்ணாடிகளை நொறுக்கியதோடு, இரும்புக் கேற்றையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது.
வீட்டு உரிமையாளர்கள் மீதும் >> 25

## ஜி.எஸ்.பியை வழங்குவதற்கு புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு

பிரஸ்ஸல்ஸ், ஜன.23
ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டுச்சமூகத்துக்கு கொழும்பு அரசு வழங்கிய வாக்குறுதிகள் கிடப்பிலேயே இருக்கின்றன. நடைமுறைப்படுத்துவதற்கான எத்தனத்தைக் கூட கொழும்பு அரசு இதுவரை காண்பிக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தைக் கூட நடைமுறைப் >> 04

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

இந்திய ஒயில் விடாப்பிடி

## ரூபா ஒரு பில்லியனில் 4 எண்ணெய்த் தாங்கிகள்

அமைக்கிறது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனம் வழங்க மறுத்து வருவதால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1 பில்லியன் ரூபா செலவில் நான்கு எண்ணெய்த் தாங்கிகளை அவசரமாக அமைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வறட்சியை எதிர்கொள்வதற்காக மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் உள்ள சீனக்குடா எண்ணெய்க் குதங்களில் மூன்றை மீளப் பெறுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டது. இதற்காக அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்த போதும், இந்திய எண்ணெய் நிறுவன அதிகாரிகள், எண்ணெய்க் குதங்களை மீள வழங்க மறுத்து வந்தனர்.

இந்த நிலையில் அடுத்த வாரம் புதிய இந்தியத் தூதுவர் பொறுப்பேற்கும் வரை இதுதொடர்பான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணித்தார். எனினும், மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் டீசலை சேமித்து வைப்பதற்கு தாங்கிகள் அவசரமாகத் தேவைப்படுவதால், முத்துராஜவெலவில் நான்கு தாங்கிகளை அமைக்க சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

முதலாவது எண்ணெய்த் தாங்கியை அமைப்பதற்கு கோரப்பட்ட கேள்விப்பத்திரம் மூடப்பட்டுள்ளது. இதற்கு 400 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தாங்கிகள் ஒவ்வொன்றும் 15 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளைச் சேமித்து வைக்கக் கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளன.

மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை வாங்கி வந்த இலங்கை மின்சார சபை, இந்த மாதம் மேலதிகமாக 60 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை வழங்குமாறு கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## ரூ. 25,000 தண்டம்; ஆராய்கிறது குழு

கொழும்பு, ஜன. 23

சாலை விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக அதிகரிக்க முன்மொழியப்பட்ட 25 ஆயிரம் ரூபா தண்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிக்கை அடுத்த மாத நடுப்பகுதியில் முழுமையடையும் என்று கூறப்பட்டது. அதிகரித்த தண்டத் தொகையைக் குறைப்பது தொடர்பில் அந்தக் குழு எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

சாலைப் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளில் 7 விதிமீறலுக்கு எதிராக இந்தத் தண்டத் தொகை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டது என்று தேசிய சபையின் தலைவர் மருத்துவர் சிசிர கோதாகொட தெரிவித்தார். இந்த அதிகரிப்புக்கு எதிராக பொதுப் போக்குவரத்து சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன. (வ-4)

பிரதேச வைத்தியசாலைகளில்

# மருத்துவர் வெற்றிடங்களை விரைந்து நிரப்பவேண்டும்

கொழும்பு அரசிடம் மருத்துவ மன்றம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 23

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் வெற்றிடங்களுக்கு மருத்துவ அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவ அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் வெற்றிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண மருத்துவ மன்றப் பிரதிநிதிகள் கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் வலியுறுத்தினர்.

வடக்கு மாகாண மருத்துவ சேவையின் வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் வடக்கு மாகாண மருத்துவ மன்றப் பிரதிநிதிகள் கொழும்பில் கடந்த 18 ஆம் திகதி கலந்துரையாடல் நடத்தினர். அதில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக வடக்கு மாகாண மருத்துவ மன்றத்தினால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மருத்துவ சேவையின் வசதிகள் தொடர்பாக 15 விடயங்கள் கலந்துரையாடப்பட்டு சுகாதார அமைச்சரால் அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

புதிய மருத்துவர்கள் நியமனத்தின்போதும், மூத்த மருத்துவ அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றத்தின்போதும் வெற்றிடங்களை உரியமுறையில் பிரசுரித்து தேவைகளின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். வடக்கு மாகாணத்துக்குக் கூடியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை, மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை என்பனவற்றுக்கு நிரந்தர மருத்துவ நிபுணர்களை நியமித்து கூடிய விரைவில் வைத்திய உள்ளகப் பயிற்சி நெறியை ஆரம்பிக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சுகாதாரத் துறையிலுள்ள ஆளணியின் பழைய முறையிலுள்ள எண்ணிக்கையை மாற்றியமைத்து, தற்போதைய தேவைக்கு ஏற்ப புதிய ஆளணி எண்ணிக்கை முறையைத் தயாரிக்க வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டப்பின் டிப்ளோமா அதன் பின்பு பட்டப்பின் படிப்பு பயிற்சிநெறியை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தீவகங்களில் கடமை புரியும் மருத்துவ அதிகாரிகளுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை நாளொன்றுக்கு 7 தொடக்கம் 8 மணித்தியாலங்களால் அதிகரிக்கவேண்டும். மருத்துவர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதனால் ஓய்வு பெற்று மீள்நியமனம் பெற்றுள்ள பின்தங்கிய வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருத்துவ அதிகாரிகள் பதிவு மருத்துவ அதிகாரிகளுக்கு மேலதிக நேரக்கொடுப்பனவுடன் கடமை அழைப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவேண்டும். வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளிலுள்ள நிர்வாகத்துறை பிரிவு மருத்துவ அதிகாரிகளின் நியமனங்களை உரியமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை முறிவு நெறிவு சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு சத்திரசிகிச்சை உபகரணம் வழங்கப்பட வேண்டும்.

மாவட்டப் பொது வைத்தியசாலை ஆதாரவைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் நிலை-3 மருந்து வகைகள் சிலவற்றை பிரதேச வைத்தியசாலைகள் ஆரம்ப மருத்துவ சிகிச்சைப்பிரிவு என்பவற்றுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலை அமைந்துள்ள காணியின் பெறுமதியை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீள் மதிப்பீடு செய்து காணியின் பெறுமதியை உரிமையாளருக்கு வழங்கி அதனை அரச உடமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கடமைபுரியும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தொடர்பு கொள்ளும் வகையில் கொழும்பு சுகாதார அமைச்சில் தொடர்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை மருத்துவப்பிரிவுக்கு பிரத்தியேகக் கட்டடம் அமைத்து அதன் பிரிவுகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சர் சில தீர்வுகளை முன்வைத்திருந்தார். அதன்படி, இனிவரும் காலங்களில் மருத்துவர்களுக்கான இடமாற்றங்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் பாரப்படுத்தப்படும். தற்போதும் மூத்த மருத்துவர்களுக்கான இடமாற்றம் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி பெரதெனியா, குருநாகல், காலி, யாழ்ப்பாணம் ஆகிய வைத்தியசாலைகளில் விளையாட்டு மருத்துவப் பிரிவு ஆரம்பிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டபோதும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் விளையாட்டுப் பிரிவுக்குரிய கட்டம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். வெகுவிரைவில் பயிற்சியை முடித்து ஒரு தொகுதி தாதியர்கள் வெளியேறவுள்ளனர். அவர்களில் ஒரு தொகுதியினர் நியமிக்கப் படவுள்ளனர். ஏனைய தர உத்தியோகர்களும் படிப்படியாக நியமிக்கப்படுவர். கோரிக்கைகள் தொடர்பாக ஒவ்வொரு துறை அதிகாரிகளும் இதில் கவனமெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சரால் பணிப்புரை விடுக்கப்பட்டது - என்றுள்ளது. (வ-10)

## தேர்தலில் மீண்டும் போட்டியிடுவீர்களா?

மைத்திரியின் பதிலை எதிர்பார்க்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 23

மைத்திரிபால சிறிசேன அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா? இது தொடர்பில் மைத்திரிபால சிறிசேன பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் மேல் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டக்கள தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபாலவை அரச தலைவர் தேர்தலில் மீண்டும் போட்டியிட வைப்பதற்கும் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் ஆட்சி முறைமையை தக்கவைத்துக் கொள்வதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் மைத்திரி எதுவித கருத்தையும் தெரிவிக்காது மௌனமாகவுள்ளார்.

இதன் அர்த்தம் அவர் போட்டியிடவுள்ளார் என்பதுதான். இது சம்பந்தமாக நாம் மைத்திரியின் நிலைப்பாட்டை அறிய விரும்புகிறோம். அவர் உடன் பதிலளிக்க வேண்டும்.

பொது வேட்பாளர் என்ற சொற்பதம் அறிமுகப்படுத்தப்பட்டதே நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் ஆட்சி முறைமையை இல்லாதொழிப்பதற்குத்தான். பொது மக்கள் மைத்திரிக்கு வாக்களித்ததும் அதற்காகத்தான். அந்த ஒரேயொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் ஜே.வி.பியும்கூட மைத்திரியின் வெற்றிக்கு உழைத்தது.

இறுதியில் சாக்குப் போக்குகளைச் சொல்லி நிறைவேற்று அதிகாரமிக்க அரசதலைவர் ஆட்சிமுறைமையைத் தக்க வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தால் அதை நாம் அனுமதிக்கமாட்டோம். மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று நாம் அரச தலைவரைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (வ-4)

## தேர்தல் நடைபெறும் திகதியை கூறமுடியாது என்கிறார் மகிந்த



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதியை உறுதியாகக் கூற முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேர்தலை எப்போது நடத்த முடியும் என்பது பற்றி உறுதிபடக் கூற முடியாது. எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும்.

2012ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டத்தில் காணப்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு மீளவும் அவை நாடாளுமன்றில் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை - என்றார். (வ-5)



ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து தமிழகத்தில் நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியா, செட்டிகுளம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை இளைஞர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. செட்டிகுளம் பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட போராட்டத்தில் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (ற-21)

# மக்கள் மனதை வெல்வதற்கு தவறிவிட்டார் மகிந்த ராஜபக்ச

## அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 23

மகிந்த ராஜபக்ச போரில் வென்றாலும் சிறுபான்மையினரின் உள்ளத்தை வெல்லத் தவறிவிட்டார். அவருக்கு எவ்வளவற்றையோ நான் எடுத்துக் கூறியும் புரிந்துகொண்டிருக்கவில்லை. இனவாதத்தையும் - மதவாதத்தையும் கட்டுப்படுத்த அவர் தவறிவிட்டார்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகால்துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி ஹேவாவிட தேர்தல் தொகுதியில் உள்ள பின்னவல கிராமத்தில் 500குடும்பங்களுக்கான குடிதண்ணீர்திட்டத்தைப் பாவனையாளர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும், இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் - ஒற்றுமையையும் ஏற்படுத்துவதிலும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் முன்னாள் அரச தலைவர் அசமந்தமாகவே செயற்பட்டார். நாட்டில் ஏற்பட்ட வெவ்வேறு வகையான பல இனவாத நடவடிக்கைகளை அவர் கண்டுகொள்ளவில்லை. இந்த விடயங்களைக் கட்டுப்படுத்துமாறு அவருடன் பலதடவைகள்கடும்விவாதம் நடத்தியிருக்கிறேன். பலமுறை சண்டைபிடித்துள்ளேன். இந்த இனவாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துங்கள். அதைத் தொடர அனுமதிக்க வேண்டாம். மக்கள் மிகுந்த அச்சத்துடனும் கலக்கத்துடனும் இருக்கிறார்கள். மக்களின் இந்த அச்சம் பற்றி நேர்மையாக விசாரித்துப் பாருங்கள். இந்த அச்சத்தைப் போக்கும் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை யோசியுங்கள் என்றெல்லாம் அவருக்கு எடுத்துக் கூறினேன். அவர் அதனைக் கணக்கில் கொள்ளவில்லை.

போர் நிறைவடைந்துவிட்டது. இனிமேல் மக்கள் நம்முடன் இருப்பார்கள் என்ற நிலையிலேயே அவர் செயற்பட்டார். ஆனால், மக்கள் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை விரைவிலேயே இல்லாமற் போனது. அத்தோடு சர்வதேச அழுத்தம் நமது நாட்டின் மீது வெகுவாகப் பாதிப்பை உண்டு பண்ணியது.

ஐரோப்பிய யூனியன் நமக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தது. பல்வேறுபட்ட தடைகளில் இருந்து நமது நாட்டை இந்தக் கூட்டாட்சி அரசு மீட்டு வருகிறது. அதற்காக அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

இந்தக் கூட்டு அரசு மக்களின் சுகங்களையும் துக்கங்களையும் நன்றாக உணர்ந்தே செயலாற்றுகிறது - என்றார். (ற-4)

# மகிந்த அணிக்கு மக்கள் ஆதரவு மிகக் குறைவு

## - ஹரிசன் கூறுகிறார்



கொழும்பு, ஜன.23

மகிந்த அணிக்கு குறைந்தளவு மக்கள்ஆதரவே உள்ளது. அதனாலேயே அவர்கள் நுகேகொடவில் தமது கூட்டத்தை நடத்த முற்படுகின்றனர். இவ்வாறு அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மக்கள் சந்தப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கு மக்கள் இருக்குமாயின் அவர்கள் காலிமுகத் திடலில் தமது கூட்டத்தை நடத்திக் காட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# இனப்பாகுபாட்டுக்கு எதிரான சட்டத்தை நிறைவேற்றவேண்டும்

## கூட்டு அரசிடம் கோருகிறது ஜனநாயக மக்கள் முன்னணி

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகக் கூட்டு அரசு முன்னெடுக்கும்பெரும்பாலான திட்டங்கள் வெற்றியளிப்பதில்லை. அதனால் இனங்களிடையே சந்தேகங்களும் முரண்பாடுகளும் தலைதூக்குகின்றன. இனப்பாகுபாட்டுக்கு எதிரான சட்டத்தை இலங்கையில் நிறைவேற்றி இனச் சமத்துவத்தை உறுதிப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான சண். குகவரதன் தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இனரீதியாக மேடையில் பேசுவது, இனவாதத்தை தூண்டும் விதத்தில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்று கடந்த ஆட்சியின் போது முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தார். கடந்தகால இனவாத ஆட்சியாளர்கள் அதனைத் தூக்கியெறிந்தார்கள்.

இன்று இவ்வாறானதொரு சட்டம் நாட்டுக்கு தேவைப்படுகிறது. இலங்கையில் அரசமைப்பு ஊடாக இனரீதியாகப் பாதுகாப்பளிக்கப்பட்ட போதும், அது நடைமுறை சாத்தியமில்லததாகவே அமைந்துள்ளது. தொழில் நிலையங்கள், கல்வி நிலையங்கள் உட்பட பொது இடங்களிலும் அரச தொழில் வழங்கல்களிலும் இன அடிப்படையில் பாகுபாடுகள் காட்டப்படுகின்றன.

நாட்டில் ஊடகங்கள் இனரீதியிலான செய்திகளையே வெளியிடப்படுகின்றன. சில ஊடகங்கள் இனவாதத்தை தூண்டும் உணர்ச்சிகரமான செய்திகளை வெளியிடுகின்றன. ஊடகங்கள் நடுநிலைமை வகிப்ப தென்பது நாட்டில் குறைந்து வரும் கலாசாரமாக மாறிவிட்டது.

உண்மையான தேசப்பற்று என்னவென்பதை அரசு பெரும்பான்மை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். தமிழ்மக்களும் இலங்கையர்களே. அவர்களை ஒதுக்கக்கூடாது என்பதனை தெளிவுபடுத்த அரசு அனைத்துநடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். இனவாதத்தைத் தூண்டுவதை தடைசெய்யும் அமைச்சரவைப் பத்திரத்தை நிறைவேற்றி அது நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும். இனவாதத்தைத் தூண்டுவது தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (வ-4)

# ரயிலுடன் மோதி இளைஞர் சாவு

கொழும்பு, ஜன. 23

பொலன்னறுவை - வெலிகந்த பிரதேசத்தில் புகையிரதத்துடன் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மனம்பிடிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே உயிரிழந்தார்.

இளைஞர் புகையிரத வீதிக்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது புகையிரதத்துடன் மோதுண்டுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

முல்லைத்தீவு, ஜன. 23

முல்லைத்தீவு மாவட்டதில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடு மற்றும் காணிகள் அற்ற 90 குடும் பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் உள்ள ஒதியமலை கிராமத்தில் 25 வீடுகளும், பழம்பாசிக் கிராமத்தில் 40 வீடுகளும், கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் உள்ள கொக்கிளாய் கிராமத்தில் 25 வீடுகளுக்குமான அடிக்கல் நடப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம சேவையாளர் மற்றும் வீட்டுத்திட்ட பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-7)





எழுவைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய பகுதிகளில் கடற் படையால் தலா 15 லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட இரு நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியை நேற்று கடற்படைத் தளபதி திறந்து வைத்தார். அவை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 5 ஆவது நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதிகளாகும் (ற-ய-101)

# விடைத்தாள்கள் திருத்தும் பணி நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.23

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

தொடர்ந்து 30ஆம் திகதி வரை இடம்பெறும். இந்தப் பணிகளுக்காக 4 பாடசாலைகள் மூடப்படவுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

குருநாகல் வெலகெதர வித்தியாலயம், குருநாகல் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர வித்தியாலயம், கண்டி புனித அந்தோனி மகளிர்பாடசாலை,பொரளை கன்னங்கர மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளே இந்த நாள்களில் மூடப்படவுள்ளன. (த)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் திருமலையில் அடையாள உணவு தவிர்ப்பு

திருமலை, ஜன.23

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் வவுனியா சங்கத்தினர் எதிர்வரும் 23ஆம்திகதி சாகும்வரையிலான உணவு தவிர்ப்பில் ஈடுபடவுள்ளமைக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலையிலும் அடையாளஉணவுதவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு வடக்கு - கிழக்கு கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டவர்களில் உறவுகளாகிய நாம் பலதரப் பட்ட ஆர்ப்பாட்டங்களை மேற் கொண்டும், எமக்கு எதுவித பதிலும் அரசு தரவில்லை. முதற்கட்டமாக அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம். அதற்கும் பதில் கிடைக்கப் பெறாத நிலையில் இரண்டாம் கட்டமாக சாகும் வரையிலான போராட்டம் நடை பெறவுள்ளது.

இரண்டாம் கட்ட நடவடிக்கைக்கும் பதில் கிடைக்காவிடின் தமிழர் தாயகத்தின் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து உறவுகளும் சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதிப்பதற்குத் தயாராகவுள்ளனர் - என்றார்.

நான்கு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி வவுனியா சங்கத்தினர் சாகும்வரையிலானஉணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் இரா. சம்பந்தன்ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். (ற-ய-45)

# கிராமிய அபிவிருத்தி திட்டத்தில் மாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்புத் திட்டத்துக்கான முன்மொழிவுகள் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை காலமும் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா இந்தத் திட்டத்துக்காக வழங்கப்பட்டிருந்த நிலையில், அதனை சரி அரைவாசியாக இந்த ஆண்டு குறைக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்புத் திட்டத்துக்கு 5 லட்சம் ரூபா ஒதுக்கப்படும். இதில் 70 சதவீதமான நிதியில் கிராமியப் பௌதிக உட்கட்டுமானத்துக்கு ஒதுக்க வேண்டும். எஞ்சிய 30 சதவீத நிதியே வாழ்வாதாரத்துக்கு வழங்கப்படவேண்டும்.

வாழ்வாதாரத்துக்கு பொருள்கள் வழங்கும் போது 20ஆயிரம் ரூபா வுக்கு அதிகமான நிதி தனிநபர் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்யப்படக்கூடாது என்று அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாத முடிவுக்கு முன்னர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி பெறப்படவேண்டும் எனவும், மார்ச் மாத முடிவுக்கு முன்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப் படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பின்னரான முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும் என்றும் அறிவுறுத்தபட்டுள்ளது. மேலும், வேலைத் திட்டங்கள் யாவும் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் நிறைவுறுத்தப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# பொதுச் சுகாதார பரிசோதகர் கைது

கொழும்பு, ஜன.23

இலஞ்சம் பெற்ற குற்றச் சாட்டில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டார். ஹோட்டல் ஒன்றுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக, ஹோட்டல் உரிமையாளரிடம் இருந்து 10 ஆயிரம் ரூபாவை அவர் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரைக் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் கூறினர். (த)

# முன்னாள் போராளிக்கு விளக்கமறியல்

**கிளைமோர் வைத்திருந்தார் என ரி.ஐ.டி குற்றச்சாட்டு**

கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த முன்னாள் போராளிக்கு எதிராக கிளைமோர் குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டை நீதிமன்றில் முன்வைத்தனர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர். இதனால் அவரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் மன்று அனுமதி வழங்கியது.

கிளிநொச்சி, திருவையாறு முதலாம் பகுதியைச் சேர்ந்த காராளசிங்கம் குலேந்திரன் (வயது 34) என்பவரே கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். கிளிநொச்சி நீதிமன்றுக்குச் சென்று திரும்பும் போது மன்றின் முன்பாக வைத்து வாகனத்தில் சென்றிருந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவுடன் அவர் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவரைப் பார்க்கச் சென்றிருந்த அவரின் மூத்த சகோதரியிடம், '4 பேர் சேர்ந்து புலிக்கொடி ஏற்றினால் தமிழீழம் கிடைத்துவிடுமா?' என்று விசாரணைப் பிரிவினர் கேள்வியெழுப்பியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அவர் மீது கிளைமோர் வைத்திருந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவரது பெற்றோர் வயோதிபர்கள். தந்தையார் நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதியும் முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (வ-4,6)

## ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு நிர்ணய சபையின் நடவடிக்கைக் குழு நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்திருக்கும் பரிந்துரையின் பிரகாரம், ஆளுநர் ஒருவர் ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய உரிமை பறிபோவது உட்பட பல்வேறு பின்னடைவுகளை அவர்கள் தங்களது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டிக்கிரி கொப்பேகடுவ, ஜகத் பாலசூரிய, மொஹான் விஜேவிக்கிரம, கருணாரத்ன திவுல்கனே, குமாரி பாலசூரிய, திஸ்ஸ பலல்ல, ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் நந்தா மெத்யூ ஆகிய எட்டு முன்னாள் ஆளுநர்களுமே அரச தலைவருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது. (வ-4)

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள், ஒளிர்ந்து கொண்டிருந்ததாக இதனை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொலைநோக்கி மூலம் பிடிக்கப்பட்ட படங்களில், பிரகாசமான சதுர வடிவிலான நகரும் பொருளாக இது இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை மாவட்டங்களில் இந்த மர்மப் பொருள் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் வானில் அவதானிக்கப்பட்டுள்ளது. (வ-5)

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

## கொழும்புக்கு...

பேசவுள்ளார். ட்ரம்ப் பதவியேற்று நான்கு தினங்களுக்குள்ளேயே, புதிய அரசின் பிரதிநிதி ஒருவர் கொழும்புக்கு அவசரமாக வருவது முக் கியமாக நோக்கப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இந்தத் திடீர் பயணம் இடம்பெறுவது கொழும்பு அரசியலில் பரபரப்பாக பார்க்கப்படுகின்றது.

தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலராக, ஒபாமா அரசில் பணியாற்றிய நிசா பிஸ்வால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்னதாக, கொழும்புக்கு வருகை தந்து சந்திப்புக்களில் ஈடுபடுவது வழமையாகும்.

ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் கடந்த அரசின் காலத்தில் பணியாற்றிய தூதுவர்கள் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். நிசாபிஸ்வாலின் பதவிக்கு பதில் செயலராக அன்ஜூலா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை அரசுக்கான ட்ரம்ப் அரசின் செய்தியுடன் வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில், அமெரிக்க அரசு கொண்டு வந்த இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பிலும் இவர் ஆராயக் கூடும் என்று தெரியவருகின்றது. (வ-5)

## அனைத்துக்...

எட்டப்படும். இந்த விடயம் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கூறி வருவதைப் பொருட்படுத்தத் தேவையில்லை.

இவ்வாறு சுவிஸில் தெரிவித்தார் கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, பி.பி.சி. செய்திச் சேவைக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவின் அரசை வீழ்த்துவதற்கு நீங்கள் மக்களிடம் கொடுத்த முதன்மையான வாக்குறுதிதான், நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படும் என்பது. ஆனால், தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படாது, அரச தலைவர் அவ்வாறு வாக்குறுதி கொடுக்கவில்லையெனக் கூறி வருகின்றனர் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

'அரச தலைவர் தேர்தலின் போது நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளில் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பது முக்கியமானது. சு.கவின் உறுப்பினர் ஒரு சிலரே இவ்வாறு கூறி வருகின்றனர். அரச தலைவர் ஒரு போதும் அவ்வாறான அறிவிப்பை வெளியிடவில்லை. இந்த விடயம் தொடர்பில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி நாங்கள் உறுதியான ஒரு முடிவை எட்டவுள்ளோம்' என்று ரணில் பதிலளித்தார். 'ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைத்துள்ளது. இதன் காரணமாக எதிர் வரும் காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதிகளை இலங்கை முன்னெடுக்க முடியும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்த விலகியுள்ள பிரிட்டனுடன் எவ்வாறு வர்த்தகத் தொடர்பை பேணப்போகிறீர்கள்?' என்ற கேள்விக்கு, 'பிரிட்டனுடன் வர்த்தக உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டு ஏற்றுமதியை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். அதற்கான பேச்சுகள் தற்போது இடம்பெறுகின்றன. பிரிட்டனுடனான வர்த்தக உறவு தொடர்பில் விரைவில் அறிவிப்போம்.' என்று ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார். (வ-4)

## ஜி.எஸ்.பி...

படுத்தாத நிலையில், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை கொழும்பு அரசுக்கு வழங்குவதை தள்ளிப்போட - ஒத்திவைக்க வேண்டும்.

இவ்வாறு புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் நேரில் வலியுறுத்தியுள்ளன.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை கொழும்பு அரசுக்கு மீண்டும் வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரைத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே, புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் மேற்படி கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளன.

கொழும்பு அரசு வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்றுகின்றதா என்பதை உறுதி செய்த பின்னரே ஜி.எஸ்.பி வரிச்சலுகையை வழங்க வேண்டும். புலம்பெயர் அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் ஊடாக இந்த விவகாரம் தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளன.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கு அவசியமான பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம் உள்ளிட்ட விடயங்களில் மாற்றம் செய்வதற்கு கொழும்பு அரசு அக்கறை காண்பிக்கவில்லை என்பதை ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புலம் பெயர் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கொழும்பு அரசு தொடர்பில் பச்சைக்கொடி காட்டுவதற்கு முன்னர் அதன் செயற்பாடுகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் எனவும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வலியுறுத்தியுள்ளன. (வ-5)

## பஸ்...

மடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் விவசாயத் திணைக்களத்தில் நடைபெற இருந்த நிகழ்வில் கலந்து கொண்வதற்காக முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி சென்றுகொண்டிருந்த வேளை நேற்றுக்காலை 8.30 மணியளவில் தண்டுவான் கலிக்காட்டில் உள்ள வளைவில் வேகக் கட்டுப்பாட்டையிழந்த பேருந்து அருகில் இருந்த மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் பயணித்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (வ-7)

# வித்தியானந்த கல்லூரி வீதிக்கு காப்பெற் இட கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.23

முள்ளியவளை - வித்தியானந்தக் கல்லூரியின் முக்கிய நுழைவாயிலை காப்பெற் வீதியாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான அரசுத் தலைவரின் பயணத்தை முன்னிட்டு, இராணுவத்தினர் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை வித்தியானந்தாக் கல்லூரியில் மேற்கொண்டு வருகின்றனர்.

கல்லூரியின் மைதானம் முழுவதும் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்லூரியின் உள்ளக வீதிகள் அனைத்தும் இதுவரை கிரவல் வீதிகளாக இருந்தன. ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டச்செயலாளரின் பணிப்புக்கு அமைய வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் சுமார் நூறுமீற்றர் தூரம் கொண்ட ஒரு பிரதான வாயிலைத் தவிர்த்து, அரசுத் தலைவர் பயணிக்கவுள்ள ஏனைய வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்படுகின்றன. காப்பெற் இடப்படாது தவிர்க்கப்படும் முக்கிய நுழைவாயிலுக்கும் காப்பெற் இட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ந-10, 101)

# பாவனையாளர் அதிகார சபையை வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஜன.23

மக்களின் நன்மை கருதிப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் அவற்றின் மூலம் முழுமையான பயன் கிடைக்கும்

இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பாவனையாளர் அதிகார சபையின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள 62 பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தொழில் கிடைத்து விட்டால் நமக்கு நிம்மதி, சொகுசாக இருந்து வாழ முடியும் என சிலர் எண்ணுகின்றனர். தொழில் கிடைத்ததிலிருந்து ஓய்வு பெறும்வரை ஒருவாறு சமாளித்து விட்டு பின்னர் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்ற மனோபாவம் சிலரிடம் மேலோங்கியிருக்கின்றது.

இன்னுமொரு சாரார் கிடைத்த தொழிலை அடிப்படையாக வைத்து முயற்சிகளை மேற்கொண்டு, அந்த நிறுவனத்தில் உச்சக்கட்ட நிலைக்குச் செல்கின்றனர். அவர்கள் தமது இலக்கை அடைவதுடன் மக்களுக்கும் தனது அறிவு, அனுபவங்களைப் பயன்படுத்தி, மக்களுக்கு நன்மை கிடைக்கப் பாடுபடுகின்றனர்.

தொழிலும் பதவியும் கிடைத்து விட்டால் போதுமென்று இருந்துவிடாது கிடைத்த தொழிலை வைத்து இன்னும் முன்னேறுவதற்கு வழிசெய்யுங்கள். நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். இந்தத் தொழில் மிகவும் பொறுப்பு வாய்ந்தது. பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் குற்றவாளிகளைப் பாதுகாக்க முற்படாதீர்கள்.

மனச்சாட்சியே சிறந்த நீதிபதி. பாவனையாளர்களுக்கு அநியாயம் நிகழ்ந்தால் தவறு செய்பவர்களை இனங்கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை பாவனையாளர்களின் உரிமைகளையும், நன்மைகளையும் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட போதும் வர்த்தகர்களின் நலன்களையும் பேணுகின்ற ஒரு நிறுவனமாகும். விசாரணை அதிகாரிகளான நீங்கள் நடுநிலை நின்று பணியாற்ற வேண்டும். எதிர்வரும் காலங்களில் மேலும் விசாரணையாளர்களை நியமித்து மக்களின் நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்- என்றார்.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர் சிந்தக்க எஸ் லொக்குஹெட்டி, அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலகரட்ன, பணிப்பாளர் நாயகம் ஜீவானந்த ஆகியோர் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ந-56)

யா/ நவாலி மகாவித்தியாலயம், மானிப்பாய்
பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாக சபைத் தெரிவும்

காலம்:- 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 2 மணி
இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாமல் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை நிர்வாகம்

யா/நவாலி மகாவித்தியாலயம், மானிப்பாய். - 021 321 9979

உடனடி வேலைவாய்ப்பு
DYNAMIC ORG (PVT) LTD

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Dynamic org நிறுவனம் வடக்கில் திறக்கப்படவிருக்கும் 03 புதிய கிளைகளுக்கு O/L Or A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

Customers Service, Supervisors, Ass. Managers, Management traineers

நிரந்தர வேலைவாய்ப்புடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பும்.
பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 15, 000 - 20, 000 பயிற்சியின் பின்பு 65000 இற்கு மேல்.

யாழ்ப்பாணம்: 077 664 4442, 076 678 1042
முல்லைத்தீவு: 077 230 2795, 077 574 1700



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக் கழகத்தின் 32ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் 11.01.2017 அன்று 'முதுகல்விமாணி' பட்டத்தைப் பெற்ற எமது வித்தியாய ஆசிரியர்

திருமதி ஜெயந்தி சந்திரகாந்தன்

அவர்களை வாழ்த்துவதோடு, வாழ்வில் சகல வளங்களையும் பெற்று சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்-
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

# யாழ்ப்பாண கல்லூரி பிரதி அதிபராக பிரான்ஸிஸ்

யாழ்ப்பாணம், ஜன.23

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபராக அன்ரன் சந்திரன் பிரான்சிஸ் கல்லூரி ஆளுநர் சபையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் மூத்த ஆசிரியராகக் கடமையாற்றிய ஏ.சி.பிரான்சிஸ் 2009 ஆம் ஆண்டில் உப அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார்.

அண்மையில் பிரதி அதிபராக நியமிக்கப்பட்ட ஏ.சி. பிரான்சிஸ் கல்வி முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ளதுடன், கூடைப்பந்து, ஹொக்கி ஹெனிஸ் போன்ற துறைகளிலும் கலர்ஸ் விருது பெற்றவர். (ந-50)

# ஆள்சேர்ப்பு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜன.23

வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் பதவிக்கான ஆள்சேர்ப்புக்கு நேர்முக தேர்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நேர்முகத் தேர்வு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அ.அடை, விவாகச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், வாக்காளர் அட்டை பிரித்தெடுப்பு, பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ், இரு சமூக அந்தஸ்து சான்றிதழ், சொந்தக் காணி உறுதி, மேலதிக மொழி அறிவு, பதில் கடமை ஆற்றுபவராயின் பதில் கடமை நியமனக் கடிதம் என்பவற்றுடன் சமூகம் தர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வின் ஆரம்பத்தில் கையெழுத்தைப் பரீட்சிப்பதற்கான எழுத்துச் சோதனை இடம்பெறும். (ந-50)

# தங்கத்தினாலான புத்தா சிலை: மொனராகலையில் ஒருவர் கைது

பதுளை, ஜன.23

மொனராகலை பிரதேசத்தில் புதையலில் இருந்து எடுக்கப்பட்டது என்று கருதப்படும் தங்கத்தினாலான புத்தர் சிலையுடன் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பிபிலயாய என்ற இடத்தில் வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க புத்தர் சிலையை மீட்டதுடன், வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர்.

3.5 சென்ரி மீற்றர் உயரமுள்ள இந்தச் சிலை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் ஊடாக மதிப்பீடு செய்யப்படவுள்ளது என்று மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ய-41)

விற்பனைக்குண்டு

மோட்டார் சைக்கிள்கள்

01. HUNK - NP BDV - XXXX
02. HUNK - NP BDT - XXXX
03. HUNK - NP BCE - XXXX
04. KARIZMA ZMR - NP BBR - XXXX
05. TVS METRO - NP BDP - XXXX
06. SUZUKI GIXXER SF - NP BDQ - XXXX
07. HONDA TWISTER - NP BEA - XXXX

தொடர்புகளுக்கு:
மேனகாந் - 077 060 8074, 077 364 4409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
No - 233, Stanley Road,
Jaffna.
021 221 9997, 021 222 1898

# மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சி, ஜன.23

கைதடி - முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெறும் போட்டி நிகழ்வில் தலைமை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.சிறிகாந்தாவும், கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவனும் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவருமான சீ.சந்திரன், பழைய மாணவர்களான கலாதீபன் தம்பதியினர் கலந்து கொள்வர். (ந-9)

காணி விற்பனைக்கு

K.K.S. வீதி, சுன்னாகத்தில் வீட்டுடன் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

071 428 8049

வேலைக்கு ஆள்கள் தேவை

காட்வெயார் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் பழகவிரும்புபவர்கள் விரும்பத்தக்கது.

077 252 8957

50 ஆவது திருமண வாழ்த்து



இன்று தமது 50 ஆவது திருமண ஆண்டு நிறைவைக் கொண்டாடும் எமது அன்புத் தெய்வங்களான

திரு.திருமதி திருநாவுக்கரசு மதுரைநாயகி

தம்பதிகளுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர்களைப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழவைக்க எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# யார் அழுத்தங்களைத் தந்தாலும் அரசியலிலிருந்து ஒதுங்கமாட்டேன்

## மகிந்த உறுதி

பலமிக்க நாடுகள் எவ்வளவு அழுத்தங்களைக் கொடுத்தாலும் அரசியலில் இருந்து விலகவோ, ஒதுங்கவோ போவதில்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவை அரசியலில் இருந்து ஒதுங்குமாறு பலமிக்க நாடு ஒன்றும், அயல் நாட்டின் புலனாய்வுப் பிரிவும் அழுத்தம் கொடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தது. இதற்குப் பதில் வழங்கும் வகையில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எப்போதும் நாட்டு மக்களுடனேயே அரசியலில் ஈடுபட்டு வந்துள்ளேன். வெளிநாடுகளின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைய நான் அரசியலில் ஈடுபடவில்லை. அரச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் தோல்வியடைந்தாலும் எந்த இலாப நோக்கமும் இன்றி என்னுடன் இருக்கும் லட்சக்கணக்கான மக்களின் கோரிக்கைகளை எந்த வகையிலும் புறந்தள்ள போவதில்லை என்று மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.

(வ-5)



யாழ்ப்பாணம் - தீவகம் பண்ணைச் சாலையில் பயணித்து கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் சாலையை விட்டு விலகி கடலுக்குள் வீழ்ந்தது.
இந்தச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. ஹைஏஸ் வாகனம் யாழ்ப்பாணத்திலிருந்து மண்டை தீவு நோக்கிச்சென்று கொண்டிருந்த வேளை சாலையால் வந்த மற்றொரு வாகனத்துக்கு வழி விடுவதற்காக வீதி ஓரமாக சென்ற வேளையிலேயே வேகக்கட்டுப்பாட்டை இழந்து சாலையை விட்டு விலகி வான் கடலுக்குள் பாய்ந்துள்ளது. இந்தச்சம்பவத்தில் ஹைஏஸ் வாகனத்தில் இருந்தவர்களுக்கு பெரியளவிலான காயம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி1)

# பிக்குணி உணவுத் தவிர்ப்பு

கூட்டு அரசு உடனடியாக தனது ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி, கண்டி தலதா மாளிகையின் முதன்மை வாயிலுக்கு முன்னால், பிக்குணி ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல், தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் குதித்துள்ளார்.

அரசு அவர்கள் எண்ணியபடி செயற்பட்டு வருகிறது. இந்தப் பூமியை நேசிக்கும் பௌத்தன் என்ற வகையில் சிங்கள இனம் அழிவதைப் பொறுத்து கொள்ள முடியாது. அதனால் தான் நான் இங்கு வந்து அமர்ந்துள்ளேன். நான் காடுகளில் தவத்தில் ஈடுபட்டு வந்தேன். இறுதியில் கூட்டு அரசுக்கு எதிரான இந்த சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளேன் என்று அவர் குறிப்பிட்டார். (வ-5)

# ஊழலைத் தடுக்காவிடின் மாற்று அரசு உருவாகும்

## எச்சரிக்கிறது ஜேவிபி

கொழும்பு, ஜன. 23

ஊழல், மோசடிகளை உடன் நிறுத்தாவிட்டால் - ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதியை சரியானமுறையில் நிலை நாட்டக்கூடிய மாற்று அரசை உருவாக்குவோம்.

இவ்வாறு ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன் னணி) நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு திருடர்களைப் பிடிக்கவில்லை. திருடர்கள் தான் இந்த அரசைப் பிடித்துள்ளனர். இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் செய்த முதல் திருட்டுத்தான் மத்திய வங்கி பிணைமுறி மோசடி. அதனைத் தொடர்ந்து ஊழல்கள் வெற்றிகரமா கத் தொடர்கின்றன. ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. உருப்படியாக ஒரு திருடனையும் பிடிக்கவில்லை. அது தொடர்பிலான அக்கறை இந்த அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதில் அரசியல் டீல் இருக்கின்றது. அது தான் உண்மை.

இது தொடர்பில் நீதியை நிலை நாட்டக்கூடிய - திருடர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்கக்கூடிய - ஊழலை முற்றாக நிறுத்தக் கூடிய மாற்று அரசு ஒன்றை உருவாக்குவதுதான் ஒரே வழி. இதை நாம் இனிச் செய்வோம்.

மக்களுக்கு இது தொடர்பில் பொறுப்பு உண்டு. மாற்று அரசை உருவாக்குவதற்கு ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

(வ-4)

## விடுதியிலிருந்து வெளியேறாவிடின் கைது

# பல்கலை. மாணவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 23

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் விடுதியிலிருந்து வெளியேறாத மாணவர்களைக் கைதுசெய்யவுள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர் என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

தமது கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பல்கலைக்கழக நிர்வாகம் செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக பீட இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விடுதி வசதிகள் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த மாணவர்கள் கடந்த நான்கு நாள்களாகப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்துக்குள் தங்கியிருந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் விடுதியிலிருந்து மாணவர்கள் அனைவரையும் வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ள போதிலும் சிங்கள மாணவர்கள் இதுவரை வெளியேறவில்லை. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறாத மாணவர்களைக் கைது செய்யவுள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போதே பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் செயற்பாடுகள் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் குணதாசன் பிரசாந் தெளிவுபடுத்தினார்.

மாணவர் விடுதி தொடர்பான பிரச்சினையில் தலையிடாத பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட புதுமுக மாணவர்கள் ஆயிரத்து 500 பேரையும் நேற்றுக் காலை 8 மணிக்கு முன்னர் வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளதாகக் கலைப்பிரிவு மாணவர் ஒன்றியத் தலைவர் இராமநாதன் லைபந்தன் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் வர்த்தகபீட இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கல்வித் தடை தற்போது, அனைத்துப்பீட மாணவர்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளதால், தமது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று வணிக முகாமைத்துவ பீட மாணவன் எஸ். சந்திர மதன் குறிப்பிட்டார். (மற்றொரு செய்தி 9 பக்கத்தில்) (வ-4)

# மாணவர் அனுமதிக்கு கையூட்டல் பெற்ற ஆசிரியர் கைது

கொழும்பு, ஜன. 23

2017ஆம் ஆண்டுக்கான தரம் 6 அனுமதிக்காக ஐந்து மாணவர்களின் பெற்றோரிடமிருந்து 30 இலட்ச ரூபாவை இலஞ்சமாக வாங்கிய கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கொழும்பு நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலையில் 30 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கும் இவர் இந்த மாணவர்களின் பெற்றோரிடமிருந்து 5 தொடக்கம் 6 இலட்ச ரூபா வரையிலும் பணம் பறித்துள்ளார்.


எனினும், ஒரு மாணவனுக்காவது அனுமதி கிடைக்காததால் இது தொடர்பில் விசாரணை செய்த பெற்றோர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டதும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸாரின் விசாரணைக்கு ஆசிரியர் உட்படுத்தப்பட்டபோது, இந்தப் பணத்தை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துக்கு வழங்கியதாக அவர் கூறியுள்ளார். எனினும், பழைய மாணவர் சங்கம் இதை முற்றாக மறுத்திருக்கிறது.

இந்த மோசடி தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)

# மகிந்தவுடன் பேசுக்கு மைத்திரி வரவேண்டும்

## காமினி லொக்குகே எம்.பி அழைப்பு



கொழும்பு, ஜன. 23

முதலமைச்சர்கள் பேச்சுக்கு வருவதில் அர்த்தமில்லை. அரச தலைவர் மைத்திரிபாலவே, மகிந்தவுடனான பேச்சுக்கு வரவேண்டும்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலமைச்சர்களுக்கும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பில் மகிந்த அணி சார்பில் கலந்து கொண்ட காமினி லொக்குகே மேலும் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) இடம்பெற்ற பேச்சில் எதுவித பயனும் இல்லை. இன்று (நேற்று) பேச வந்தவர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. இதனை நாம் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். அதிகாரம் இல்லாமல் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாது. இருப்பினும் நாம் சுமுகமான முறையில் கலந்துரையாடினோம். இந்தச் செய்தியை நாம் அவர்களுக்கு வழங்கினோம் - என்றார். (வ-5)

# இணக்கப்பாடின்றி முடிந்தது மகிந்த – முதல்வர்கள் சந்திப்பு

கொழும்பு, ஜன. 23

நாட்டின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் மாகாண முதலமைச்சர்களுக்கும் இடையே நேற்றுக் காலைநடைபெற்ற சந்திப்பு இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, விஜயராம மாவத்தையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

கடந்த 11ஆம் திகதி வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய 7 மாகாண முதலமைச்சர்களும் ஒன்றுகூடி மகிந்த ராஜபக்சவை சந்திப்பதெனத் தீர்மானம் எடுத்திருந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த 7 மாகாண முதலமைச்சர்களுக்கும் மகிந்தவும் அதற்குப் பச்சைக்கொடி காட்டியிருந்தார். அதன்படி நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன மகிந்தவுடனான நேற்றைய சந்திப்பில் பங்கேற்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய 6 மாகாண முதலமைச்சர்களும் நேற்றுப் பங்கேற்றனர்.

மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத், மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டீ சில்வா, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க, ஊவா மாகாண முதலமைச்சர் சம்பத் தசநாயக்க ஆகியோரே மகிந்தவுடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மகிந்த அணி சார்பில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

“சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நீடித்துவரும் முறுகல் நிலமை மற்றும் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டன. இணக்கப் பாடொன்றை எட்ட முடியாமல் போயிருந்தது” என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். “சந்திப்பு எந்தவித இணக்கப்பாடுமின்றி முடிவடைந்தது. இரு தரப்பினருக்கும் இடையே எதிர்காலத்தில் பேச்சு நடத்தப்படும்” என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார். (வ-4)

# தமிழ் அகில உலகக் கூட்டமைப்பை உருவாக்கும் காலம் கனிந்துள்ளது

## உழவர் விழாவில் தெரிவித்தார் முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஜன. 23

நான்கைந்து கட்சிகளைச் சேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது போன்று உலகம் முழுவதும் உள்ள தமிழ் பேசும் மக்கள் சேர்ந்து தமிழ் அகில உலகக் கூட்டமைப்பொன்றை உருவாக்கும் காலம் தற்போது கனிந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நேற்று மாலை நடைபெற்ற, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உழவர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தைப்பொங்கல் என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களுக்கே உரியதொரு கொண்டாட்டம் என்பது போய் முழுத் தமிழ் இனத்தையும் ஒற்றுமைப்படுத்தி ஒன்றாகச் சேர்த்துக் கொண்டாட வழிவகுக்கும் விழாவாக மாறியுள்ளது.

தொன்று தொட்டு தைப்பொங்கல் விழா நடந்து வந்துள்ளது. இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஏன் இஸ்லாமியர் கூட தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். சென்றவாரம் கனடாவில் இஸ்லாமியச் சகோதரர்கள் என்னைச் சந்தித்து தைப்பொங்கல் தங்களுக்கும் ஒரு பெருநாள் என்றார்கள்.

இவ்வாறான தைப்பொங்கல் கொண்டாட்டம் முழுத் தமிழ் இனத்தையே சேர்க்க வல்லதாக இருக்கும் போது, சகல நாடுகளிலும் உள்ள தமிழ் பேசும் மக்களும் தமக்குள் ஒற்றுமையை வரவழைக்க - வளர்க்க தைப்பொங்கலை மையமாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கருதுகின்றேன்.

எவ்வாறு நாங்கள் நான்கைந்து கட்சிகளைச் சேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமைத்தோமோ, அதேபோல் உலகம் முழுவதும் உள்ள தமிழ் பேசும் மக்கள் சேர்ந்து தமிழ் அகில உலகக் கூட்டமைப்பொன்றை உருவாக்கும் காலம் தற்போது கனிந்துள்ளது. இறைவன் அருளால் அவ்வாறான அமைப்பொன்று உருவாக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

### ஜல்லிக்கட்டுப் பிரச்சினை துர்ப்பாக்கிய நிகழ்வு

ஜல்லிக்கட்டு போட்டிகள் இந்தியாவில் பன்நெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த போதும் கடந்த ஒரு சில ஆண்டுகளாக இந்தப் போட்டிகளை அரசு தடுத்து நிறுத்த முயல்வதும் அதற்கு எதிராக பல அணிகள் போர்க்கொடி தூக்குவது தமிழ் நாட்டில் இடம்பெற்றுவருவதும் ஒரு துர்ப்பாக்கிய நிகழ்வாகும். இருசாராரும் முன்வைக்கின்ற விடயங்களில் பல உண்மைத்தன்மைகள் காணப்படுகின்ற போதும் தொன்றுதொட்டு இடம்பெற்று வந்த பாரம்பரிய விளையாட்டுக் கலைகளைத் திடீரென்று மாற்றுவது சமூகச் சிக்கல்களை ஏற்படுத்தும். அதுதான் இன்று தமிழ் நாட்டில் பூதாகரமாக வெடித்துள்ளது. நேற்றைய தினம் தொடர்புடையவர்கள் சில உடன்படிக்கைகளுக்கு வந்துள்ளதாகக் கேள்வி. பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் இந்திய மற்றும் தமிழக அரசுகள் இந்தப் பிரச்சினையை அணுகி உரிய தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டும்.

சாதி, மத, வர்க்க பேதமின்றி நாடுகள் கடந்து எமது மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் எமது குறைகளை உலகுக்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்குத் தைப்பொங்கல் மையமாக அமையட்டும் - என்றார். (வ-5-8)



# வறட்சியில் பயிர்களை கோமியம் பாதுகாக்கும்

## தமிழக சூழலியல் விவசாயச் செயற்பாட்டாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன 23

வறட்சியான காலங்களில் பயிர்களை பசுக்களின் கோமியம் மூலம் காப்பாற்ற முடியும் என்பது ஆய்வு மூலம் வெற்றியளித்துள்ளது.

இவ்வாறு தமிழகத்தைச் சேர்ந்த சூழலியல் விவசாயச் செயற்பாட்டாளர் ரேவதி மாரிமுத்து தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உழவர் விழா கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஊர்களில் வளர்க்கும் மாடுகளின் கோமியத்தை எடுத்து விவசாய நிலங்களில் நாம் தெளிக்க வேண்டும். ஒரு பங்கு கோமியத்துக்கு 9 பங்கு நீர் சேர்க்க வேண்டும். அதன் பின்னர் உங்கள் பயிர்களுக்கு மேல் அதனை தெளியுங்கள். அப்படி செய்வீர்களாயின் எந்த பெரிய வறட்சியான கால நிலை வந்தாலும் பயிர்கள் அதனைத் தாக்குப் பிடிக்கின்ற தன்மையை கொண்டிருக்கும். இதனை நாம் பலதடவைகள் ஆய்வுகள் ஊடாக நிரூபித்துள்ளோம். இந்த முறைமையை நாம் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி வருகின்றோம்.

ஒரு பங்கு கோமியத்துக்கு 9 பங்கு நீரை மட்டுமே பாவியுங்கள். அதற்கு அதிகமாக சேர்க்கக் கூடாது. அப்போதுதான் உரிய பலனைப் பெறமுடியும் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தில் சிறந்த விவசாய செய்கையாளர்கள், கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பாரம்பரிய நடனங்கள், தமிழர்களின் பண்டைய கலா வாத்தியமான பறை இசை நிகழ்வும் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், இ.அங்கஜன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் எல்.இளங்கோவன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் என பலரும் உழவர் விழாவில் கலந்து கொண்டனர். (வ-8)

# கொழும்புத் துறைமுக நகர் காணிகள் ஏல விற்பனை

## அடுத்த வருடம் இடம்பெறுமாம்

கொழும்பு, ஜன. 23

கொழும்புத் துறைமுக நகரின் காணிகளின் ஏல விற்பனை அடுத்த வருடம் முதல் ஆரம்பமாகுமென மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதற்கு முன் இந்த ஏல விற்பனை 2020ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் நகரின் நிர்மாணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதால் ஏல விற்பனையை 2018இல் ஆரம்பிக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

கடல் மேடாக்கப்படுவதன்மூலம் 269 ஹெக்டயர் நிலம் உருவாகும். அதில் 108 ஹெக்டயர் 99 வருடக் குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்படும். எஞ்சிய நிலத்தில் 65 ஹெக்டயர் ஏலத்தில் விற்கப்படும். 99 ஹெக்டயர் பொதுச் சேவைகளுக்காக ஒதுக்கப்படும் எனவும் அமைச்சர் சம்பிக்க தெரிவித்தார். (வ-4)

# தியானப் பயிற்சி

அச்சுவேலி, ஜன. 23

பிரம்ம குமாரிகள் இராஜஜோக நிலையத்தின் இலவச தியானப் பயிற்சி மற்றும் கருத்தரங்கு அச்சுவேலி தெற்கு பயிற்தோலை வீதியில் உள்ள ஞானம்வளவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. இந்தப் பயிற்சி நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது. விரும்புபவர்கள் கலந்து கொள்ள முடியும் என்று பிரம்ம குமாரிகள் இராஜஜோக நிலையத்தினர் தெரிவித்தனர். (வ-1)

# இப்படிக் கணிக்கிறார் உதய கம்மன்பில

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாளுக்கு நாள் கரைந்துகொண்டே போகிறது. அதன் தலைவராக மைத்திரிபால சிறிசேன இருக்கும்வரை எந்தத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுகள் நடந்துவருகிறது என்று சுதந்திரக் கட்சியினர் கூறிவந்தபோதிலும் அவ்வாறான இணைவொன்றுக்கு சாத்தியமே இல்லை. நாளாந்தம் பலவீனமாகிக் கொண்டேபோகும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாகியுள்ளது என்று உதய கம்மன்பில கூறினார். (வ-4)

# பிணை முறி விவகாரத்தை விசாரிக்க ஆணைக்குழு

## மைத்திரி தீர்மானம்

கொழும்பு, ஜன. 23

மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும், அரச தலைவரின் சிறப்பு ஆணைக்குழுவை இந்த வாரம் நியமிக்கவுள்ளதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ கீச்சகத்தில் (ருவிற்றரில்) இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி விவகாரம் கொழும்பு அரசியலில் கடந்த ஆண்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த அர்ஜுன மகேந்திரன், அவரது பதவியை இழப்பதற்கும் இது காரணமாக இருந்தது. இந்த விடயம் தொடர்பில் கோப் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. பிணை முறி தொடர்பான கோப் குழு அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அரச தலைவர் தனது கீச்சகத்தில், 'மத்திய வங்கியின் பிணை விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அரச தலைவரின் சிறப்பு ஆணைக்குழுவை இந்த வாரம் நியமிக்கவுள்ளேன்' என்று பதிவிட்டுள்ளார். (வ-5)

# பதவி நீக்கத்துக்கு எதிரான மனுவை விசாரிக்க அனுமதி

## வழங்கியது உயர் நீதிமன்றம்

எய்ட்ஸ் நோயாளி என்பதைக் காரணங்காட்டி சிறி லங்கன் விமான நிறுவனம் தன்னைப் பதவிநீக்கம் செய்திருப்பதை ஆட்சேபித்து அந்த நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனு எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

தலைமை நீதியரசர் கே.சிறிபவன் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோதே விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் உட்பட 6 பேரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார். (வ-4)

# இந்திரஜித்தின் நியமனமும் தவறானதாம்

இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட இந்திரஜித் குமாரசுவாமியின் நியமனத்தையும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஜேவிபியின் மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்ததாவது:

இந்திரஜித் குமாரசுவாமி புதிய ஆளுநராக கடந்த வருடம் நியமிக்கப்பட்டார். இவரது நியமனமும் சிக்கல் நிறைந்த ஒன்றாகும். இவரது வயது 68. அரச பதவி வகிக்கும் வயது அல்ல. இவரது நியமனத்துக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்க வேண்டும். நியமிக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன. இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல, அவரது மருத்துவ அறிக்கை மற்றும் சொத்து விவரங்களும் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. அவரது வெளிநாட்டு சொத்துக்களுடன் இருக்கின்ற தொடர்பு விளக்கப்படவில்லை.

பிரிட்டனில் உள்ள ஒரு சர்ச்சைக்குரிய நிறுவனத்தில் இவர் பணிப்பாளராக இருக்கின்றார். இந்த அரசு தொடர்ந்தும் மத்திய வங்கியை ஒரு சிக்கலான நிறுவனமாகவே வைத்திருக்கின்றது. - என்றார். (வ-5,4)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.23
க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.
பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம்.

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

**வர்த்தகம்**

ஆ.சிந்துஜா 3ஏ, த.தனுஸ்காந் ஏபிசி,ச.சங்கவி 3பி, செ.மிதுஷன்2பிசி, சி.விதூசன் பி2சி

**கலை**

து.கிருபாலன் 3ஏ, ரா.தர்ஷன் 2பிசி, த.ராகிலா ஏசிஎஸ்

**கணிதம்**

பா.பிருந்தாவன் 3ஏ, ந.சசிசேகரன் 3சி, ஜ.ஆதித்தன் பிசிஎஸ், பெ.அரியசுதன் சூல் 3சி, ந.மதுசன் பிசிஎஸ், நா.பார்த்தீபன் 2ஏபி, ரா.கார்த்திகா ஏ2சி, ப.கோபிநாத் பி2சி, நா.நவீன் 2சிஎஸ்

**உயிரியல் விஞ்ஞானம்**

தி.நிலக்சிகா 3சி, கோ.பிரணவபிரியன் ஏபிசி, மு.கஜேந்தின் 2பிசி, ம.ரெஜித்தா ஏபிஎஸ், ரா.சாந்தகுமார் சி2எஸ்.

**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

க.சுகந்தினி 2ஏசி, கி.சிவரஞ்சினி, 2ஏசி, செ.ஜென் சிகா ஏ2பி, ஸ்ரீ.கோகிலமதி ஏ2பி, செ.ராஜினி ஏபிசி, தே.தனுசியா ஏபிஎஸ், தி.குறிஞ்சி ஏபிசி, தே.லுவண்யா 2பிசி, க.சோனியா 2பிசி, தி.ஜவநிதா 2பிசி, நா.கயோந்தினி 2பிசி, நா. புர்மினி 2பிசி, ச.தமிழினி 2பிஎஸ், ஜெ.வானுஜா பி2சி, க.ஜான்சினி பி2சி, பா.ஜனரூபி பி2சி, தே.கேளரிசகானா பி2சி, சி.தயந்தா பி 2சி

**வர்த்தகப் பிரிவு**

க.சரண்யா ஏ2சி, நா.கிருா பி2சி, ச.கமல்ராஜ் பி2சி, த.விஜிதரன் 3சி

## மரண அறிவித்தல்கள்



**திருமதி பூமணி நாகமுத்து**

நல்லூர், கொன்றையடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி நாகமுத்து 20.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், சிவராசா, சறோசா, ஜெயச்சந்திரன், காலஞ்சென்ற இந்திரன் மற்றும் சிறிகாந்தராசா, ரவீந்திரன், சுதர்சன், சுபத்திரன், சசிகரன் ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பராணி, வரதராசா, அருந்ததி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் ரஞ்சினி, தயாளினி, கீதா, றெஜிதா, கலைவதனி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற தங்கத்தின் மைத்துனியும், வனஜீவன், ஜெனீவன், நிஜீவன், கஜெந்தி, சுவேந்தனா, லலித்ஜீவன், நிருபாலினி,யுகேந்திரன், உமாதாரணி, மதனசொரூபி, துவாரகா, பவதாரணி, கிருசியா, டயன்சன், அன்ரூசன், சுக்சன், சுபீசன், சுதீசன், பவிசா, அபிசா, நிசானா, ஆகாஸ், சகானா, கோபிசரன், சதூஸ், வதூஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொன்றையடி வீதி,**
**நல்லூர்.**
(ஜே. 7882) (13.18)
தகவல்:
**பிள்ளைகள்.**



**திருமதி பரமராணி தம்பிப்பிள்ளை**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமராணி தம்பிப்பிள்ளை 21.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**47/2, பிறவுன் றோட்,**
**கொக்குவில்.**
(ஜே. 7885) (13.18)
தகவல்:
**குடும்பத்தினர்.**

# தேசிய மட்டத்து சாதனையால் கிளிநொச்சிக்குப் பெருமையே

## மாவட்ட மேலதிக செயலாளர் பாராட்டு



கிளிநொச்சி, ஜன.23
தேசிய மட்டத்தில் சாதனை படைத்தது கிளிநொச்சிக்கு பெருமையே.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சத்தியசீலன் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
2016ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டிகளில் தேசிய மட்டத்தில் மேசைப் பந்துப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றமை, ஏனைய போட்டிகளிலும் வெள்ளி, வெண்கல பதக்கங்களை வென்றமை கிளிநொச்சிக்கு பெருமை சேர்த்த விடயம்.
கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக றோல் போல் விளையாட்டை அறிமுகப்படுத்தி அதனை முதல் முதலாக நேரடியாக பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த ஏற்பாட்டாளருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.
கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேக்கும் வகையில் கடந்த ஆண்டு தேசிய மட்டத்தில் மேசைப் பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற மாணவி பாலகிருஸ்ணன் தனுசியா, தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதகம் வென்ற ரசீந்திரன் தமிழ்மகள், கோலூன்றிப் பாய்தலில் வெண்கலப் பதக்கம் வென்ற யோகநாதன் சுகிர்தா ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் பாராட்டத்தக்கது.
பிள்ளைகளின் விளையாட்டுகளுக்கு பெற்றோர் அதிக ஊக்கத்தை வழங்கி வருகின்றனர். அது மகிழ்ச்சிக்குரியது.
விளையாட்டு வீரர்களை நான் மனதார பாராட்டுகிறேன். றோல் போல் விளையாட்டில் இலங்கையின் தேசிய அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீராங்கனைகள் உள்வாங்கப்பட்டு அவர்கள் பங்களாதேஷில் இடம்பெறுகின்ற உலக றோல் போல் போட்டியில் பங்குபற்றவுள்ளனர். அவர்களுக்கும் மாவட்டம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்- என்றார். (ந-35)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நெல்லியடி பழைய சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள கிளைச் சங்கக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் சி.சுகிர்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
கிளைச் சங்கத்தால் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட்போட்டி முடிவுகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறும்.
வடமராட்சி சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்க வலயத்துக்குட்பட்ட சிகை ஒப்பனை நிலையங்களை மூடி அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-173)

## மரண அறிவித்தல்

**திருமதி எலிசபேத் (கனகம்மா) பிரான்சிஸ்**

தோற்றம்
10.05.1928

மறைவு
22.01.2017



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் (கனகம்மா) பிரான்சிஸ் நேற்று (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சாமுவேல் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரான்சிஸ்ஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அக்கினேஸ், தேவி அம்மா, அந்தோனிப்பிள்ளை மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரன் தனராசா, அன்ரன் தவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பற்றிமா, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், மார்க்கஸ், காலஞ்சென்ற ராகுலன் மற்றும் அமுதா (பிரான்ஸ்), சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிதுசன், கலிஸ்ரார்,அபி, ஆகாஸ், அசோர் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (23.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல அன்னை ஆலயத்துக்கு (O.L.R) எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **றீகன் (பிரான்ஸ்)**
(J/7883) (11.18.17)
**இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**
**0033 7836 93191 (பிரான்ஸ்)**

# கைகலப்பால் குடும்பத் தலைவர் காயம்

தென்மராட்சி ஜன.23
கள் தவறணையில் ஏற்பட்ட கைகலப்பில் கூர்மையான ஆயுதத்தால் குடும்பத் தலைவர் வெட்டிக் காயப்படுத்தப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமத்தில் நடந்துள்ளது.
வெட்டுக் காயங்களுக்கு உள்ளான 32 வயது குடும்பஸ்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ந-9)

# வன்னிக்கு 22 ஆயிரம் இரும்பு வீடுகள்

## விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்கின்றார் ஐ.தே.க. அமைப்பாளர்

வவுனியா, ஜன.23
வன்னி மாவட்டத்தில் பொருத்து வீடுகளுக்கு 22 ஆயிரத்து 68 குடும்பங்கள் விண்ணப்பத்துள்ளன.
இவ்வாறு வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எம்.சிவலிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பொருத்து வீடுகளுக்கான விண்ணப்பங்கள் இந்த மாத முற்பகுதியில் கிராம அலுவலர்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டன.
மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 400 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 711 குடும்பங்களும், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் 689 குடும்பங்களும், வெலிஓயாவில் 614 குடும்பங்களும், செட்டிகுளத்தில் ஆயிரத்து 199 குடும்பங்களும், வவுனியா தெற்கில் ஆயிரத்து 110 குடும்பங்களும், வவுனியா பிரதேச செயலகத்தில் 7 ஆயிரத்து 343 குடும்பங்களும் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்துள்ளன.
பொருத்து வீடமைப்பின் முதற்கட்ட நடவடிக்கை பெப்ரவரி மாதம் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. வவுனியா பிரதேச செயலகத்துக்கு 10 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன என்று பிரதேச செயலாளர்கள் கூறியுள்ளனர் - என்றார். (ந-21)



வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் இயங்க ஆரம்பித்ததன் பின்னர், மைய பேருந்து நிலையம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது. அங்கு உள்ளூர் பேருந்து சேவைகள் மட்டுமே நடைபெறுகின்றன. அங்குள்ள வியாபார நிலையங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. வெறிச்சோடியுள்ள பேருந்து நிலையத்துக்குள் இளைஞர்கள் தற்போது கிரிக்கெட் விளையாட ஆரம்பித்துள்ளனர். (ந-21)

# குளத்து நீரை சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜன.23
கிளிநொச்சி, அக்கராயன் குளத்து நீரை விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயத் திணைக்களமும், இந்தக் குளத்தின் கீழான விவசாய அமைப்புகளும் வலியுறுத்தின.
அக்கராயக் குளத்தின் கீழ் சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுக்கு குளத்தில் இருந்து நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. குளத்தின் வலதுகரை வாய்க்கால் மூலம் நீவில் பகுதியில் உள்ள ஆயிரத்து 200 ஏக்கர் வயல்களுக்கும் நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது.
இரணைமடுக்குளத்தின் கீழான பெரும்போகச் செய்கை வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய நீர்ப்பாசனக் குளங்களில் இருந்து மிகுந்த திட்டமிடல்களுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் விநியோகம் மேற்கொண்டுள்ளது. (ந-35)



# பட்டச் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்.
ஜன.23
யாழ். பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது.
நிகழ்வுக்கு உரித்தான பட்டதாரிகளுக்கான பட்ட அங்கிகள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் வழங்கப்பட உள்ளது என நிலையத்தின் பணிப்பாளர் அறிவித்தார். (ந-ரி)



# தும்பிக்கையுடன் மாங்கனி

கிளிநொச்சி, ஜன.23
உடையார்கட்டுக் குரவில் மாங்கனிப் பிள்ளையார் ஆலயத்தில் நான்காவது வருடமாகவும் தும்பிக்கையுடன் கூடிய மாங்கனி கிடைத்துள்ளது என்று ஆலயக் குருக்கள் தெரிவித்தார்.
மாங்கனிப் பிள்ளையார் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குரவில் கிராமத்தில் உள்ளது. 2013ஆம் ஆண்டு முதல் பிள்ளையார் கதை இடம்பெறும் காலப்பகுதிக்குள் இவ்வாறான நிகழ்வுகள் நடக்கின்றன என்று ஆலயக் குருக்களான சோலநாதர் சர்மா கூறினார்.
2013ஆம் ஆண்டு தும்பிக்கையுடனான மாங்கனியும், 2014ஆம் ஆண்டு தும்பிக்கையுடனான தேங்காயும், 2015, 2016ஆம் ஆண்டுகளில் தும்பிக்கையுடனான மாங்கனிகளும் ஆலய முன்றிலில் உள்ள மரங்களில் இருந்து கிடைத்தன என்றும் அவர் தெரிவித்தார். ஷ(ந-6)

# போதைப் பாவனையை ஒழிக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## யாழ். மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23
போதைப் பொருள்கள் எந்தப் பிரதேசங்கள் ஊடாகக் கடத்தப்படுகின்றனவோ, அந்தப் பிரதேசங்களில் வாழும் இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாகின்றனர். யாழ்.மாவட்டத்தின் ஊடாகக் கடத்தப்படுகின்ற கஞ்சா போன்ற போதைப் பொருள்களுக்கு இங்குள்ள இளைஞர்கள் அடிமையாகி வருகின்றனர்.
இவ்வாறு யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் நா.சோதிநாதன் தெரிவித்தார்.
றோட்டறிக் கழகமும், லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய போதைப் பொருள் ஒழிப்பும், விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கல்வியில் முதலிடத்தில் இருந்த எமது மாவட்டத்தைச் சாராயத்தில் முதலிடத்தில் உள்ள மாவட்டம் என்று அரசுத்தலைவர் குறிப்பிடும் அளவுக்கு மது மற்றும் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்துள்ளது. எமது மாவட்டத்தின் இளைய சமூகத்தைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள், நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வை மாணவர்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். மாணவர்களே நாட்டின் எதிர்காலமாக இருக்கப் போகின்றனர்.
அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன நாட்டை 2020ஆம் ஆண்டு போதையற்ற நாடாக மாற்ற வேண்டும் என்று போதைப் பொருள் பாவனைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.
மதுபான சாலைகளை மூடுவதால் போதையற்ற சமூகத்தை உருவாக்க முடியாது. கசிப்பு காய்ச்சும் சம்பவங்களே அதிகரிக்கும்.
போதைப்பொருளை ஒழிக்கவேண்டுமானால் நாங்கள் எங்களின் மனங்களில் போதையை ஒதுக்கி அது தொடர்பான முழுமையான விழிப்புணர்வைப் பெற வேண்டும். நாங்கள் எங்களை முதலில் திருத்தி நடத்த வேண்டும்.
இவ்வாறு ஒவ்வொருவரும் தாங்களாகத் திருந்துவார்களாயின் போதையை முழுமையாக ஒழிக்க முடியும் - என்றார்.
நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், றோட்டறிக் கழக உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-8)

## ஊறணி இறங்குதுறையை விடுவிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.23

ஊறணி மீன்பிடி இறங்குதுறையை விடுவித்து அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும். இவ்வாறு வலி. வடக்கு மீள்குடியேற்றச் சங்கக் குழுத் தலைவர் குணபாலசிங்கம் தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்ட செயலரைச் சந்தித்துக் மனுக் கையளித்தனர்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டதாவது:

ஊறணியில் மீன்பிடி இறங்கு துறைக்காக ஓர் இடம் விடுவிக்கப்பட்டபோதும் அது முன்னர் இருந்த 4 இறங்குதுறைகளுக்குள் இல்லாத இடமாகும். ஊறணி மீனவர்களின் பயன்பாட்டுக்கும் அது அனுமதிக்கப்படவில்லை.

ஊறணி மீனவர்கள் இன்று வரை தொழில் புரிய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்வதற்கு வாழ்வதாரம் பிரச்சினையாகவுள்ளது. மாவட்டச் செயலர் உரிய தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு ஊறணி மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும்.

ஊறணியில் கடந்த 14ஆம் திகதி விடுவிக்கப்பட்ட சுமார் 2 ஏக்கர் நிலப் பரப்பு நல்லிணக்க புரத்தில் வாழ்பவர்களுக்கே வழங்கப்பட்டதால், ஊறணியை பூர்வீகமாக கொண்ட மீனவர்களும் இணைந்து தொழில் புரிவதற்கு இடவசதி போதுமானமாகவே இல்லை. ஊறணி மீனவர்களுக்கான இறங்கு துறையைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும்- என்றுள்ளது.

ஊறணியை சொந்த இடமாகக் கொண்ட மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு அவர்களின் நிலமை தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் படகுத் தரிப்பிடம் உள்ளிட்ட பயன்பாட்டிற்கு போதிய இடவசதிகள் இல்லை எனக் கூறுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஊறணியைச் சேர்ந்த மீனவர்களின் கோரிக்கையின் நியாயப்பாடுகள் தொடர்பில் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்தப்படும்- என்று மாவட்டச் செயலர் அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (ந-10)

# உறவுகளை தொலைத்தோரின் உணர்வுகளை அவமதிக்க கூடாது

### வடக்கு சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் தெரிவிப்பு



வவுனியா, ஜன.23

உறவுகளைத் தொலைத்துவிட்டு கனத்த மனதுடன், நம்பிக்கையுடன் தேடி அலையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தக் கூடாது. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சீலன் பத்மநாதன் தெரிவித்தார்.

வவுனியா பூந்தோட்டத்தில் காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் அமைக்கப்பட்ட ஆறுமுக நாவலர் சிலை திறப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் சுகாதார அமைச்சரின் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வைத்து ஆர்ப்பாட்டங்களை மட்டுமே செய்து வருபவர்கள் மத்தியில் இவ்வாறான மனதை ஆற்றுப்படுத்தும் செயற்திட்டங்கள் செய்வது வரவேற் கப்படவேண்டியதாகும்.

தங்கள் உறவுகளை ஏன் தொலைத்தோம் என்ற காரணம் தெரியாமலே காணாமல் ஆக்கப்பட்ட நாளிலி ருந்து மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் தினமும் தேடி வருகின்றார்கள். இதுவரை காலமும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில் அண்மைக்காலமாக அதன் திசை மாற்றப்பட்டுள்ளமை மனவருத்தத்தை தருகின்றது. அண்மையில் எதிர் கட்சித் தலைவரும் த.தே.கூட்டமைப்பித் தலைவருமான இரா. சம்பந்தனின் உருவப்படம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது வீதியில் இழுத்துச்செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக வவுனியா மாவட்ட இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும் சுகாதார அமைச்சருமாகிய வைத்தியர் சத்தியலிங்கத்துகு எதிராக ஆர்ப்பாட்டமொன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரால் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் விசாரித்தபோது தங்களுக்குகாரணம்கூறாமல்எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றுக்கு சிலர் அழைத்தனர் என்றும், பின்பே தங்களிடம் எதிர்ப்பு சுலோகங்கள் அடங்கிய பதாதைகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.உங்களின்மனஉளைச்சல்களை, உங்களின் இயலாமையைசிலர்தமதுசுயநலநோக்கங்களுக்கு தவறாக பயன்படுத்துகின்றார்கள். அவர்கள்தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும்.-என்றார். (ந-21)

## இலவசப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.23

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சான்றிதழைப் பெறுவதற்கான இலவசப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் சி ஆங்கிலம் சி உள்ளடங்க 6 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும் அல்லது கணிதம் எஸ், ஆங்கிலம் எஸ் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். 25 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட அலுவலக இல. 44 சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்




### காணியை விடுவிக்குமாறு

## வயோதிபப் பெண் மிரட்டுகிறார் இராணுவத்தினர் முறைப்பாடு

கிளிநொச்சி, ஜன.23

தனியார் காணியில் அமைக்கப்பட்ட இராணுவ முகாமை அகற்றாது விட்டால் முகாமுக்குள் புகுந்து தற்காலிக வீடு அமைப்பேன் எனக்கூறிய வயோதிபப் பெண்ணுக்கு எதிராக இராணுவத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

வயோதிப் பெண் முகாமுக்குள் புகுந்து உயிரை மாய்ந்துக் கொள்ளப் போவதாக அச்சுறுத்தினார் என்று இராணுவத்தினர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள முகமாலையில் ஒருபகுதி கடந்த டிசெம்பர் மாதம் மக்களின் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டது. ஏ-9 வீதிக்கு அருகில் இருக்கும் 9 குடும்பங்களுக்குச் சொந்தமான காணியில் மட்டும் இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் பிரிவினர் நிலைகொண்டிருந்தனர். மிதிவெடி அகற்றும் பணிகள் முடியும்வரை தற்காலிக வீடுகளை அமைப்பதற்கு தேவையான இடத்தை ஒதுக்கித் தர வேண்டும் என்று அந்த 9 குடும்பங்களும் இராணுவத்தினரைக் கோரியிருந்தனர். உயரதிகாரிகளும் மக்கள் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கேற்ற வகையில் காணிகள் ஒதுக்கித் தரப்படும் என்று தெரிவித்தனர்.

பின்னர் இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இராணுவத்தினர் காணிகளை தருவதற்கு மறுத்தனர். தமது வேலிகளை மேலும் விரிவாக்கம் செய்தனர்.

மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவித் திட்டங்களை தொண்டு நிறுவனம் ஒன்று தற்போது ஆரம்பித்துள்ளது. காணி விடுவிக்கப்படாத காரணத்தால் உதவித் திட்டங்கள் கைநழுவிப்போய்விடும் என்ற ஆதங்கத்தில் குறித்த 9 குடும்பங்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண் வீட்டை அமைப்பதற்கு காணி ஒதுக்கித் தராவிட்டால் இராணுவ முகாமுக்குள் புகுந்து வீடமைப்பேன் என இராணுவத்தை எச்சரித்துள்ளார்.

அதை விளங்கிக்கொள்ளாத இராணுவத்தினர் அவர்உயிரைமாய்க்கப்போவதாக அச்சுறுத்துகின்றார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாடு தொடர்பில் விசாரிப்பதற்காக வயோதிப் பெண் பளை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்ட போதிலும் இராணுவத்தினின் தரப்பிலிருந்து எவரும் வராததால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ந-21,6)

## கொக்கட்டிச்சோலைப் படுகொலை 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

மட்டக்களப்பு, ஜன.23

மட்டக்களப்பு - படுவான்கரை, கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் 1987ஆம் ஆண்டு இடம்பெற்றபடுகொலைகளின் 30ஆம் ஆண்டுநினைவு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு அருகில் இடம்பெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிப்பளைக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வுக்கு நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினர் பா.அரியநேத்திரன் தலைமை தாங்குவார்.


1987 ஜனவரி 28ஆம் திகதி இறால் பண்ணையில் தொழில் புரிந்த 23 பேரும், அன்றைய தினத்திலிருந்து 3 நாள்கள் இடம்பெற்ற சிறப்பு அதிரடிப்படையின் நடவடிக்கையில் மேலும் சுமார் 63க்கு மேற்பட்ட சிவிலியன்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் படுகொலைக்குள்ளானவர்களின் உறவினர்கள் கலந்துகொள்வர் என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ற-ய-46)



மஸ்கெலியா - நல்லதண்ணிப் பிரதேசத்தில் சிவனொளிபாதமலையை அண்டிய அரச காணிகள் மற்றும் பொது இடங்களை வெளியாள்கள் ஆக்கிரமிப்பதைக் கண்டித்து பிரதேசவாசிகள் நேற்று நல்லதண்ணி பொலிஸ் நிலையத்துக்கு அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். காணி ஆக்கிரமிப்புக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவர் உடந்தையாக இருக்கின்றார் என்றும் அவர்கள் குற்றஞ் சாட்டினர். (ற-ய-43)

## கிழக்குப் பல்கலையிலிருந்து வெளியேற மாணவர் மறுப்பு



செங்கலடி, ஜன.23

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அனைத்து பீட மாணவர்களையும் வளாகத்தை விட்டு வெளியேறுவதற்கு வழங்கப்பட்ட 24 மணி நேர காலக்கேடு முடிவடைந்த பின்பும் மாணவர்கள் தொடர்ந்தும் வந்தாறுமூலையிலுள்ள பேரவைக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தங்களுக்கு விடுதி வசதி வழங்கக் கோரி வந்தாறு மூலை வளாக முன்றலில் இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்கள ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களது கோரிக்கைக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தால் உரியதீர்வு வழங்கப்படாததையடுத்து மாணவர்கள் பல்கலைக்கழக பேரவைக் கட்டடத்தில் தங்கியிருந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வந்தாறு மூலை வளாகம் மற்றும் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகம் ஆகியன நேற்றுமுன்தினம் காலை 8 மணியிலிருந்து மாணவர் களுக்கு உட்புக விலக்களிக்கப்பட்ட இடங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளன என்று கிழக்குப் பல்கலைக்கழக பேரவையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு மாணவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மாணவர்கள் வந்தாறு மூலையிலுள்ள பேரவைக் கட்டடத்தில் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளனர். தங்களது கோரிக்கைகள் தொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகத்திடம் பல முறை தெரியப்படுத்தியதாகவும், அவர்கள் தமது கோரிக்கைளை நிவர்த்தி செய்யும் வரை போராட்டம் தொடரும் எனவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸார் மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர் என்று மாணவர்கள் தெரிவித்தனர். (ற-ய-47,46)

# வடக்கு, கிழக்கு இணைப்பில் நிதானம் தேவை

### கிழக்கு மாகாண அமைச்சர் துரைராசசிங்கம் தெரிவிப்பு

செங்கலடி, ஜன.23

வடக்கு, கிழக்குமாகாணங்கள் இணைப்பு என்பது பேசிவிட்டு முடிக்கின்ற விடயம் அல்ல. இந்த விடயம் தொடர்பாக நிதானமாகவும் பக்குவமாகவும் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

செங்கலடி அக்னி இசைக்குழுவின் 17ஆவது ஆண்டு நிறைவு மற்றும் பொங்கல் விழாவில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

தமிழர்களாகிய நாம் காலாகாலமாக ஏமாற்றப்பட்டவர்களாக இருக்கின்றோம். எமது மக்களுக்கான நிரந்தத் தீர்வு கிடைக்கவேண்டுமாக இருந்தால் நாட்டின் முக்கிய கட்சிகள் இரண்டும் ஒன்றிணைய வேண்டும். உலக நாடுகள் எமது பிரச்சினையின் பக்கம் திரும்ப வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒரே தலைமையின் கீழ் இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வது யாதெனில், எமது செயற்பாடுகள் மிகவும் பக்குவமானதாகவும், நிதானமானதாகவும் இருக்க வேண்டும் என்பதே. ஆனால் இதைச் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் இருக்கின்றது.

ஒரு இணக்கப்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பன்னாடும் அதை அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அதை எந்த இடத்தில் முறித்துக்கொள்ள வேண்டும், எதுவரைக்கும் தொடர்ந்து செல்லவேண்டும் என்பதில் ஒரு கடப்பாடு இருக்கின்றது. இதனை எடுத்த கணமே முறித்துக் கொண்டு செல்லமுடியாது.

இந்த விடயங்கள் பன்னாட்டின் அனுசரணையுடன் தான் நடைபெறுகின்றன. இதற்குமேல் நகர்த்த முடியாது என்பதை பன்னாடும் உணரும் வகையில் எமது செயற்பாடுகள் இருந்திட வேண்டும்.

வடக்குகிழக்குமாகாணங்கள் இணைப்பு என்பது பேசிவிட்டு முடிக்கின்ற விடயமல்ல. இவ்விடயங்கள் தொடர்பில் பலவாறான செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது - என்றார். (ற-ய-47)

## கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைய 25 பேர் விருப்பம்

### ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகின்றார்

கொழும்பு, ஜன.23

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 25 பேர் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பாக பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.



இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பேச்சு வெற்றிகரமான முறையில் நகர்ந்து செல்கின்றன. அவர்கள் கூடிய விரைவில் எதிர்க்கட்சியுடன் இணைய எதிர்பார்த்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி, மகிந்த ராஜபக்சஅரசில் இணைந்து கொண்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அந்த அரசில் வர்த்தகத் துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

அமைச்சராகப்பதவிவகித்த காலத்தில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்று ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் வழக்கு விசாரணைகளும் நடைபெறுகின்றன. (ற)

## அரசியலை விட்டு பிக்குகள் விலகிக் கொள்ள வேண்டும்

### அமைச்சர் பாலித கூறுகின்றார்

கொழும்பு, 23

பிக்குக்கள் அரசியலில் இருந்து விலக வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார.



ஆனமடுவவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறந்த, மதிப்புள்ள பிக்குக்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். இறுதியில் அவர்கள் தமது நற்பெயரைக் கெடுத்துக் கொண்டே அரசியலில் இருந்து வெளியேறினர்.

பிக்குக்கள் தமது கௌரவத்தைப் பேண அரசியலில் ஈடுபடாது சமயத் தொண்டாற்ற வேண்டும். அதுதான் அவர்களுக்கு அழகு. அவர்கள் சமயப் பணியிலேயே சிறந்தவர்களாக விளங்க முடியும்- என்றார். (ற-4)

## குளவிக் கூட்டை அகற்றுமாறு மலையகத்தில் போராட்டம்

நுவரெலியா, ஜன.23

மலையக தேயிலைத் தோட்டங்களில் காணப்படும் குளவிக் கூடுகளை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.



கொட்டகலை - ஸ்டோனிகிளிப் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது பணிகளைப் புறக்கணித்து தோட்ட நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வரும் தொழிலாளர்களின் நலனில் தோட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என்பதையும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஸ்டோனிகிளிப் தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

அதேபோன்று நேற்றுமுன்தினமும் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தேயிலை மலைகளில் காணப்படும் குளவிக் கூடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத பட்சத்திலேயே தொழிலாளர்கள் நேற்றுக்காலை பணிப்புறக்கணிப்புபோராட்டத்தில் ஈடுப்பட்டனர். (ற-ய-43)

## மருத்துவப் பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் சிக்கல்



கொழும்பு,ஜன.23
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி மருத்துவ சேவை பிரிவு மாணவர்களுக்கு கண்டி அல்லது பேராதனை வைத்திய சாலை களில் மருத்துவ பயிற்சிகள் வழங்கப்படாமையினால், அந்த மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக உதவி மருத்துவ சேவை கூட்டு அமைப்புத் தெரிவித்துள்ளது.
"மருத்துவப் பயிற்சிக்காக மாணவர்களுக்குத் தேவையற்ற பணச் செலவு மற்றும் காலச் செலவு ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் தற்போது மருத்துவப் பயிற்சிக்காக குருணாகல் போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அந்தப் பயிற்சிக்காக வரையறுக்கப்பட்ட சில குழுவினருக்கே சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது தொடர் பில் சரியான தீர்வொன்று வழங்கா விட்டால் எதிர்காலத் தில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்" என்று அதன் செயலாளர் தர்மகீர்த்தி ஏபா தெரிவித்துள்ளார். (ஐ)

## அரசியல் பழிவாங்கல்கள் கூட்டு அரசிலும் தொடர்கின்றன

### சுதந்திரக் கட்சி அமைப்பாளர் புலம்பல்


பொத்துவில்,ஜன.23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள், கூட்டு அரசிலும் தொடர்ந்து அரசியல் பழிவாங்கல் களுக்கு உள்வாங்கப்படுவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் ஏ.எம். அப்துல் மஜீட் தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் தேர்தல் தொகுதியில் நியமிக்கப்பட்டுள்ள பிரதேச அமைப்பாளர்கள் அறிமுக நிகழ்வும், எதிர்கால அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு, அக்கரைப்பற்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சுற்றுலா விடுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்க ளான அரச உத்தியோகத்தர்கள், தாபன விதிக் கோவைக்கு முரணாக இடமாற்றம் செய்யப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.
அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக, பொத்துவில் தேர்தல் தொகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பிரதேச செயலக ரீதியாக அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு, அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் என்று தெரிவித்துக் கொண்டு போலி அமைப்பாளர்கள் ஒரு சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போலி அமைப்பாளர்கள் மீது மக்கள் ஏமாற வேண்டாம்.
அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன வின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி இப்பிரதேசத்தின் உத்வேகத்துடன் செயற்படுகின்றது. எதிர்காலத்தில் இப்பிராந்தியங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும்.
தற்போது எமது பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகளை மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைத்துள்ளோம். அவர் அம்பாறை மாவட்டத்துக்கு பயணம் செய்து பல அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஒரு வார காலத்துக்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான துமிந்த திஸாநாயக்கா, அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இணைப்புச் செயலாளரும், முன்னாள் பிரதி ய மைச்சருமான சாந்த பண்டார உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.
இந்த மாநாட்டுக்கு பொத்துவில், ஆலையடிவேம்பு, திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் நிந்தவூர் மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொள்வர்.
இப் பிராந்தியத்தின் அபி விருத்தி மட்டுமல்லாது இளையோரின் தொழில் வாய்ப்புத் தொடர்பாகவும் இம் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அக்கரைப்பற்று பிரதேச அமைப்பாளராக ஐ.எச்.ஏ. வஹாப், அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளராக கலாநிதி வை.எல். நிஸார் ஹைதர், நிந்தவூர் பிரதேச அமைப்பாளராக வை.எல். சுலைமாலெப்பை, காரைதீவு பிரதேச அமைப்பாளராக ஏ.எம். ஜாகிர் ஆகியோர் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க வினால் நியமிக்கப்பட்டுள்ளனர். - என்றார். (ஐ)

## சூரிய சக்தி மின் உற்பத்தி வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு,ஜன.23
சூரிய சக்தி மின் உற்பத்தி வேலைத்திட்டம் அம்பாந்தோட்டை, ரணமயூர பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
"அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடிந்தமையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். மோதுங்கள் வறட்சியான நிலைமை ஏற்பட்டாலும் இந்த திட்டத்தின் ஊடாக மின்சாரத்தை தொடர்ந்து வழங்க முடியும்" என்று மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
இந்தத் திட்டத்தை இலங்கை நிலைபேறு வலு அதிகார சபை, தனியார் துறையினருடன் இணைந்து முன்னெடுக்கின்றது.
இலங்கை நிலைபேறு வலு அதிகாரசபை, தனியார் துறையினரின் பங்களிப்புடன் 10 மெகாவோல்ட் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் அம்பாந்தோட்டையில் அமைக் கப்பட உள்ளது.(ஐ)

## வன வளங்களைப் பாதுகாப்பது அனைவரதும் தார்மீகப் பொறுப்பு

### மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு,ஜன,23
"வன வளங்களைப் பாதுகாக்கக் கூடியவாறு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும்.
வன வளங்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப் படும்.
நுவரெலியா, பதுளை, மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இயற்கை வளங்கள் நாசமாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது" -இவ்வாறு அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தலவாக்கலை, சென்கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் 25 வருடகால ஆய்வுகளின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்ட புதிய ரகத் தேயிலை அறிமுகமும் குறுந்தகவல் மற்றும் தகவல் அறியும் நிலையமும், அரசுத் தலைவர் மைத்திரிபால சிறி சேனவினால் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
இதன்போது கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் தேயிலை, மரக்கறி, பழ வகைகள் ஆகிய உற்பத்திகளினால் தேசிய ஆதாயத்தில் வருமானம் கிடைக்கின்றது.
அதில் தேயிலை முதலிடம் பெற்றுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் மந்தமான போசாக்கில் இங்குள்ள மக்கள் பெரிய பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருவதாக அறிவிக்கப்படுகின்ற நிலையில், இந்த மாவட்டத்தில் மந்தமான போசாக்கிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
நாட்டில் மந்தமான போசாக்கில் நுவரெலியா மாவட்டம் முதலிடத்திலும், இதனையடுத்து மொனராகலை மாவட்டமும் உள்ளது. அதே வேளையில் நுவரெலியா மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
.அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இன்னும் பல வகைகளில் முற்றாகப் பாதிக்கப்பட்டு வருகின்ற இந்த மாவட்டத்தின் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் அவதானங்கள் செலுத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படும் அளவுக்கு அபிவிருத்திப் பணிகளைச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.- என்றார். (ஐ)

## ஓட்டோ மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

திருமலை,ஜன.23
திருகோணமலை பாலையூற்று பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிமீது நேற்று முன்தினம் மாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
திருகோணமலை, காமினி திஸாநாயக்க மாவத்தையைச் சேர்ந்தவரின் முச்சக்கரவண்டியே இவ்வாறு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.
குறித்த சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும், இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## மட்டக்களப்பில் போதகர்கள் ஒன்றிய அலுவலகம் திறப்பு

மட்டக்களப்பு,ஜன.23
மட்டக்களப்பு மாவட்டத்தில் போதகர்கள் ஒன்றியத்தின் அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
இந்த அலுவலகம் எம்.சி.ஏ.நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்ட போதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் ரி.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ சபைகளின் போதகர்கள் கலந்துகொண்டனர்.
கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சி உட்பட பல்வேறு சமூக செயற்பாடுகளைக் கொண்டதாக இந்த அலுவலகம் இயங்கவுள்ளது.
மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளினையும் ஒன்றி ணைத்ததாக இந்த மாவட்ட போதகர்கள் ஒன்றியம் உருவாக்கப்பட்டு, கடந்த 15 வருடகாலமாக செயற்பட்டுவருகின்றது. (ஐ)

## நீரில் மூழ்கிய மூவரைக் காணவில்லை

கொழும்பு,ஜன.23
கம்பளையிலுள்ள துன்கிந்த மகாவலி ஆற்றில், நேற்று முன்தினம் நீராடிக்கொண்டிருந்த ஐவரில், மூவர் காணாமற்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
ஐவரில் இருவர் மாத்திரம், ஆற்றிலிருந்து கரைக்குத் தப்பி வந்துள்ளதாகவும், 13 வயதுடைய மூவரே இவ்வாறு காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து பிரதேச மக்களின் உதவியுடன், காணாமற் போன வர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு வரு கின்றனர். (ஐ)

# வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லை நிர்ணயத்தில் சர்ச்சை

## உள்ளூராட்சிகள் சபை அமைச்சரிடம் தமிழ்க் கூட்டமைப்பு முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.23

வவுனியா வடக்கு உள்ளூராட்சி சபையின் செயற்பாட்டுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் விதமாக சபையின் எல்லைக்குள் வாழாதவர்களை இணைத்தமை தொடர்பில் கொழும்பு அரசின் மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் மற்றும் பைசல் முஸ்தபாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முறையிட்டனர். வவுனியா , கிளிநொச்சி , யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு அமைச்சர் இரு நாள் பயணம் மேற்கொண்டிருந் தார். அதன்போதே இவ்வாறு முறை யிடப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபை 14 வட்டாரங்களைக் கொண்டதாக பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3 வட்டாரங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தைக் கொண்டதாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் பகுதியிலுள்ள இந்த 3 வட்டராங்களிலும் சிங்கள மக்கள் மட்டுமே வாழ்கின்றனர். எதிர் காலத்தில் சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் இந்த எல்லை நிர்ணயம் அமைத்துள்ளது. இந்தப் பகுதிகளை உள்ளடக்கி வெலிஓயாவுக்கு ஓர் தனியான பிரதேச சபையோ அல்லது இந்த மூன்று வட்டாரங்களையும் வவுனியா தெற்கு பிரதேச சபையுடனோ இணைக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு தனியான சபையை உருவாக்க வேண்டும் என்றே பரிந்துரைக்கப்பட்டது. அங்கு வாழும் மக்களும் வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைந்து செயற்படுவதை விடவும் தனியான பிரதேச சபையாக இயங்குவதையே விரும்புகின்றனர். இது தொடர்பாக விரைவில் சுமூகமான ஒரு தீர்வு வழங் கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் , மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோருடன் வட மாகாண சுகாதார அமைச்சரின் செயலாளர் கூட்டாக இணைந்து- கோரிக்கையை முன்வைத்தனர். (ற-101)

# மருத்துவச் சபை ஒப்புதல் இன்றி இயங்குகிறது மாலபே கல்லூரி

## அரச மருத்துவர் சங்கம் மைத்திரிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 23

மருத்துவக் கல்லூரி ஒன்று மருத்துவ சபையின் ஒப்புதல் இன்றி இயங்க முடியாது. இந்த அடிப்படைக் கொள்கையை மீறி சயிட்டம் மாலபே நிறுவனம் தன்னை ஒருமருத்துவக்கல்லூரிஎன்று அடையாளப்படுத்தி மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சி வழங்குகின்றது.

இவ்வாறு அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. சயிட்டம்மாலபேஎன்றுஅழைக்கப்படும் தனியார் மருத்துவக் கல்லூரியில் இருந்து வெளியேறிய மாணவியால் தாக்கல்செய்யப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குத் தொடர்பாக அரச தலைவர் மைத் திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

"நமது நாட்டில் மருத்துவர் ஒருவராகப் பணியாற்ற பதிவு செய்ய வேண்டிய இரண்டு அத்தியாவசிய தேவைகளை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்."

எந்த அரசுக்கும், மருத்துவ துறைப் பயிற்சி குறித்தும் அவர்களது சேவைகள் குறித்தும் நோயாளர்களின் உயிர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய கடமையுள்ளது. அதை உறுதி செய்வதற்கு மருத்துவ சபைகள் எல்லா நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளன. மருத்துவக் கல்லூரி ஒன்று மருத்துவ சபையின் ஒப்புதல் இன்றி இயங்க முடியாது. இந்த அடிப்படைக் கொள்கையை மீறியே சயிட்டம் மாலபே நிறுவனம் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்குகின்றது. பல்கலைக்கழகங்களின் சட்டப் பிரகாரம், பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றுக்கு பட்டம் வழங்கும் அந்தஸ்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்படும். இந்த மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்துக்கு எந்த ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பட்டம் வழங்கும் அந்தஸ்து வழங்கப்படவில்லை. மனுதாரர் ஒரு நிறுவனம் பட்டம் வழங்கும் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளத் தடையாக இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய வழிமுறைகள் அடங்கிய உயர் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட வர்த்தமானி யையும் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டகடிதம்ஒன்றையும்நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இந்த நிறுவனத்துக்கு பட்டம் வழங்கும் அந்தஸ்த்தை இதுவரை எந்த ஒரு வர்த்தமானிஅறிவிப்பும்வழங்கப்படவில்லை. அதை மனுதாரர் தானாகவே ஒப்புக்கொள்கிறார். சயிட்டம் மாலபே நிறுவனம் இப்போது வரை பட்டம் வழங்கும் அந்தஸ்தைப்பெற்றுகொள்ளவில்லை. இந்த உண்மைகளை சரியாகவும் தெளிவாகவும் நீதிமன்றத்தில் வழங்கப்படுகிறது என்றால், மேலே குறிப்பிட்ட இரண்டு அத்தியாவசியஅடிப்படைத்தேவைகளை முழுமைசெய்யாதநிலையில் மருத்துவராகப் பணியாற்ற மனுதாரியின் முறையீடு பயனற்ற முயற்சியாகும்.

சட்டமா அதிபர், இரு உயர் கல்வி மற்றும் சுகாதார அமைச்சர்கள் மனுதாரியின் கோரிக்கையை அங்கீகரித்தால், மருத்துவ சபையின் அங்கீகாரம் இல்லாத ஒரு நிறுவனத்தினது மருத்துவர் ஆக அவரால் முடியும். இந்த முயற்சி அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான செயல் என்று மருத்துவக் கல்விக்கு அதிகாரமுள்ள அனைத்து மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் சரியான முறையில் சுட்டிக்காட்டியுள்ளனர். பல்கலைக்கழகம் தனது இருண்ட காலம் ஒன்றை அனுபவிக்கும் நாள் மிக தொலைவில் இல்லை. இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமையிலிருந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை பாதுகாக்கவும் எங்கள் நோயாளிகள் உயிர்களை பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டை காட்டும் ஒரு தலைவர் நீங்கள் என்பதால் உங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்.])

உயர் கல்வி மற்றும் சுகாதார அமைச்சர்கள் இருவரும் சட்டமா அதிபரும் சேர்ந்து நீதிமன்றத்தில் தெளிவாகவும், சரியாகவும் மேலே குறிப்பிட்ட உண்மைகளை முன் வைத்தால் அது மேலும்பயனுள்ளதாகஅமையும். நாங்கள் எங்களுக்கு இந்த பிரச்சினை பற்றி விரைவில் கலந்துரையாட வாய்ப்பு வழங்க வேண்டும். -என்றுள்ளது. (ற-10)

# தென்மராட்சியில் 3 ஆயிரம் பேர் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பம்

தென்மராட்சி, ஜன.23


தென்மராட்சியில் 3 ஆயிரம் பேர் வரையில் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் நிரந்தரமாக வசிக்கக்கூடிய கல் வீடுகளை வழங்கவேண்டும். பொருத்து வீடுகள் அமைப்பதை நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உட்படப் பல தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் பணிப்பின் பேரில் மீள்குடியேற்ற அமைச்சால் பொருத்து வீட்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்துக்கென யாழ். மாவட்டச் செயலகத்தால் அனுப்பப்பட்ட ஆயிரம் படிவங்கள் ஒரேநாளில் பிரதேச செயலகத்தில் வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. சில நாள்களின் பின்னர் மேலும் 2ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டு அவையும் விநியோகிக்கப்பட்டன.

இடைப்பட்ட காலத்தில் அங்குள்ள கடையொன்றில் ஆயிரத்துக்கு மேற்பட்ட படிவங்கள் பிரதி செய்து பொதுமக்களுக்கு விநியோகிக் கப்பட்டன.

பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்த விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் நண்பகல் வரை 3 ஆயிரத்து 100 படிவங்கள் கிராம அலுவலரின் பரிந்துரையுடன் பொதுமக்களால்பிரதேசசெயலகத்தில்ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.(ற-9)



வடமாகாண உள சமூகவள நிலையம் மற்றும் உளமகிழ்வூட்டும் இல்லத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் தினத்தன்று புத்தூர் - பெரிய பொக்கணை கிராமத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய இளையோர் ஒன்றியத்தின் அனுசரணையில் நடைபெற்ற நிகழ்வில் நா.கு. மகிழ்ச்சிகரன் என்பவரால் உருவாக்கப்பட்ட மாற்றுவழி என்ற குறும்படமும் காண்பிக்கப்பட்டது. (ற-ய)

# ஒப்பந்தகாரர் தெரிவு மிகப் பெரும் சவால்

## கிளி. மேலதிக செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.23

கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களை தெரிவுசெய்வதில் மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டோம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் சத்தியசீலன் தெரிவித்தார்.பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பொங்கல் விழா நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போசாக்கு மட்டத்தில் எமது மாவட்டம் இறுதி நிலையில் காணப்படுகின்றது. ஆனாலும் பச்சிலைப்பள்ளி போசாக்கு மட்டத்தில் சிறந்த நிலையில் காணப்படுகின்றது. அதற்கு அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடு முக்கியமானது. இங்குள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் வழங்கும் போசாக்கு உணவு முக்கியமானது.

இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் வேறுபாடுகள் இன்றி செயற்படுவதாலேயே அபிவிருத்திச் சங்கம் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைய முடிந்துள்ளது. வெளிநாட்டில் உள்ளவர்கள் உங்களுக்கு ஆதரவு வழங்குவார்கள். நீங்களும் முயற்சி செய்ய வேண்டும். அதன்மூலம் இந்தச் சங்கத்தின் மூலம் வழங்கப்படும் உதவிகளை இன்னும் அதிகரித்துக்கொள்ள முடியம்.

எமது மாவட்டத்துக்கு கடந்த வருடம் பல திட்டங்கள் வந்தன. அவை பிரதேச செயலகங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டன. நாங்கள் அவற்றுக்கான ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதில் பெரும் சவாலை எதிர்கொண்டோம்.

நீங்கள் பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருப்பதால், இவ்வாறான திட்டங்களை உங்கள் பகுதிகளில் உள்ள பொறியிலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தரை வைத்து நிறைவேற்றி அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை இந்த பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்- என்றார்.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பி.ஜெயராணி, பச்சிலைப்பள்ளி பிரதே சபை செயலாளர் அனுசியா, பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டாரா, கிராம சேவகர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பொதுமக் கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-21,6)

# கசிப்பு விற்பனை சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பனிக்கயடி பகுதியில் கசிப்பு விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்று பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தெரிவித்தார்.


நேற்று முன்தினம் இரவு பளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தலைமையில் சுபதர்சன், ஜனார்த்தனன், சில்வா ஆகியோர் வீடொன்றைச் சோதனையிட்டனர். விற்பனைக்குத் தயாரான நிலையில் இருந்த 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 26 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பளை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தெரி வித்தார். (ற-6)

# அரசியல் நிலையில் சிறுபான்மையினர் விழிப்பாகவேண்டும்

## அமீர்அலி கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜன.23
ஒரே காலகட்டத்தில் ஒரே கட்சி தொடர்ச்சியாக அதிகாரம் செலுத்த முடியாது. இந்த நாட்டின் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த, இறக்கும் வரையில் தான் அரச தலைவ ராகவே இருப்பேன் என்று கனவு கண்டார். அவ்வாறான அரசியல் தோற்றுப்போன சரித்திரத்தைச் சிறுபான்மைச் சமூகம் அவர்களுக்குச் செய்து காட்டியது.



அவருக்கு அவ் வாறான படிப்பினை யைக் காட்டிய நாங்கள் எமது அரசியல் நிலையை எவ்வாறு வைத்திருக்க வேண்டும் என்பதில் விழிப்பாக இருக்க வேண் டும்.
இவ்வாறு கிராமிய பொருளா தார பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முதலைக்குடாவில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் ஓய்வு மண்டபக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று 60 வருடங்களாகப் பேசியே வருகின்றோம். இரண்டு தலை முறைகளை இழந்து விட்டு, இன்னுமொரு தலை முறைக்கு அவற்றை வழங்கி விட்டுச் செல்லும் தலைவர்களாக நாங்கள் இருப்போமானால், முஸ்லிமாக இருந்தாலும் சரி தமிழர்களாக இருந்தாலும் சரி நல்ல கட்சியா கவும் இருக்க முடியாது நல்ல தலைவர்களாகவும் இருக்க முடியாது.
அவசர அவசரமாக தமிழ் அரசியல் தலைவர்களும், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் ஒன்றாக அமர்ந்து தங்களது பிரச்சினைகளை, சந்தேகங்களைத் தீர்க்கவில்லையானால் எதிர் காலத்தில் கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்படக்கூடிய அபாய எச்சரிக்கைகள் இன்று எழுந்துள்ளன.- என்றார். (ஐ)

# பௌத்த பிக்குகள் அரசியலுக்குள் வேண்டாம்

கொழும்பு,ஜன.23
நாடாளுமன்ற உறுப்பினர்களை விட முன்னிலையில் இருக்க வேண்டிய பௌத்த பிக்குமார் அரசியலுக்கு வந்து நாடாளு மன்ற உறுப்பினராக மட்டும் மாறுகிறார்கள் என்பதால், அப்படியான பிக்கு ஒருவர் எப்படி அரசியல்வாதிகளை விட முன்னிலையில் இருக்க முடியும் என்று ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.
இதனால், உயரிய மட்டத்தில் இருக்க வேண்டிய பௌத்த பிக்குமார் அரசியலுக்கு வராமல் இருப்பது மிகவும் முக்கியமானது எனவும் அவர் கூறியுள்ளார்.
ஆனமடுவ நகரில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
"பௌத்த பிக்குமார் அரசியலுக்கு வருவதானது சமூகத்தின் முன்னோக்கிய பய ணத்துக்குப் பாதிப்பை ஏற் படுத்தும். இந்தச் சீரற்ற நிலைமைக்கு இடமளிக்காத வகையில் பௌத்த பிக்குமாருக்கிடையில் வாத விவாதங்கள் ஏற்பட வேண்டும். இது காலத்தின் தேவை.
அத்துரலியே ரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக எடுத்த தீர்மானத்தை விட அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியிருந்தால், சிறப்பான சமூக செயற்பாட்டுக்கு வழியை ஏற்படுத்தியிருக்கும்" என்று அமைச்சர் பாலித ரங்கே பண்ராட தெரிவித்தார். (ஐ)

# அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறு அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடு

## அமைச்சர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியிடம் முறைப்பாடு

கொழும்பு,ஜன.23
2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பில், வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.
இது தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:
வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வீடமைப்பு அமைச்சுக்கு 600 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் அந்தத் தொகை அமைச்சுக்கு அறிவிக்காமலேயே குறைக்கப்பட்டது.
600 கோடி ரூபா பணத்தில் 200 கோடி ரூபா மட்டுமே எஞ்சியுள்ளது. 400 கோடி ரூபா வேறு அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 200 கோடி ரூபா வடக்கு அபிவிருத்தி அமைச்சுக்கும், 200 கோடி ரூபா தோட்ட உட்கட்டமைப்பு அமைச் சுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.
வீடமைப்பு அமைச்சுக்கு எவ்வித அறிவிப்பும் வழங்காது அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வேறு அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அரச தலைவர் மைத்திரிபாலா சிறிசேன உறுதியளித்துள்ளார்.
மேலும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் நாடு திரும்பியதும் இந்த விடயம் பேசித் தீர்மானிக்கப்படும்- என்றார். (ஐ)

# முகமூடி அணிந்து கொள்ளை; நீர்கொழும்பில் இருவர் கைது

கொழும்பு,ஜன.23
நீர்கொழும்புப் பகுதியில் முகமூடி அணிந்து திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் ஆயுதக் கும்பல் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனடிப்படையில் இருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
முகமூடி அணிந்த ஆயுதக் கும்பல் உறுப்பினர்கள் , மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் சென்று பெண்களிடம் உள்ள பணப்பைகள், தங்க ஆபரணங்கள் போன்ற பொருள்களைத் திருடியுள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தக் கும்பல் உறுப்பினர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர்.
இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஆயுதக் கும்பல் உறுப்பினர்களை கைது செய்வது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# தன்னைத்தானே சுட்ட பொலிஸ் உத்தியோகத்தர்

கொழும்பு,ஜன.23
மங்களகம பகுதியில் பொலிஸ் அதிகாரி ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார். மங்களகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், பிறிதொரு பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியைப் பயன்படுத்தியே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதன்போது படுகாயமடைந்த அவரை உடனடியாக கொனாமுல்லை வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் அம்பாறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)



கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள யுஎஸ்எஸ். ஹொப்பர் என்ற அமெரிக்க கடற்படையின் ஏவுகணை நாசகாரி கப்பலில், இலங்கைக் கடற்படையினருக்கு நேற்று பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இலங்கைக்கடற்படையின் சிறப்பு அணி ஒன்று நேற்று முன்தினம் யுஎஸ்எஸ். ஹொப்பருக்குச் சென்று அமெரிக்க கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபட்டனர். கப்பல்களுக்குள் நுழைந்து, தேடுதல்களை நடத்துதல், மற்றும் கப்பல்கள், ஆயுதங்கள் மற்றும் ஆள்களை கைப்பற்றும் உத்திகள் தொடர்பாகவே கடற்படையினருக்கு அமெரிக்கப் படையினர் பயிற்சிகளை அளித்தனர். (ஐ)

# சினிமாத்துறை அபிவிருத்திக்கு ஊடக அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜன.23
சினிமாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், சினிமாப் பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.
இலங்கையின் சினிமாத் துறைக்கு 70 வருடங்கள் மற்றும் இலங்கை திரைப் படக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 45 வருடங்கள் நிறைவு ஆகியவற்றை முன்னிட்ட சிறப்பு நிகழ்வு இலங்கை திரைப் படக் கூட்டுத்தாபன தரங்கணி சினிமா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வருடத்தில் நாட்டில் அனைத்து சினிமா திரையரங்குகளும் டிஜிட்டல்மயப் படுத்தப்படும். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது. பழைய திரைப்படங்களைப் பாதுகாப்பதற்கான சிறப்புப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் தலைவர் திரைப்பட விருது விழா பத்து வருடங்களுக்குப் பின்னர் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.
தற்போது நிலவும் சவால்களை இனங்கண்டு உள்நாட்டு சினிமாத் துறையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சினிமாத் துறையுடன் தொடர்புடைய அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக முன் வைக்கப்படும் யோசனைகளைக் கருத்திற்கொள்ள அரசு தயாராக உள்ளது-என்றார். (ஐ)

# இ-கொமர்ஸ் துறை சார்ந்து இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அலிபாபா நிறுவனம் தீர்மானம்




உலகில் இணையவழி வியாபார மற்றும் வர்த்தகம் சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முன்னிலை வகித்து வருகின்ற சீனாவின் அலிபாபா நிறுவனம் இ-கொமர்ஸ் துறை சார்ந்து இலங்கையில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதான தகவல் தரலை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது.

உலப் பிரசித்தம் வாய்ந்த இணையவழி வணிகத்தளங்களின் குழுமமான அலிபாபாவின் குழுமச் செயல் தலைவரான ஜாக் மா மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கா ஆகியோரிடையே சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டின் இடையேயான சந்திப்பின் போதே ஜாக்மாவால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர இலங்கையில் ஒன்லைன் வணிக நிறுவனங்களை ஊக்குவிப்பது தொடர்பிலும் அலிபாபா குழுமத்தின் செயல்நிலைத் தலைவரால் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அலிபாபா நிறுவனம் இ-கொமர்ஸ் துறையில் இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பிலான முதற்கட்ட நடவடிக்கைகளை இவ்வாண்டின் நிறைவுக்கு முன்பதாக மேற்கொள்ளவுள்ளது.”

“சீனாவின் இரண்டாவது நிலையிலுள்ள பணக்காரர் என்ற பெயருக்குரியவரான ஜாக்மா போர்ப்ஸ் இதழின் முகப்புப் பக்கத்தில் இடம் பெற்ற முதல் சீனப் பிரஜையாக விளங்குகிறார்.”




# எட்கா உடன்படிக்கை இவ் வருட நடுப்பகுதியில் நடைமுறைக்கு

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



“சீன நிறுவனத்திற்கு அமைய 2 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் தொழிற்சாலைகளை இங்கு அமைப்பதற்கான தேவை ஏற்பட்டிருக்கிறது.”

எட்கா உடன்படிக்கையை இவ் வருட நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள பிரதமர், “சீனாவின் மேர்ச்சண்ட் நிறுவனத்திற்கு நிலப்பிரதேசத்தை வழங்கியுள்ளோம். 300 ஏக்கர் பிரதேசமே அவர்களுக்கு தேவையாகவுள்ளது. இந்து சமுத்திரத்தின் பன்னாட்டு கொள்கலன் களஞ்சியமாக அதனை மாற்ற வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. நாம் சின் செயினுக்கு சென்றிருக்கிறோம். அதன் செயற்பாடுகளை பார்வையிட்டிருக்கிறோம். அதன்படி இலங்கையிலும் ஒரு சிறிய களஞ்சிய சாலையை அமைக்கத் தீர்மானித்துள்ளோம். இலங்கையின் உள்ளே பொருள்களை உற்பத்தி செய்யும் தேவை எமக்குள்ளது. சீன நிறுவனத்திற்கு அமைய 2 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் தொழிற்சாலைகளை இங்கு அமைப்பதற்கான தேவை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தேவையை நாம் புரிந்துகொண்டுள்ளோம். இந்த தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டியது அரசின் பிரதான கடமையாகவுள்ளது. இது தொடர்பில் இந்தியாவின் உதவியும் எமக்குத் தேவைப்படுகிறது. அவர்களும் இலங்கைக்கு வரவேண்டும். எட்கா உடன்படிக்கையை நிறைவு செய்ய வேண்டும்”- என்றார்.

# அரிசி மற்றும் மின் உற்பத்திக்கான டீசலை இறக்குமதி செய்ய தீர்மானம்

## சவால்களை வெற்றி கொள்ள உலக உணவுத் திட்டம் ஆதரவு

வறட்சி நிலை நீடித்தால் மக்களின் நுகர்வுக்கான அரிசி மற்றும் மின் உற்பத்திக்கான டீசல் என்பவற்றை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக அரசு தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வறட்சி காரணமாக எதிர்கொள்ளப்படும் பாதிக நிலமைகளை வெற்றி கொள்வதற்கு இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்டம் உறுதியளித்துள்ளது.

உலகப் பொருளாதார மாநாட்டின் போதே ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் எதரின் கொஷி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் வறட்சியால் குறிப்பாக விவசாயத்திற்கும் மின் உற்பத்திக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து உலக பொருளாதார மாநாட்டின் போது ஆராயப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி உலக உணவுத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் இலங்கைக்கு வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவசாயத்தை மாத்திரம் முழுமையாக நம்பியுள்ள மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

WFP
World Food Programme

# இதயத் துடிப்பே கடவுச் சொல்

## புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள்

இணையவழி மருத்துவ சிகிச்சையின் போது தனிநபர்களின் உடல்நலம் பற்றியதான மின்னணுத் தகவல்களைப் பாதுகாப்பதற்கென அவரது இதயத் துடிப்பையே கடவுச்சொல்லாக பயன்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது தகவல்களைப் பாதுகாக்க பயன்படுத்தப்படும் ‘என்க்ரிப்ட்’ தொழில்நுட்பம் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்ததாகவும் செலவினங்கள் அதிகம் கொண்டதாகவும் காணப்படுகிறது. தவிர இணையவழி மருத்துவம், கைபேசி மூலமான மருத்துவம் போன்றவற்றில் இரகசியத் தகவல்களைப்



பாதுகாக்க இத்தகைய பாரம்பரியத் தொழில்நுட்ப செயலிகளைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

இந்தநிலையிலே ‘என்க்ரிப்ட்’ தொழில்நுட்பத்திற்கு மாற்றான எளிமையான, மலிவான மருத்துவத் துறைக்கே உரித்தான பிரத்தியேக தகவல் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக பிங்கம்டன் பல்கலைக்கழக பேராசியர் சின்பெங் ஜின் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நோயாளிகளின் உடல்நலம் குறித்தான மின்னணு தகவல்களை சுலபமாகவும், மலிவாகவும் பாதுகாப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதன்படி நோயாளியின் ‘இசிஜி’ பரிசோதனை வரைபடத்தை கடவுச்சொல்லாகப் பயன்படுத்தி அவரது உடல்நிலை தொடர்பிலான விவரங்களைப் பாதுகாக்கும் முறையை உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ சிகிச்சை முறைமையில் பொதுவாக நோயாளிகளின் உடல்நிலையை அறிந்துகொள்வதற்கு ‘இசிஜி’ பரிசோதனையே மிக அதிகளவில் மேற்கொள்ளப்படும் நிலையில் குறித்த அந்தப் பரிசோதனை வரைபடத்தை கடவுச்சொல்லாகப் பயன்படுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நுட்பம்

அவசரச் சட்டம் கூட்டத்தைக் கலைப்பதற்கான சூ

# ஜல்லிக்கட்டுத் தடையை நிரந்தரமாக நீக்க வலி

# தமிழகத்தில் நேற்றும் எழுச்சி குறையாப் போரா

## அலங்காநல்லூர் வாடியைத் திறக்க மக்கள் விடவில்லை

## தோல்வியுடன் சென்னை திரும்பினார் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, ஜன. 23
ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடை, அவசரச் சட்டத்தின் மூலம் நிக்கப்பட்ட போதிலும், நிரந்தரச் சட்டமே தமக்குத் தேவை என்று தெரிவித்து தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவுப் போராட்டங்கள் ஏழாவது நாளாக நேற்றும் தொடர்ந்தன.

மிருகவதை என்று தெரிவித்து, இந்தியாவில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாதலால் அதை தடைப்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தின. ஆனால், பொங்கல் முடிந்த பிற்பாடும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உறுதியான எந்த முடிவும் வழங்கப்படவில்லை. டெல்லி அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து தமிழ்நாட்டில் பரவலான கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்று வந்தன வருகின்றன. இளைஞர்களின் எழுச்சியை அடுத்து ஜல்லிக்கட்டை நடத்த ஏதுவாக அவசர இயற்றிட தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முனைப்புக்காட்டினார்.

27 பக்கங்களைக் கொண்ட அவசரச் சட்டம் இயற்றப்பட்டது. மிருக வதையில் இருந்து ஜல்லிக்கட்டுக்கு விலக்கு. தமிழ்நாட்டு பாரம்பரிய காளைகளைக் காத்திட உரிய நடவடிக்கை ஆகியன அவசரச் சட்டத்தின் சிறப்பம்சங்கள். அவசர சட்டவரைவுக்கு மத்திய சட்ட அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகம் (குடியரசுத் தலைவரின் சார்பில்), சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் கலாசார அமைச்சகம் ஆகியன சம்மதம் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து டெல்லி அரசு சிறு திருத்தங்களுடன் அனுமதி வழங்கியது. டெல்லியின் அனுமதியைத் தொடர்ந்து, தமிழ்நாட்டுக்கு சட்டம் அனுப்பி வைக்கப்பட்டது. பொறுப்பு ஆளுநர் வித்யா சாகர் ராவ் நேற்றுமுன்தினம் மாலை சட்டத்துக்கு அனுமதி வழங்கினார். இதனை அடுத்து உடைக்கப்பட்டது.



### அவசரசட்டம் யாவும் பொய்யானவை

ஜல்லிக்கட்டை நடத்த ஏதுவாகக் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் வெறும் கண் துடைப்பு என்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் தெரிவித்தனர். குடியரசுத் தினம் நெருங்குவதால் கூட்டத்தைக் கலைக்க எடுத்த அவசர முயற்சியே இந்த அவசரச் சட்டம் என்று மெரீனா போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர். இதனாலேயே ஒரு வாரத்துக்கு இந்த விடயத்தில் உச்சநீதிமன்றம் மௌனித்து இருக்க வேண்டும் என்று, மத்திய அரசு தெரிவித்தது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

### அலங்காநல்லூரில் அரங்கேறவில்லை

அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அலங்காநல்லூரில் நேற்றுக் காலை ஜல்லிக்கட்டு நடைபெறும் என்றும் அதை தானே தொடங்கிவைப்பேன் என்றும் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். இதன்படி அவர் மதுரைக்கும் புறப்பட்டுச் சென்றார். ஆனால் அவசரச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத மக்கள் வாடிவாசலைத் திறக்க அனுமதிக்கவில்லை. இதனால் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு அரங்கேறவில்லை. வேறுவழியின்றி முதல்வர் மீண்டும் சென்னை திரும்பினார்.

### தொடரும் என்று எச்சரிக்கை

ஜல்லிக்கட்டு நடத்த ஏதுவாக பிறப்பிக்கப்பட்ட



அவசரச்
சட்டம் இய
என்று பெ
ஞர்கள் இ
தெரிவித்
ஞர்களின்
யாத போ
அரங்கே
குறிப்பிட்

---

## ஜல்லிக்கட்டு காளை மோதி ஒருவர் சாவு

தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றுநடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்வில் காளை மோதி ஒருவர் சாவடைந்தார்.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஜல்லிக்கட்டுக்கு நேற்றுமுன்தினம் அனுமதி கிடைத்தது. இதனால் நேற்று சில இடங்களில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ராப்பூசலில் ஜல்லிக்கட்டு காளை முட்டி மோகன் என்பவர் உயிரிழந்தார். ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடை நிரந்தரமாக நீங்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும் நிலையில் இந்தச் சம்பவம் ஜல்லிக்கட்டுத் தடையின் அவசியத்தை உணர்ந்தும் படியாக அமைந்தது என்று இந்திய ஊடகங்கள் சில குறிப்பிட்டன. (ம)

## பாக். சந்தையில் குண்டுவெடிப்பு 20 பேர் சாவு: பலருக்குக் காயம்



பாகிஸ்தானின் எல்லைக் கிராமத்தில் உள்ள ஓர் சந்தையில் ஏற்பட்ட குண்டுவெடிப்பை அடுத்து, 20 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் அதிகமானவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் எல்லைநகரான குர்ரமின் சந்தையொன்றிலேயே இந்த குண்டுவெடிப்பு ஏற்பட்டது. மரக்கறிப் பெட்டிக்குள் மறைத்துவைக்கப்பட்டு குண்டுவெடிப்பு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திலேயே 20 பேர் உயிரிழந்தனர். படுகாயங்களுடன் 50 இற்கும் அதிகமானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-எ)

## சிரியாவில் அமெ. நடத்திய த அல்குவைதா உறுப்பினர் 10

பெய்ரூட், ஜன. 23
சிரியாவில் அமெரிக்கா நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் அல்குவைதா அமைப்பைச் சேர்ந்த 100 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிரிய லிபிய எல்லையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள அல்குவைதா அமை பினரின் பயிற்சி மைய களில் ஆளில்லா வி னத்தின் மூலம் நடத் பட்ட இந்தத் தாக்குதல்

## ஒசாவில் ரயில் தடம்புரண்ட


புதுடில்லி, ஜன. 23
இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள விஜயநகரம் மாவட்டத்தில் ரயிலொன்று நேற்றுமுன்தினம் நள்ளிரவு தடம்புரண்டதில் 32 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கு குறித்த பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் நக்சலைட்கள் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

ஜக்தல்பூர் – புவனேஸ்வர் கடுகதிரயிலே அவ்வாறு விபத்துக்கு உள்ளானது. உயிரிழந்த 32 பேரைத் தவிர 54 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரித்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

ரயில் தண்டவாளம் குண்டுவைத்துத்



# சூழ்ச்சியே
# ஸ்பியுறுத்தி
# ராட்டங்கள்



அவசரச் சட்டத்துக்குப் பதிலாக நிரந்தரச் ட்டம் இயற்றும் வரை போராட்டம் தொடரும் ன்று மெரீனாவில் குவிந்திருந்த இளை நர்கள் இந்திய ஊடகங்களுக்கு நேற்றுத் தெரிவித்தனர். லட்சக்கணக்கான இளை நர்களின் பங்குபற்றலுடன் எழுச்சிகுறை யாத போராட்டங்கள் நேற்றும் பரவலாக அரங்கேறின என்று இந்திய ஊடங்கள் குறிப்பிட்டன. (ம-எ)




# ட்ரம்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் உலக அளவில் முன்னெடுப்பு

வொஷிங்ரன், ஜன. 23
அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி ஏற்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு மில்லியன் பெண்கள் வொஷிங்ரன் நகரில் நேற்றுமுன் தினம் மிகப்பெரிய பேரணியை நடத்தினர்.
ஜேர்மனின் பெர்லின், பிரான்ஸின் பாரிஸ், லண்டன், அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் சிக்காக்கோ, ஆகியநகர்களிலும் ட்ரம்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்லாயிரக் கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. (ம-எ)

# 7.9 ரிச்டர் அளவில் அதிர்ந்தது பப்புவா

போட் மோஸ்பே, ஜன. 23
பப்புவா - நியூகினியா பகுதியில் நேற்று கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 7.9 ஆகி அதிர்வு பதிவானது என்று அமெரிக்கபுவியியல் திணைக்களம் தெரிவித்தது. நில அதிர்வை அடுத்து பசுபிக் பிராந்தியப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ம-எ)






# இத்தாலியில் பஸ் விபத்து




உரோம், ஜன. 23
இத்தாலியின் வடக்கு பகுதியில் வெரோனா அருகே ஹங்கேரிய நாட்டைச் சேர்ந்த பேருந்து ஒன்று நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர்.
சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, சாலை ஓரத்தில் இருந்த தூண் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. மோதிய வேகத்தில் பேருந்து தீப்பற்றி எரிந்தது. பேருந்தின் ஓட்டுநர், குழந்தைகள் உட்பட 8 பேர் உடல்கருகி உயிரிழந்தனர். 12 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# ய தாக்குதலில் 100 பேர் சாவு

அங்குள்ள ா அமைப் சிமையங் ல்லா விமா ம் நடத்தப் ாக்குதலில் 100 ஆயுததாரிகள் குறைந்த பட்சம் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜெப் டேவிஸ் தெரிவித்தார். (ம-எ)




# ண்டது; 32 பேர் பரிதாப உயிரிழப்பு



தகர்க்கப்பட்டது என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்தது.
இது அந்தப் பகுதியில் நடமாடிவரும் நக்சலைட்களின் நாச வேலையாக இருக்கும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது.
உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 2 லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு ரூபா 50 ஆயிரமும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலகின் தற்போதைய போக்கை மாற்றிவிடுவாரா டொனால்ட் ட்ரம்ப்?

**“இதுவரை காலமும் வேறு நாடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதிலேயே எமது கவனத்தைச் செலுத்தி வந்திருக்கிறோம். இனிவரும் காலத்தில் எமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிறநாடுகள் செல்வம் தேடிக்கொள்வதற்காக எமது நாட்டுச் செல்வத்தைப் பயன்படுத்திவந்துள்ளோம், இனிமேல் எமது நாட்டுச் செல்வத்தை மேலும் பலமுள்ளதாக்குவோம்”.**

அமெரிக்கவின் புதிய அதிபராகக் கடந்த 20ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொண்ட டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு அறிவித்தார். அமெரிக்கா மீண்டும் அதன் பெருமையை நிலைநாட்டிக் கொள்ள நாம் உழைப்போம். இந்த நாடு ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் சொந்தமானது என்று அவர் கூறியபோது, அங்கு வருகை தந்திருந்த முன்னாள் அதிபர்கள் பராக் ஒபாமா, கிளின்ரன் மற்றும் ஜோர்ஜ் டபிள்யு புஷ் போன்றவர்கள் அதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். இதுவரைகாலமும் அமெரிக்காவின் பெருமை சிதைக்கப்பட்டு வந்துள்ளது. இனி அதனைத் தாம் கட்டி எழுப்புவார் என்பதாக அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டமை முன்னாள் அதிபர்களின் ஆட்சிக்காலத்தை நையாண்டி செய்வது போல் இருந்ததாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

டொனால்ட் ட்ரம்பின் பதவி ஏற்பு மிகுந்த பரபரப்புகளுக்கிடையிலேயே நடந்து முடிந்துள்ளது. பல இடங்களில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தேறியுள்ளன. தேர்தல் காலத்தில் அவர் அறிவித்திருந்த செயற்றிட்டங்கள் எல்லாம் இனி மளமளவென்று நடந்தேறும் என்பது போல் அவருடைய சொற்பொழிவு அமைந்திருந்தது. இந்த நிமிடம்முதல் அமெரிக்காவின் குடிமக்கள் அனைவரும் இந்த ஆட்சியில் பொறுப்பாளர்கள் ஆகின்றார்கள் என்று அவர் கூறினார்.

அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொள்வதற்கு 5நாள்கள் முன்பதாக ட்ரம்ப் வெளியிட்ட ஓர் அறிக்கையில் “நேட்டோ” (NATO) அமைப்பானது காலம் கடந்த ஒன்று என தூக்கி எறிந்து பேசியிருந்தார். வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் வெறுப்பை இதன் மூலம் அவர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். இவ்வமைப்பின் முக்கிய உறுப்பு நாடாக அமெரிக்கா இருந்து வருவதுடன் பெரும்பாலும் அதனை முன்னின்று அதுவே நகர்த்திவருகின்றது. டொனால்ட்ட்ரம்பின் போக்கு துரிதமடையும்எனில் இந்த அமைப்பு குலைந்துபோக ஏதுவாகிவிடும். அதனால் பலநாடுகள் விரக்திநிலைக்குத் தள்ளப்படலாம். இந்த நாடுகள் விவகாரத்தில் ரஷ்யாவின் கை ஓங்கிவிடும் என்ற கவலை தோற்றியுள்ளது. ரஷ்யாவின் விடயத்திலும் டொனால்ட் ரம்பின் கொள்கை அதன் நேசநாடுகளை பகைத்துக் கொள்வதாக அமைந்துள்ளது. அண்மையில் உக்ரேன் விவகாரத்தின் போது ரஷ்யா மீது கொண்டு வரப்பட்டபொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு ட்ரம்ப் தயாராவது தெரியவந்துள்ளது. இது ஐரோப்பிய நாடுகளின் நட்பை இழக்கும் நிலைக்கு அமெரிக்காவைக் கொண்டு செல்லும் என்று கருதப்படுகின்றது. அகதிகள் விவகாரத்தில் ஜேர்மன் அதிபர் அஞ்செலா மெர்கன் அபாயகரமான தவறு இழைத்துவிட்டார் என்று சாடியுள்ள ட்ரம்ப், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவது “சிறப்பானது” என்றும் பாராட்டியுள்ளார்.

அமெரிக்காவின் பெருமையைக் கட்டிக்காப்பார் என்று கூறிக் கொள்ளும் டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யாவில் ஹோட்டல்களில் விலைமாதர்களுடன் முன்னர் தங்கியிருந்துள்ளமை தொடர்பான ஒளிப்படங்கள் ரஷ்யாவிடம் இருப்பதாகத் தெரிவிக்கப்படும் செய்திகளை மறுத்துள்ளார். இவை உண்மையெனில் அவர் பேசும் பெருமையில் அர்தமில்லாமல் போகும்.

பொதுவில் அமெரிக்காவின்முன்னைய தலைவர்கள் பலரும் கவனமாகப் பேணிவந்துள்ள கொள்கைகள் பலவற்றுக்கு மாறான கருத்துக்களையே ட்ரம்ப் வெளியிட்டுவருகிறார். அமெரிக்காவில் பதிவு செய்யப்படாமல் இருக்கும் அனைத்து வெளிநாட்டவரும் உடனடியாக வெளியேற்றப்படுவார்கள் என்பதும் அகதிகள் நாட்டுக்குள் வராமலிருக்க மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்புவதும் இவர் கொள்கை. இஸ்லாமிய தீவிரவாதத்தை அடியோடு அழிப்பதாக அவர் வெளியிட்டுள்ள அறிவித்தல், பலநாடுகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது. டொனால்ட் ட்ரம்பின் சீனாவுடனான உறவுகள் பலமடைவதற்குப் பதிலாக சீர்குலைவதற்கான சமிக்ஞைகளே வெளிப்பட்டுள்ளன. பதவி ஏற்பதற்கு முன்னரே தாய்வான் தலைவருடன் ட்ரம்ப் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருந்தது சீனாவின் கசப்புணர்வை அதிகரித்துள்ளது. நவ சீனாவின் ஒரே ஒரு சீனக் கொள்கையை இது கேலி செய்வதாக இருக்கின்றது. என்று அவர்கள் கருதுகிறார்கள். இதில் ட்ரம்ப் எடுக்கும் நகர்வுகள் ஆசியாவில் புதிய கெடுபிடிகளுக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது.

கட்டுரை

# பொருத்து வீடா? கல் வீடா?

## வீட்டு வசதி தேவையானோரது குழப்பம் இது

ந.லோகதயாளன்

வட மாகாணத்தின் வீட்டுத் திட்டம் தொடர்பில், எத்தகைய வீடுகளை வழங்குவது என அரசியல் தலைவர்கள் முட்டிமோதிக்கொள்ள, எதனை நிறைவேற்றுவது எனத் தெரியாது அதிகாரிகள் திண்டாட, எதையாவது உடன் தாருங்கள் என கதறுகின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களில் 150 ஆயிரம் குடும்பங்கள் வீடு அற்ற நிலையில் உள்ளன என்கிறது புள்ளி விவரம். அதேவேளை வடக்கில் மட்டும், 85 ஆயிரம் வீடுகள் தேவையெனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 30 ஆயிரம் வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 14 ஆயிரம் வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 13 ஆயிரம் வீடுகளும், மன்னார் மாவட்டத்திற்கு 13 ஆயிரம் வீடுகளும், வவுனியா மாவட்டத்திற்கு 15 ஆயிரம் வீடுகளுமாக மொத்தம் 85 ஆயிரம் வீடுகள் தேவை என மாவட்டச் செயலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், அமைக்கப்படும் வீடுகள் ஒவ்வொன்றுக்கும் சுமார் 10 லட்சம் ரூபா தேவை. அரச உயரதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடம் இது தொடர்பாக கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை அரசிடம் முன்வைக்கப்பட்ட வேளையில்தான் புதிதாக ஒரு சர்ச்சையே முளைத்தது. அதாவது உடனடியாகச் சுமார் ஓர் ஆண்டு காலத்திற்குள்ளேயே 65 ஆயிரம் வீடுகளை அமைக்க முடியும் எனவும், இதற்காக உள்ளூர் மூலப்பொருள்கள் எவையுமே தேவையற்றவை எனவும் கூறினாலும் அவை ஒவ் வொன்றின் பெறுமதியாக 21 லட்சம் ரூபாவெனக் கணிக்கப்பட்டது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட வீட்டின் இரு மாதிரிகளும் குடாநாட்டில் அமைக்கப்பட்டன. அப்போதுதான் சர்ச்சையே உருவெடுத்தது. அதன் தரம் , பாதுகாப்பு , சூழலுக்கேற்ற சுவாத்தியம் தொடர்பாகவும், அதன் பெறுமதி தொடர்பிலும் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. இதனால் உள்ளூர் அரசியல்வாதிகள் அனைவரும் அதனை அடியோடு எதிர்த்தனர். மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பையடுத்து கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேகம் தணிய நேர்ந்தது. இருப்பினும் பயணம் தடைப்படவில்லை. இதனால், திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சின் செயலாளர்கூட பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் முன்பு 21 லட்சமாக இருந்த ஒவ்வொரு பொருத்து வீடுகளின் பெறுமதியையும் சடுதியாக 16 லட்சமாகக் குறைத்து நடைமுறைப்படுத்த அமைச்சு எடுத்த முடிவுக்கு மக்கள் பிரதிநிதிகள் மீண்டும் தமது எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அரசியல் அடிப்படையுடன் வீடு தேவையானோரிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதன் காரணமாக அரசியல்வாதிகள் தீர்க்கமான முடிவேதும் மேற்கொள்ள இயலாது முட்டிமோதிக் கொள்ளுகின்றனர். திட்டத்துக்குப் பொறுப்பான அரசியல்வாதிகளோ எதுவும் செய்ய இயலாது திண்டாடுகின்றனர். ஆனால் பாமர மக்களோ எதையாகிலும், உடன் தந்து தொலையுங்கள் என்றில்லாது கல்வீடே வேண்டும் என்ற மன உறுதியிலேயே உள்ளனர்.

வடக்கில் மட்டும் 65 ஆயிரம் வீடுகளை ஒவ்வொன்றும் 16 லட்சம் ரூபா பெறுமதியில் அமைத்து வழங்கத் தேவைப்படும் நிதியை 8 லட்சம் ரூபா வீதமோ அல்லது 10 லட்சம் வீதம் வழங்கினால் மாகாணத்தின் மொத்த தேவையான 85 ஆயிரம் வீட்டுத்தேவையையும் நிறைவு செய்துவிட முடியும் என்கின்றனர் அவர்கள்.

மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படும் 8 லட்சம் ரூபா பணத்தில் மக்களால் அமைக்கப்படும் வீடுகள் பாதுகாப்பு, கால நிலைச் சுவாத்தியம் கொண்டவையாகப் பேணும் தன்மையும் காணப்படுவதோடு இதன் இரண்டிப்பு விலையான 16 லட்சத்தில் அமைக்கப்படும் பொருத்து வீடுகளில் இத்தகைய வசதி எவையுமே கிடையாது என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்த நிலையில், இந்த வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் வலி. வடக்கின் வயாவிளான் பகுதியைச் சேர்ந்த குண்டுமணி- இந்திராதேவி தெரிவிக்கையில் ,

“யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் இறுக்கமான இன , மத ஈர்ப்பு கொண்டவர்கள் என்பதில் ஐயம் கிடையாது. ஆனால் பொருத்து வீட்டுத் திட்டத்தில் நாம் எந்த மத உரிமையையும் பேண முடியாது. அதாவது பூசை அறை என்பதே கிடையாது. பூசை அறை இல்லாத நிலையிலும் வெளியில் வைத்து வழிபடுவதானாலும் ஒரு கர்ப்பூரமோ அல்லது குறைந்த பட்சம் சாம்பிராணி கூடக் கொளுத்த முடியாத நிலையாம். அதற்கும் அப்பால், எந்த நன்மை தீமைக்கும் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்யமுடியாது. இங்கு உரும்பிராய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரிப் பொருத்து வீடு உறுதியற்ற தொன்றாகக் கணிக்கப்படுகிறது. அந்த வகையில் மூன்று பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் நாம் இந்த வீட்டில் அச்சம் இன்றி வாழமுடியுமா? இதனை எமது தலையில் திணிக்க கொழும்பில் இருந்து முயல்பவர்களுக்கு இது தெரிந்திருக்க நியாயம் இல்லை” என்றார்.

இதேவேளை இது தொடர்பில் கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் போர் காரணமாக கணவனை இழந்த நிலையில் தற்போது மறுமணம் செய்து 3 பிள்ளைகளுடன் வாழும் இ.தேன்மொழி (39) தெரிவிக்கையில் ,

“நாம் நீண்டகாலமாக எமக்கென வீடு கோரிவருகின்றோம். ஆனாலும் இதுவரை வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. ஆனாலும் வீடு என்ற பெயரில் தற்போது வழங்க எண்ணுவது ஒரு பெட்டியே. அதன் பெறுமதி 20 லட்சம் என்கின்றனர்” என்றார்.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் வாழும் பெண்மணி ஒருவர் இது குறித்துத் தெரிவிக்கையில் ,

எனக்கு இப்போது 72 வயது. 83ஆம் ஆண்டுதான் இறுதியாக சொந்தக் கல் வீட்டில் இருந்தேன். அதன் பின்பு பள்ளிக்கூடக் கட்டடங்கள், இரவல் வீடுகள், முகாம்கள், என அலைந்து இன்றும் ஓலைக் குடிசையிலேயே வாழ்கின்றேன்.

நான் இறப்பதற்கு முன்பு சொந்த வீடுவேண்டும் என்பதே எனது ஆசை. அது கல்வீடாக இருந்தால் நல்லதுதான். அதற்காக கல்வீடுதான் வேண்டும் என, வருவதையும் விட்டால், கண்ணைமூடிப் பாடையில் போகும் போதும் தெருவில்தான் கிடக்க வேண்டி வரும். எனவே பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்துள்ளேன்” என்றார்.

எனவே இப்போது பொருத்து வீடா கல்வீடா என்பது அரசியல் வாதிகளின் பிரச்சினையாக உள்ளது.

மக்களின் பிரச்சினையோ வீடு கிட்டுமா? அல்லது கிட்டாதா? என்ற சந்தேகமே. அரசியல் வாதிகள் உடனடியாக ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து மக்களுக்காக வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.



# நாட்டு மக்களது எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா?

சிங்கள மூலம் - பேராசிரியர் மில்ரன் ராஜரத்ன
தமிழில் - வீ.எஸ்.ரி

கூட்டு அரசு தனது பதவிக் காலத்தில் இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. தேர்தல் சமயத்தில் நூறு நாள்கள் வேலைத் திட்டத்தை முன்வைத்திருந்தது. அது, அவசரமாக நிறைவேற்றப் படவுள்ளதாக உறுதியளிக்கப்பட்டதொன்று. அதேவேளை, ஜனாதிபதிப் பதவியை ஒருவர் வகிப்பதற்கான காலத்தை மட்டுப்படுத்தும் திட்டமும் முன்வைக்கப்பட்டது. அரச ஊழியர்களுக் கான சம்பள உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றுக்கான விலைக் குறைப்பு போன் றவை குறித்து நூறுநாள் வேலைத் திட் டத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் உறுதியளிக்கப்பட்டவற்றில் பல விடயங் கள் நிறைவேற்றப்படவில்லை.

நீண்டு நிலைக்கக் கூடிய அரசியல் நடைமுறையொன்றை உருவாக்குவதே நல்லாட்சி அரசின் கொள்கைத் திட்டமாகக் கொள்ளப்பட்டது. அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் 18 ஆவது திருத்தம் ஒழிக்கப்பட்டது. இதன் மூலம் நபரொருவர் ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கான காலம் மட்டுப்படுத்தப் பட்டமை நல்லாட்சி அரசுக்கு மதிப்பை ஏற்படுத்தியது. தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட போதிலும் தேர்தல்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் கிட்டாததால் தேர்தல்கள் ஆணைக்குழுவால் பயனேதும் கிட்ட வாய்ப்பில்லை. அந்த வகையில் நல்லாட்சி அரசு மக்கள் விரும்பிய அரசமைப்புத் திருத்தங்களை வழங்கிய போதிலும், அவற்றால் பயனெதனையும் பெற இயலவில்லை. லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டபோதிலும், லஞ்சம், ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும், குற்றவாளிகளுக்குத் தண்டனையோ அல்லது அவர்களுக்கு எதிராக நடவடிக்கையோ எடுக்கப்பட்டதாக இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மகிந்த தரப்பினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நிதிமோசடிக் குற்றச் சாட்டுக்களில் எதுவும் இதுவரை நிரூபிக்கப் படவில்லை. கையாடப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட நிதித் தொகை எதுவும் பறிமுதல் செய்யப்பட்டதாக கேள்விப்பட முடிந்ததில்லை. அந்த வகையில் கழிந்து போன இரண்டாண்டுகள் ஆட்சிக் காலத்தில் நல்லாட்சி அரசால் பெரிதாக எதனையும் சாதித்திட முடியவில்லை.

**நாட்டு மக்களது விருப்பத்தை அனுசரித்தே அரசு செயற்படுதல் சிறப்பு**

அதேவேளை நான்கு ஆண்டுகள் காலம் முடிவடைய முன்னர் ஒரு அரசைக் கலைக்க இயலாதென அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கியமை நல்லாட்சிக் கொள்கைக்கு விரோதமானது. தற்போதைய அரசைப் பாதுகாத்துக் கொள்வதற்கென அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட அம்சம் அது. நாட்டுமக்கள் மற்றொரு அரசை நிறுவ விரும்பினால் அதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அத்தகைய வாய்ப்பு மறுக்கப்படும் தருணத்திலேயே மக்கள் அரசுக்கெதிரான குழப்பம், புரட்சி போன்றவற்றை மேற்கொள்ள முயலக்கூடும். நல்லாட்சி குறித்து மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புக்கள் நிலவின. நல்லாட்சியும் அரசமைப்பும் வெவ்வேறானவை. அரசமைப்பொன்றைப் புதிதாக உருவாக்காமலேயே நல்லாட்சியை முன்னெடுக்க இயலும். சிற்சில திருத்தங்களுடன் இன்று நடைமுறையிலுள்ளது ஜே.ஆர் கொண்டு வந்து நிறைவேற்றிய அரசமைப்பே. சந்திரிகா, மகிந்த ஆகியோரது ஆட்சிகளை விட இன்றைய ஆட்சியில் ஜனநாயக அம்சங்கள் ஓரளவு கடைக் கொள்ளப்படுகின்றன.

**நல்லாட்சிக்கான அடிப்படைத் தத்துவம் கைக்கொள்ளப்படவில்லை**

லஞ்ச ஊழல் ஒழிப்பு, அவற்றில் ஈடுபட்டோரைத் தண்டித்தல், பொது மக்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றல் என்பவையே நல்லாட்சி ஒன்றுக்கான அடிப்படைத் தத்துவமாகும். இவற்றை நிறைவேற்றினால், அது நல்லாட்சி நிலவுவதற்கான அடையாளமாகக் கொள்ளப்படும். ஆனால் அரசோ வெளிநாட்டு அதிகாரத்தரப்புக்கள் முன்வைக்கும் நிபந்தனைகளுக்கமைய அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொள்ள முனைவதாகத் தோன்றுகிறது. நல்லாட்சிக்கான நடைமுறைகள் எதனையும் காணமுடியவில்லை. எழுத்துச் சுதந்திரம், அரசை விமர்சிப்பதற்கான சுதந்திரம் என்பவைதான் நல்லாட்சியின் இலட்சணம் என்றில்லை. விமர்சனம் மேற்கொள்ளல் தொடர்ச்சியாக இடம்பெற்றே வருகின்றன. உயிர் வாழ்வதற்கான உரிமை ஒரு நாட்டின் அடிப்படைத் தத்துவமாகும். அந்த உரிமையை மறுத்தல் குற்றமே. குற்றங்களைக் களைதல் நல்லாட்சி ஆகிவிடாது. அந்த வகையில் இன்றைய அரசு சிற்சில விடயங்களை நல்லாட்சிக்கான அம்சங்களெனத் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்கிறது. கொலை, கொள்ளை, லஞ்சம், ஊழல் நடவடிக்கைகள் உரிய முறையில் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இன்றைய ஆட்சித் தரப்பினர்களும் அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக விமர்சிக்கப்படுகிறது. திறைசேரி, பிணைமுறி, ஊழல் விவகாரம் இத்தகைய சூட்சுமமான குற்றங்களுக்குத் தகுந்ததொரு உதாரணம். அரச வளங்களை இன்றைய அரசுத் தரப்பினர்களும் தவறான விதத்தில் பயன்படுத்திக் கொள்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

**ஆட்சி மாற்றத்துக்கான எதிர்பார்ப்புநிறைவேற்றப்படவில்லை**

இத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்காகவே ஆட்சி அதிகாரம் கைமாற்றப்பட்டது. ஆனால் இன்றைய ஆட்சியாளர்களால் அவற்றை நிறைவேற்ற இயலாது போயுள்ளது. அந்த வகையில் மேற்குறிப்பிட்ட குற்றங்களைப் புரிவோர் மாறியிருக்கிறார்களே யொழிய, குற்றங்கள் எந்த வகையிலும் குறைவடைந்ததாய் இல்லை. அதிலும் குற்றங்கள் யாவும் அதிகார பலத்தைப் பயன்படுத்தியே மேற் கொள்ளப்பட்டன.


இன்றைய ஆட்சித்தரப்பினர் பொது மக்களுக்கு வழங்கியிருந்த உறுதிமொழிகள் எவையும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. முன்னைய அரசின் காலத்து நிலமைகளில் எதுவும் மாற்றமுறாததோடு, இன்றைய அதிகாரத் தரப்பினர்களும் முன்னையவர்கள் போன்றே ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

அதே சமயம் நாட்டின் பொருளாதார நிலையிலும் ஆரோக்கியமான மாற்றமெதுவும் ஏற்பட்டு விடவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் இன்றைய ஆட்சித் தரப்பினரின் நிர்வாகத்தில் முன்னர் நிலவிய பொருளாதார நிலை தற்போது அதைவிட நலிவு நிலை கண்டுள்ளது. நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால் அரசின் வருமானம் 150 பில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளதாகவும், வரி அதிகரிப்பே இதற்குக் காரணமெனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். சாதாரண பொது மக்கள், வரிகள் அதிகரிப்புக் காரணமாக வாழ்க்கைச் சிரமங் களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. நாட்டின் ஏற்றுமதி குறைவடைந்தமையால், வெளிநாட்டு நாணயமாற்று வீதமும் குறைவடைந்துள்ளது.

எந்தவொரு உற்பத்தி முயற்சியும் புதிதாக ஆரம்பிக்கப்பட வில்லை. அம்பாந்தோட்டையில் வர்த்தக மையமொன்றை உருவாக்க, சீனாவுக்கு 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்கும் அரசின் திட்டம் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்துள்ளது. பெரும் தொழில் முயற்சியாளர்களும் பலதரப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

மக்களது விருப்பங்களை அறிந்து கொள்ளாது எவரோ வெளித் தரப்பினர்களது ஆலோசனைகளுக்கு அமைய அரசு செயற்பட முனைவதாகத் தோன்றுகிறது. இதனை நாட்டு மக்கள் விரும்பவில்லை.

அரசமைப்பை மாற்றி அமைத்தல், சிறப்பு அமைச்சொன்றை உருவாக்குதல் போன்ற அரசின் திட்டங்கள் பொதுமக்களைச் சலிப்படைய வைத்துள்ளன. இத்தகைய அரசியல் பின்னணியில், நாட்டின் எதிர்காலம் குறித்து திருப்திகரமான எதிர்பார்ப்பை மேற்கொள்ள இயலாதுள்ளது. எதிர்பார்ப்பு இல்லாதவிடத்து, நாட்டு மக்களது செயற்பாடுகளிலும் உற்சாகம் குன்றிவிடும். நாட்டு மக்களது அத்தகைய எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பு தோற்றுப் போயுள்ளது. நல்லாட்சி அரசின் இரண்டாண்டுகள் கால நிர்வாக முடிவில் வெளித்தெரியும் யதார்த்தம் இதுவேயாகும்.



## வாசகர் திருமுகம்

### மனமுண்டானால் இடமுண்டு

சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தப் பொறுப்பான தரப்பினர்கள் எவ்வளவுதான் முயன்றாலும், பொது நல நோக்குடன் சிந்தித்து நாமாக எம்மைத் திருத்திக் கொள்ளாவிடில் வேறு எவராலும் சமூகத்தைத் திருத்திவிட இயலாது என்பதற்கு காக்கைதீவுப் பிரதேசம் தகுந்ததொரு உதாரணம். யாழ். மாநகரசபையினரால் சேகரிக்கப்படும் கழிவுகள் ஒருபுறம், வெளி இடங்களிலிருந்து வாகனங்களில் கொண்டு வந்து கொட்டப்படும் கழிவுகள் ஒருபுறமென காக்கைதீவுப் பிரதேசம் கழிவுகளால் நிறைந்து பெரும் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய்களைப் பரப்பத்தக்க சூழலுள்ள இடமாகவும் மாறியுள்ளது. உரிய அதிகாரமுடைய தரப்பினர்கள் எவ்வளவுதான் முயற்சித்த போதிலும், அந்தப் பகுதியூடாகப் பிரயாணம் செய்வதென்பது சவால் மிக்க தொன்றாகவே அமைந்துள்ளது.

இதனைக் கருத்தில் எடுத்து எமது சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேண நாமாக முன் வந்தாலேயொழிய - நாமாக எம்மைத் திருத்திக் கொண்டாலேயொழிய - திருத்த முனைவதால் பயனேதும் விளையப் போவதில்லை. முடியும்; எம்மால் நிச்சயம் முடியும்! முயன்று சவாலை வெற்றிகொள்வோமே!

*இ.அரசரத்தினம், வண்ணார்பண்ணை*

### சட்டவிரோத செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படுமா?

சட்ட விரோதமாக போலியான பண நோட்டுக்களை அச்சடித்துப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் யாழ்.மாவட்டத்தில் சிலர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதான செய்தி பொது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்பெல்லாம் பெரும்பாலும் தென்பகுதிகளிலேயே இடம்பெற்று வந்த அத்தகைய சட்ட விரோத செயற்பாடுகள் தமிழர் பகுதிகளுக்கும் பரவியுள்ளமை எதிர்காலத்தில் தமிழர் பகுதிகளில் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சிக்கல்களையும் சிரமங்களையும் ஏற்படுத்தக் காரணமாக அமையக் கூடும். முன்னைய காலகட்ட மொன்றில் சில்லறைக் காசுகளுக்கு - நாணயக் குற்றிகளுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டால் அவற்றுக்காக ஆலாய்ப் பறந்த நிலை மாறி இனிவரும் காலத்தில் கைக்கு வரும் பெருந் தொகைப் பெறுமதி கொண்ட பணநோட்டுக்கள் சட்டபூர்வமானவையா அல்லது போலியானவையா? என்பதை உறுதி செய்து கொள்ள முடியாது சந்தேகத்தில் தலையைப் பிய்த்துக் கொள்ளும் அவலநிலை எம்மவர்களுக்கும் ஏற்படக்கூடும்.

*பொ.ரவீந்திரன், பரந்தன்*

# தோணி



ஆற்று நீரின் மேலே
ஆடிச் செல்லும் தோணி! - அது
காற்றடிக்கும் போக்கில்
கரையைச் சேரும் பார்நீ!

ஓடும் நீரின் மேலே
உலவுகின்ற தோணி! - அது
ஆடும் அலைகள் போலே
ஆடும் அழகைப் பார் நீ!

வட்ட வடிவ மாக
வளைத்துச் செய்த தோணி! - அது
தொட்டில் போல ஆற்றில்
தொடர்ந்து போகும் பார் நீ!

சுற்றிச் சுற்றி நீரில்
சுழன்று செல்லும் தோணி! - நீர்
வற்றிப் போகும் நாளில்
வரும்கரைக்குப் பார் நீ!



## வரலாற்றில் இன்றைய தினம்

1950 - இஸ்ரேலின் தலைநகர் ஜெருசெலமே என்பதாக இஸ்ரேல் சட்டமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
1958 - வீதிகளில் இறங்கி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து வெனிசுவெலா ஜனாதிபதி மார்கோஸ் பெரஸ் ஜிமினெஷ் நாட்டை விட்டு வெளியேறினார்.
1994 - தமிழரின்அங்கீகரிக்கப்பட்ட தலைவராக பிரபாவை ஏற்க வேண்டும். சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க தொண்டா நிபந்தனை.
1994 - குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் 2 லட்சத்து 25 ஆயிரம் பேர்.
1995 - வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு அரசு தீர்வை முன்வைக்க வேண்டும் என வாசுதேவா கருத்து.
2016 - புதியதொரு வாழ்க்கை தமிழருக்கு வேண்டுமென முல்லைத்தீவு பொங்கல்விழாவில் வைரமுத்து கோரிக்கை




மனித மூளையின் எடை 1.4 கிலோ கிராம்






ஈ தன் இறக்கைகளை 20,000 தடவை அடித்துக் கொள்ளும்.

## பொன்மொழிகள்

1. அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல; விடாமுயற்சியினால் தான்.
2. முன்நோக்கிச் செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் எவராவது உதவுவார்கள்.
3. ரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.
4. எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.
5. எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு எவரையோ சீர் திருத்த முயலுகிறார்கள்.
6. செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.
7. சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம்தான் வேண்டும்.
8. நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைய பொழுது மட்டுமே நம் கையில்.



## எங்கே நிம்மதி?

ஒரு குருவிடம் செல்வந்தர் ஒருவர் கேள்வி ஒன்றைக்கேட்டார். என் மனம் மிகவும் குழப்பத்தில் இருக்கிறது. என் பணியாள்கள்கூட எனக்கு உண்மையாக இல்லை. என் மனைவி, பிள்ளைகள் உட்பட உலகமே சுயநலக் கூட்டமாக உள்ளது. எவருமே சரியில்லை என்றார்.
இதைக் கேட்டுப் புன்னகைத்த குரு, கதை ஒன்றைச் சொன்னார்.
ஓர் ஊரில் ஆயிரம் கண்ணாடிகள் உள்ள அறை ஒன்று இருந்தது. அதற்குள் சென்று ஒரு சிறுமி விளையாடினாள்.
தன்னைச் சுற்றி ஆயிரம் குழந்தை களின் மலர்ந்த முகத்தைக் கண்டு மகிழ்ந்தாள். அவள் கை தட்டியவுடன், ஆயிரம் பிம்பங்களும் கை தட்டின. உலகிலேயே மகிழ்ச்சியான இடம் இதுதான்! என்று எண்ணி, அடிக்கடி அங்கே சென்று விளையாடினாள்.
அதே இடத்துக்கு ஒருநாள் மனநிலை சரியில்லாத ஒருவன் வந்தான். தன்னைச் சுற்றி ஆயிரம் கோபமான மனிதர்களைக் கண்டான்.
அச்சம் கொண்ட அவன், அந்த மனிதர்களை அடிக்க கை ஓங்கியவுடன், ஆயிரம் பிம்பங்களும் அவனை அடிக்க கை ஓங்கின.
உலகிலேயே மோசமான இடம் இதுதான் எனக் கூறி, அங்கிருந்து வெளியேறினான்.
இந்தச் சமூகம்தான் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை. நாம் எதை வெளிப்படுத்துகிறமோ அதையே சமூகம் பிரதிபலிக்கிறது.
உன் மனதைக் குழந்தையைப் போல் வைத்திரு.
உலகம் உனக்கு சொர்க்கமாகும் என்றார்.



சிங்கம் இரண்டு வயது ஆன பிறகே கர்ஜனை செய்ய முடியும்.




ஒரு கரண்டி தேனைச் சேகரிக்க 12 தேனீக்கள் தம் வாழ்நாள் முழுதும் உழைக்க வேண்டியிருக்கும்



பூமியின் மெழுகுவர்த்தி எவ்வாறு எரியும் என்று தெரியும்.

ஆனால் விண்வெளியில் நீல நிறத்தில் அரைக்கோள வடிவில் எரியும்





இருட்டு ராஜாவான வௌவால்களில் 1, 240 வகைகள் உள்ளன.

## நாளை தை-11

செவ்வாய்க்கிழமை -24.01.2017
திதி: துவாதசி பி.இ.03.24
நட்சத்திரம்: கேட்டை மா. 05.37
ராகுகாலம்:03.36-05.06 வரை
சுபநேரம்:11.06-12.36 வரை

| ஜனவரி | 2017 | | JANUARY | | |
|---|---|---|---|---|---|
| SUN ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE செவ்வாய் | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED புதன் | 4 | 11 | 18 | 25 | |
| THU வியாழன் | 5 | 12 | 19 | 26 | |
| FRI வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| SAT சனி | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## மிதுனம்

எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்யும் மிதுன ராசியினரே! இந்த கால கட்டத்தில் ராசிநாதன் புதன் ஏழாம் இடத்தில் இருக்கிறார். புதனும் குருவும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேருவார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். செவ்வாய் சஞ்சாரம் வீண் மனக்கவலையை உண்டாக்கும். எதிர்பாராத செலவு ஏற்படும். தொழில் ஸ்தானத்தை செவ்வாய் அலங்கரிக்க தொழில் ஸ்தானத்தை குரு பார்க்கிறார். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேலிடம் உங் களுக்கான பொறுப்புகளை அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும், நெடுந்தூர பயணங்களின்போதும் கவனமாக இருப்பது நல்லது. உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பெண்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும்.

கலைத்துறையினருக்கு: உடன் பணிபுரிபவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தேடி வரலாம். மற்றவர்களை திருப்தியடையச் செய்யும் வகையில் உங்களது செயல்கள் இருக்கும். தொழில்நுட்பத்துறை சார்ந்த துறையினருக்கு தொட்ட தெல்லாம் துலங்கும். அரசியல் துறையினருக்கு முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன் னம்பிக்கை அதிகரிக்கும். விடா முயற்சியுடன் ஈடுபட்டு, காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். விருப்பங்கள் கைகூடும்.

அடுத்தவரை அதிகாரம் செய்யும்போது கவனம் தேவை. வீண் பகை ஏற்படலாம். ராசியாதிபதி புதன் ராகுவுக்கு திரிகோணம் பெறுவதால் மற்றவர்களுக்காக பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்வது நல்லது.

**பரிகாரம்:**
பெருமாளை துளசியால் அர்ச்சனை செய்து நெய் தீபம் ஏற்றி வணங்க கஷ்டங்கள் துன்பங்கள் குறையும். காரிய வெற்றியும், நன்மையும் உண்டாகும்.

## கடகம்

வாக்குத் திறமையும் எளிதில் கோபம் அடையாத குணமும் கொண்ட கடக ராசியினரே! இந்த காலகட்டத்தில் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். தனாதிபதி சூரியன் ஏழாம் இடத்தில் சஞ்சாரத்தால் புத்தி தெளிவு உண்டாகும். எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும். வழக்குகளில் இருந்து வந்த மந்தநிலை மாறும். மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கப் பெறலாம்.

தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருக்கிறார். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கப் பெறும். வேலை தேடிக் கொண்டு இருப்பவர்களுக்கு உத்யோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். மேலிடம் அனுசரணையாக இருக்கும். குடும்பாதிபதி ராசியைப் பார்ப்பது நல்ல அமைப்பாகும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளை தலை தூக்கச் செய்யும். எனவே சாதுரியமாகப் பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும்போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களை பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பெண்களுக்கு எந்தவொரு விவகாரத்தையும் எதிர் கொள்ளும் மன வலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. கலைத்துறையினரின் முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். எடுத்த பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்- பொறுப்புகள் கூடும்- திறமை வெளிப்படும்- வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். அரசியல் துறையினரே, உங்களைப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். மேலிடத்தில் நெருக்கம் அதிகரிக்கும். மேலிடத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒப்பந்தங்கள் நல்ல முறையில் இருக்கும். மரியாதையும் அந்தஸ்தும் கூடும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான சிக்கல்கள் குறையும். எதிர்பார்த்த மதிப்பெண் பெற அதிக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

**பரிகாரம்:**
திங்கட்கிழமைகளில் அம்மனுக்கு தீபம் ஏற்றி வணங்க மனக் கவலை தீரும். எதிர்ப்புகள் அகலும். எல்லாவற்றிலும் நன்மைகள் உண்டாகும்.

# நல்ல ஒழுக்கமுடைய காவலர்களே நாட்டு மக்களால் மதிக்கப்படுவார்கள்

அன்றொரு நாள் வேலை முடியும் போது நள்ளிரவு ஆகி விட்டது. வேலை முடிந்தவுடன் களைத்துப் போய் எப்படியாவது வீட்டுக்குச் சென்று நிம்மதியாக நித்திரை கொள்ள வேண்டும் என்று எண்ணி, பணிமனையில் இருந்து எனது மோட்டார்·சைக்கிளை எடுத்து, அதை இயக்கி, வீடு நோக்கி வேகமாகச் செலுத்துகின்றேன். தற்காலத்தில் நள்ளிரவு வேளையில் எல்லோருக்கும் இருக்கும் படபடப்பு எனக்கும் இருந்தது, பயம் தொடர்ந்தது. அப்போது நிறைய டோர்ச் லைட் வெளிச்சம். மேலும் கீழுமாக என்னை நோக்கி பாய்ந்தன. எவரோ மறிக்கின்றார்கள். அவர்கள் வேறுயாரும் இல்லை பொலிஸார். எனது சாரதி அனுமதிப்பத்திரத்தைச் சோதனையிடுகின்றனர். அடையாள அட்டையை வாங்கிப் பரிசீலிக்கின்றனர். பின்னர் செல்ல அனுமதித்தனர்.

மீண்டும் மோட்டார் சைக்கிளை இயக்கி கொண்டு பயணத்தைத் தொடர்ந்தேன். சிறிது தூரத்தில் மேலும் சில பொலிஸார் வழிமறித்தனர். கொச்சைத் தமிழில் எங்கே போகின்றாய்? எனக் கேட்டனர். வீட்டுக்குப் போகின்றேன்- என்றேன். வெற்றிலை போடுறனியா? என்று மீண்டும் கேட்டார்கள்; இல்லை ஏன் என்றேன். சுண்ணாம்பு தேவைப்படுகின்றது என்று கூறிக்கொண்டு செல்வதற்கு அனுமதித்தனர். வெற்றிலையும் கையுமாக அந்தப் பொலிஸார் வீதியில் நிற்பது வேடிக்கையாக இருந்தது. வீட்டை அண்மிப்பதற்கு சில மீற்றர் தூரம் தான் உள்ளது. எனக்கு எதிரே வேகமாக வந்த படி ரக வாகனம் ஒன்று தனது வெளிச்சத்தை என்னை நோக்கி சமிக்ஞை காட்டியது. அந்த வாகனத்தை அண்மிக்கும் போது திடீரென வாகனத்தில் இருந்து பாய்ந்து ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் இறங்கினார். இறங்கியவர் எனது மூக்குடன் அவருடைய மூக்கு முட்டும்படியாக என்னை நெருங்கினார். அவரிடம் இருந்து மதுவின் நாற்றம் வீசியது. இருந்தும் அவர் குடித்து விட்டு வாறியா? என்று என்னைக் கேட்டார். எப்படி இருக்கும் அந்த நிமிடம்? அப்படி தான் எனக்கும் இருந்தது. வாகனத்தின் உள்ளே உயரதிகாரியும் அமர்ந்திருக்கின்றார். அவருடைய கேள்விக்கு இல்லை என்று கூறினேன். எனது மோட்டார் சைக் கிளின் ஆவணங்களை எடுக்குமாறு பணித்தார்கள், எடுத்துக் கொடுத்தேன். தள்ளாடியவாறு அதை பரிசோதித்தார், ஏதோ பதிந்தார். பின்னர் சரி போங்க - என்றார்.

இவற்றை எல்லாம் சந்திக்கும்போது அண்மையில் சாவடைந்த பல்கலைக்கழக மாணவர்களின் ஞாபகம் அடிக்கொருமுறை வந்து சென்றது. எதற்குப் பொலிஸார் மறிக்கின்றனர் என்பது எவருக்கும் புரிவதில்லை, எவரை வேண்டுமானாலும் மறிப்பார்கள், என்ன வேண்டுமானாலும் பேசுவார்கள், அவர்கள் கேட்பதற்குப் பதிலளிக்க வேண்டும். இதுதான் இன்று எமது நிலை. அவர்கள் மறிக்கும்போது நிறுத்தவில்லை என்றால் சுடுவார்கள் என்பதை அன்றைய தினம் தெளிவாகப் புரிந்து கொண்டேன். என்னதான் நல்லாட்சி என்றும், கூட்டாட்சி என்றும்-நாங்கள் பேசிக்கொண்டாலும் இவர்களைப் போன்றவர்களுடைய செயற்பாடுகள் அந்த ஆட்சி மீது கோபத்தை ஏற்படுத்தத்தான் செய் கின்றது. இப்படிப்பட்ட பொலிஸார், மக்களுக்குச் சேவையாற்றுபவர்கள் அல்ல. கண்ணியம், கட்டுப் பாடுகள் நிறைந்த பொலிஸ் அதிகாரிகள்-குடாநாட்டில் நியமிக்கப்பட்டாலும், அவர்களின் கீழ் உள்ள சில பொலிஸ் உத்தியோகத்தர்களுடைய செயற்பாடுகள் அவர்களுடைய நல்ல பெயரை மழுங்கடிக்கத்தான் செய்கின்றன. இவ்வாறான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு, சரியான முறையில் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் பொலிஸார் மீது எமக்கு மதிப்பும், மரியாதையும் ஏற்படும். இல்லை என்றால் பொலிஸார் விரோதிகளாகவே பார்க்கப்படுவர் என்பது எனது கருத்து.





# பாவங்களை அறவே ஒழிக்கும் பஞ்சரத்தினங்கள்

கே.எஸ்.சிவஞானராஜா

ஆசைகளால் விளைந்துள்ள இந்தப்பூமியில் அகப்பட்டு விடுபடமுடியாமல் மனிதன் தத்தளிப்பதைப் பார்த்துச் சிரிப்பவன் இறைவன் ஒருவனாகத்தான் இருக்கமுடியும்! ஒன்றுக்கு இரண்டு என்ற அடிப்படையிலேதான் மனிதன் சிந்திக்கின்றான். வாகனம் இரண்டு, வீடு இரண்டு, அலைபேசி இரண்டு, தொழில் இரண்டு, தொலைக்காட்சி இரண்டு, மேலதிக வகுப்பு இரண்டு, குழந்தை இரண்டு, பார்வை இரண்டு, படிப்பு இரண்டு, பதவி இரண்டு, பலவீனம் இரண்டு, பகிடிக்கு இரண்டு, கொறிக்க இரண்டு, குடிக்க இரண்டு, கும்பிட இரண்டு என எதிலும் இரண்டு இரண்டு என்று கொடிகட்டிப்பறக்கும் மனிதன் இரண்டிலிருந்து மூன்றுக்குப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மூன்றும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இல்லறத்தில் இருந்து கொண்டு துறவறத்துக்குப் போக எண்ணுவதும், துறவறத்தில் இருப்பவர்கள் இல்லறத்துக்கு வந்திட எண்ணுவதும் ஒன்றும் புதிதல்ல. போகலாம், வரலாம், மாறலாம், நினைக்கலாம், தொடலாம், விடலாம், முடிக்கலாம் என்றவாறு துன்பங்களையே கொள்முதல் செய்யும் குடும்பங்களாகவும், உலகமாகவும் காலம் மாற்றியமைத்துள்ளது. யாவுமே கொந்தளிப்புக்களே!

பதவிக்குக் கொந்தளிப்பு, கதிரைக்குக் கொந்தளிப்பு, படம் பார்க்கக் கொந்தளிப்பு, சினிமாவில் நடிக்க கொந்தளிப்பு மல்லுக்கட்டக் கொந்தளிப்பு, ஆளைமாற்றக் கொந்தளிப்பு, ஆசனம் பிடிக்கக் கொந்தளிப்பு, காதலிக்கக் கொந்தளிப்பு கடைகளில் கொந்தளிப்பு, விளையாட்டில் கொந்தளிப்பு, காமத்தில் கொந்தளிப்பு, இடம் மாற்றக் கொந்தளிப்பு, பசுவதைக்குக் கொந்தளிப்பு, மதங்களிடையே கொந்தளிப்பு, இனங்களுக்கிடையே கொந்தளிப்பு வீட்டுக்குக் கொந்தளிப்பு, பரீட்சைக்குக் கொந்தளிப்பு, வேள்விக்குக் கொந்தளிப்பு, இறப்பில் கொந்தளிப்பு, வேகத்தில் கொந்தளிப்பு - இவ்வாறு அனைத் திலுமே கிளர்ந்தெழுதல் என்பது சாதாரணமாகக் கலியுகத்தில் நடைபெற்ற வண்ணமுள்ளன. இதைவிடப் பெற்றோரின் கொந்தளிப்பு, வேலைநேரக் கொந்தளிப்பு, வீதிகளின் கொந்தளிப்பு, தலைவிதியின் கொந்தளிப்பு, போராட்டங்களின் கொந்தளிப்பு, போதைப் பிரியர்களின் கொந்தளிப்பு என அட்டகாசமான ஆர்ப்பரிப்புக்கள் ஏராளம் ஏராளம். இவையெல்லாவற்றுக்கு மான விடுதலையே ஆன்மிகமும் நுண் கலைகளுமாகும். சமயப்பக்தியோடு, ஏதாவது ஒரு கலையை விருப்பத்தோடு படிப்போமாக இருந்தால் யாதொரு துன்பமும் வந்தணு காது. அதற்கப்பால் பாவங்கள் செய்வதற்குத் துணியவும் மாட்டோம். மாறாக மனச்சாட்சி உயிர் பெற்றுப் பாவங்களைப் பறந்தோடச் செய்யும்.

### தியாகப்பிரம்மம்

இருபத்தொரு வருடங்களில், இராம நாமத்தைத் தொண்ணூற்றாறு கோடிதரம் உச் சரித்து, ஸ்ரீராம பிரானையும் சீதா தரிசனத்தோடு இலட்சுமணப் பெருமானையும் நேரிலே கண்டு பேறுகொண்டவர். இவரது காலம் 1767.05.04 தொடக்கம் 1847.01.06 ஆகும். இல்லற வாழ்விலே திளைத்து, வாழ்நாள் முழுமையாக ஸ்ரீ இராமபிரானையே பாடி ஆனந்த வாழ்வில் மிளிர்ந்தவர். தம்புராவோடு ஆயிரமாயிரம் உருப்படிகளைப் பக்திசொட்டச் சொட்ட இயற்றி பாடியருளியவர். சகல பாடல்களிலும் இராமதரிசனத்துக்காகவும், அவன் கருணைக்காகவும் ஏங்குகின்றார்.

இராமா! நான் இந்த உலகப் பேராசையினில் மூழ்கி அழுந்தி, வருந்தி, மீண்டும் மீண்டும் உழல்கின்றேன். இத்தனை காலங்காலமாய் உன்னை மறந்து, உன்பெருமைகளை உணராது, சிற்றின்பங்களில் வாழ்நாளைக் கழித்துவிட்டேன். ராமா! உன்னை நினைந்து உருகிப் பாடி அனுபவிப்பதிலேயே எவ்வளவு சுகம் எவ்வளவு ஆனந்தம், எத்தனை திருப்தி எத்தனை பேறு. இவை எல்லாவற்றையும் மதியாது, உலக சுக போகங்களிலேயே மெய்யாகவே அவப்பொழுதுக்கு ஆளாகிவிட்டேன்.

இனிமேல் உன்னைப் பாடுதலின்றி வேறொன்றுமறியேன் என்று பாவ விமோசனம் கருதிப்பாடப்பட்டவையே தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினங்களாகும்.

பகுள பஞ்சமியன்று, தைமாத சிறப்பு ஆராதனை வைபவமாக இந்தியாவிலும் இலங்கையிலும், உலக ஏனைய நாடுகளிலும் மிகவும் பக்திபூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. தியாகராஜருடைய அத்தனை கீர்த்தனைகளிலும் இராம பக்தி பிரவாகிக்கின்றது. அடுத்து இராக மகத்துவம், மனோதர்மம் மேலிடுகிறது. அடேயப்பா அவர் அருளி ஆராதிக் கின்ற பஞ்ச இரத்தினக் கீர்த்தனைகள் பக்தி ரஸம் ததும்பி வழிவனவாகும்.

“வாழ்நாள் முழுமையாக ஸ்ரீ இராமபிரானையே பாடி ஆனந்த வாழ்வில் மிளிர்ந்தவர். தம்புராவோடு ஆயிரமாயிரம் உருப்படிகளைப் பக்திசொட்டச் சொட்ட இயற்றி பாடியருளியவர். சகல பாடல்களிலும் இராமதரிசனத்துக்காகவும், அவன் கருணைக் காகவும் ஏங்குகின்றார்.
இராமா! நான் இந்த உலகப் பேராசையினில் மூழ்கி அழுந்தி, வருந்தி, மீண்டும் மீண்டும் உழல்கின்றேன். இத்தனை காலங்காலமாய் உன்னை மறந்து, உன் பெருமைகளை உணராது, சிற்றின்பங்களில் வாழ்நாளைக் கழித்துவிட்டேன். ராமா! உன்னை நினைந்து உருகிப் பாடி அனுபவிப்பதிலேயே எவ்வளவு சுகம் எவ்வளவு ஆனந்தம், எத்தனைதிருப்தி எத்தனை பேறு. இவை எல்லாவற்றையும் மதியாது, உலக சுகபோகங்களிலேயே மெய்யாகவே அவப்பொழுதுக்கு ஆளாகிவிட்டேன்.

### ஆராதனை

மார்கழி மாத இசைவிழாவைத் தொடர்ந்து, தியாகராஜ உற்சவ ஆராதனை தை மாத அபரபக்க பகுள பஞ்சமியன்று இந்தியாவில் அவர் பிறந்த ஊரான திருவையாறில் இந்த வருடம் கடந்த 17 ஆம் திகதி சிறப்பாகவும், தீராத பயபக்தியோடும் கொண்டாடப்பட்டது. அதேபோல மும்பையிலும் கொண்டாடப்பட்டது. ஆயிரமாயிரம் இசைக்கலைஞர்கள் ஆராதனையில் பங்குபற்றிப் பாடி வரம் பெற்றுள்ளார்கள். வரம் அவர்களுக்கு மட்டுமல்ல, உலக அமைதிக்கும், சமாதான சகவாழ்வுக்குமேயாகும். பாடுவோர்க்கும், கேட்போருக்கும், பங்குபற்றியோர்க்கும் பாவங்களிலிருந்து விடுதலைபெற்று, தீர்க்க ஆயுள் பெறுவார்கள் என்பது உறுதியாகும். அனுபவியுங்கள்

பஞ்சரத்தினங்கள்

01.ஜெகதானந்தகாரகா - நாட்டை இராகம்
02.துடுகு கல நன்னே - கௌளை இராகம்,
03.சாதிஞ்சனே - ஆரபி இராகம்,
04.எந்தரோ மகானு - ஸ்ரீ இராகம்,
05.கனகனருசி - வராளி இராகம்

இலங்கையில் வட இலங்கைச் சங்கீதசபை, இளங்கலைஞர் மன்றம், கம்பன் கழகம், பல்கலைக்கழக நுண்கலைப் பீடம் ஆகியவற்றில் இந்த ஆராதனை நடைபெறும் போது தயவு செய்து தூங்கிவிடாதீர்கள்.

# ஜோதிகா நடிக்கும் மகளிர் மட்டும்






நீண்ட இடைவெளிக்கு பிறகு 36 வயதினிலே படத்தின் மூலம் சினிமாவுக்கு திரும்பிய நடிகை ஜோதிகா, தற்போது பிரம்மா இயக்கத்தில் மகளிர் மட்டும் என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் நாசர், லிவிங்ஸ்டன், சரண்யா, பானுப்ரியா, ஊர்வசி ஆகியோரும் நடிக்கின்றனர்.

நடிகர் சூர்யா தன்னுடைய மனைவி நடித்து வரும் மகளிர் மட்டும் படத்தின் இரண்டாவது போஸ்டரை வெளியிட்டுள்ளார். இந்தப் படத்தில் ஜோதிகா, பிரபா என்ற கதாபாத்திரத்தில் நடித்து வருவதாகவும் புல்லட் பைக் ஓட்டும் பெண்ணாகவும் அவர் நடித்திருக்கிறார் என்று சூர்யா தன்னுடைய ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தப் படம் பற்றி இயக்குநர் கூறுகையில், ஆவணப்படம் எடுக்கும் பெண்ணாக ஜோதிகா நடித்துள்ளார். ஆவணப் படம் எடுக்கும்போது அவர் சந்திக்கும் பிரச் சினைகள்தான் இந்தப் படம் என்று அவர்கூறியுள்ளார். முழுக்கமுழுக்கபெண்களின் பிரச்சினைகளை அலசும் படமாக திரைக்கதையை அமைத்திருக்கிறாராம். பிரம்மா இயக்கும் இப்படத்துக்கு ஜிப்ரான் இசை அமைக்கிறார். மணிகண்டன் ஒளிப்பதிவு செய்கிறார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**இடபம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். பகைவரால் உருவான இடையூறு விலகும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். பெண்கள், கணவரின் அன்பை பெறுவர். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.

**கடகம்:** குடும்பத்தில் ஒற்றுமை காக்க முயல்வீர்கள். தொழிலில் உருவாகிற இடையூறுகளைச் சரிசெய்வது நல்லது. வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். பெண்கள் பிறருக்காக, பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**சிங்கம்:** கவனக்குறைவால் பணிகளில் குளறுபடி ஏற்படலாம். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் லாபம் ஓரளவு இருக்கும். பெண்களுக்கு செலவுக்கான பணத் தேவை அதிகரிக்கும்.

**கன்னி:** சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**துலாம்:** மனதில் குழப்பம் உருவாகி, விலகும். தொழிலில் வளர்ச்சி பெற, கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலம் சீராக இருக்கும். எதிர் பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** மற்றவர் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவர். மாணவர்கள் ஆர்வமாகப் படிப்பர்.

**தனுசு:** உங்களின் நற்செயலை மற்றவர் குறை சொல்வர். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** திட்டமிட்ட பணி, குறித்த காலத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். உறவினர் வகையில் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**கும்பம்:** நண்பரால் உதவி கிடைக்கும். பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்தது நிறைவேற்றுவதில், தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கத்துடன் செலவழிப்பர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 2 |
| | | | | | | | 1 | 4 |
| 1 | 3 | | | 5 | | | | 7 |
| | | 5 | 6 | | | | | |
| | 6 | | 2 | 9 | 7 | | 4 | |
| | | | | | 3 | 6 | | |
| 9 | | | | 7 | | | 8 | 1 |
| 4 | 8 | | | | | | | |
| 2 | | | 9 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 6 | 3 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 1 | 9 | 7 | 3 | 4 |
| 9 | 3 | 1 | 7 | 5 | 4 | 2 | 6 | 8 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 4 | 5 |
| 8 | 9 | 3 | 4 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 4 | 5 | 6 | 3 | 2 | 1 | 9 | 8 | 7 |
| 5 | 4 | 8 | 9 | 6 | 7 | 1 | 2 | 3 |
| 3 | 1 | 9 | 5 | 4 | 2 | 8 | 7 | 6 |
| 2 | 6 | 7 | 1 | 8 | 3 | 4 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

எங்க தாத்தா தூக்கத்திலேயே செத்துப் போய்ட்டாரு.... நல்ல சாவு...



ஆனா அவர் ஓடின கார்ல இருந்த 5 பேரும் தான் அலறிக்கிட்டே செத்தாங்கய்யா லூசுப்பயலுக....!

ஜன 31, 1 எஸ்எம்எஸ்க்கு காசு அடடா நாட்டில இவனுக தொல்லை தாங்கல...



ருவிட்டர், முகநூல், வாட்ஸ் அப் வந்ததுக்கு பிறகு இன்னுமா எஸ் எம் எஸ் அனுப்புறாங்க...




மக்கள்: உங்க கிட்ட என்ன வாங்கிட்டு வரச்சொன்னோம்
ஓபிஎஸ்: ஜல்லிக்கட்டு நடத்த நிரந்தரத் தீர்வு
மக்கள்: நீங்க என்ன வாங்கிட்டு வந்திருக்கீங்க?
ஓபிஎஸ்: அவசரச் சட்டம்
மக்கள்: அப்போ நிரந்தரத் தீர்வு எங்க?
ஓபிஎஸ்: அதாண்ணே இது!

**கோழியின் கிறுக்கல்!**
வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்ந்து எதிர்படும் சிறுசிறு மகிழ்வான தருணங்களை அனுபவித்து விடுங்கள்! அவை வாழ்வில் மீண்டும் கிடைக்காமலும் போகலாம்!

"ஒரு மருத்துவரின் புலம்பல்"
கண்ட எண்ணெயில பொரிச்ச வடையையும்,
சமோசாவையும் சாப்பிடுறவங்க...!
சாக்கடைக்கு பக்கத்தில உள்ள குழாயிலிருந்து
எடுத்த தண்ணில முக்கிக் கொடுக்கற
பானிபூரியை சாப்பிடுறாங்க...!
பூச்சிக் கொல்லி மருந்துகள் மூலமே
வளர்க்கப்பட்ட காய்கறிகளையும்,
பழங்களையும் சாப்பிடுறாங்க...!
கழிப்பறைகளைச் சுத்தம் செய்யும் என்று
நிரூபிக்கப்பட்ட கேக்கையும், பெப்ஸியையும்
உண்கிராங்க...!
தண்ணியடிக்கிறானுங்க...!
சிகரெட் குடிக்கிறானுங்க...!
குட்கா... பான்னு புகையிலையைப் போட்டு
மெல்றானுவ...!
றோட்டில புகைக்கு நடுவே இரண்டு மணி
நேரம் காத்தை சுவாசிச்சு வீட்டுக்கு வரானுவ...!
இவ்வளவும் பண்ணிட்டு, உடம்பு சரியில்
லைன்னு இங்க வந்து நான் ஒரு மருந்து
எடுத்துக் கொடுத்தா, இந்த மருந்தாலே
ஏதாவது பக்கவிளைவு இருக்கா என்று
கேக்கிறார்கள். முடியல .... சாமி!

## மனப் பிரச்சினைகளை குறைக்கும் அஞ்சலி முத்திரை



அஞ்சலி என்பது கைகளைக் கூப்பி, வணங்குவதையும் நன்றி தெரிவித்தலையும் குறிக்கும். பெரியவர்களை வணங்கவும் வரவேற்கவும் நன்றி செலுத்துவும் விடைபெறவும் இந்த அஞ்சலி முத்திரையை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால், இதுவும் முத்திரைகளுள் ஒன்றுதான். நல்ல உணர்வுகள், சமநிலையான மனநிலை ஆகியவற்றைத் தருகிறது இந்த அஞ்சலி முத்திரை.

**செய்முறை :**
தரையில் நின்றுகொண்டோ, சப்பணம் இட்டு அமர்ந்தோ செய்யலாம். வணக்கம் வைப்பதற்கு கைகளை எப்படி வைக்கிறோமோ அதுதான் அஞ்சலி முத்திரை. அதாவது, கைகளானது மேலே, கீழே என ஏற்ற இறக்கமாக இருக்கக் கூடாது. இரண்டு கைகளுக்கும் நடுவே இடைவெளியும் இருக்கக் கூடாது. சரியான அளவில் சரியான அழுத்தத்தில் இருக்க வேண்டும். 10 - 15 நிமிடங்கள் வரை ஒரு நாளைக்கு இரண்டு முதல் ஐந்து முறை செய்யலாம்.

**பயன்கள் :**
மூளையின் வலது மற்றும் இடதுபுறச் செயற்பாட்டை சமன் செய்கிறது. அமைதி, தெளிவு கிடைக்கும்.
விரல்கள், கைகள், மணிக்கட்டு, முழங்கை வலுப்பெறுகிறது. உடலுக்கு சக்தி மற்றும் பலம் கிடைக்கிறது.
இதயத் துடிப்புச் சீராகிறது.
மனப்பிரச்சினைகள் மற்றும் உடல் சார்ந்த பிரச்சினைகள் குறையும்.
ஒரு செயலைத் தொடங்குவதற்கும் முடிப்பதற்கும் இந்த முத்திரையைச் செய்வது நல்லது.

## சைவ உணவுகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படும் நன்மைகள்



சைவ உணவுகளை எடுத்துக்கொள்வது உங்களது உடல் நலனுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் நல்லது என்பது குறித்து மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் தரும் விளக்கம் இங்கே:

**நச்சுக்களை அகற்றுபவை:**
நார்சத்து மிகுந்த சுரைக்காய், பூசணி, பசளைக்கீரை மற்றும் முட்டைகோஸ் ஆகியவை சைவ உணவு வகைகளில் மிக முக்கியமானவை. உடலில் சேரும் நச்சுகளை அகற்றும் திறன் மேற்கூறிய காய்கறிகளுக்கு உண்டு. அதே சமயம் முட்டை, மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றில் புரதச்சத்து இருக்கும் அளவுக்கு நார்ச்சத்து இருப்பதில்லை.

**எலும்புகளை வலுவாக்குபவை:**
இறைச்சி உடலில் புரதத்தை அதிகமாக்கி, கொழுப்பை கூட்ட வழி வகுக்கக் கூடியது. மேலும் நமது சிறுநீரகத்திற்கு அதிக வேலைப் பளுவை ஏற்படுத்தச் செய்வதோடு, எலும்பிலுள்ள சல்சியத்தையும் உறிஞ்சி விடுகிறது. அதே சமயம் சைவ உணவில் இந்த பிரச்சினை இல்லை.

**காபோவைதரேட் பற்றாக்குறை:**
அசைவ உணவு அதிகம் எடுத்துக்கொள்பவர்களுக்கு காபோவைதரேட் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பும் அதிகம் உண்டு. இதனால் உடல் தனது இயக்கத்திற்கு தேவையான சக்தியை காபோவைதரேட்டிலிருந்து பெறுவதற்கு பதிலாக சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பிலிருந்து எடுத்துக்கொள்ளும் கீட்டோனியம் என்ற நிலை ஏற்படும்.

**எளிதில் ஜீரணம்:**
சைவ உணவுகள் மூலமாக கிடைக்கும் ஹார்போஹைட்ரேட் படிப்படியாக ஜீரணமாக உடலுக்கு தேவையான குளுகோஸ் சத்தை சீராக அளிக்கும். அதே சமயம் கொழுப்பும், புரதமும் அதிகம் நிறைந்த இறைச்சி உணவு ஜீரணமாகவே அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். சில சமயங்களில் சிலருக்கு அது சிரமமாகக் கூட ஆகிவிடும்.

**ஆரோக்கியமான மேனி:**
பீட்ரூட், தக்காளி, பூசணி, பாகற்காய் போன்ற சைவ உணவுகள் குருதியை நன்கு சுத்திகரிப்பதோடு, தோலுக்கு மினுமினுப்பையும் கொடுக்கிறது. அத்துடன் கொய்யா, அப்பிள், பேரிக்காய் போன்ற பழங்களை உண்பதும் மேனிக்கு மினுமினுப்பைக் கூட்டும்.

## பாதப் பித்த வெடிப்பை குணமாக்க இயற்கை முறைகள்

**பாத வெடிப்புகளுக்கான தேன் க்ரீம்**

**தேவையான பொருள்கள் :**
தேன் - 1 கப்
பால் - 1 கரண்டி
தோடம்பழச் சாறு - 2 கரண்டி


தேனை லேசாக சூடுபடுத்துங்கள். பின்னர் அதில் பால் மற்றும் தோடம் பழச் சாறை கலக்கவும். பாதம் மிகவும் கடினமாக இருந்தால் தோடம்பழச் சாறை அதிகப்படுத்திக் கொள் ளவும். பின்னர் இதனை தினமும் இரவில் பாதங்களில் பூசிக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் வெடிப்பு மறைந்து மென்மையான பாதம் கிடைக்கும்.

**பயிற்றம் மாவு- வேப்பிலை கலவை :**
வேப்பிலையை அரைத்து அதனுடன் பயிற்றம் பருப்பு பொடி, மஞ்சள் மற்றும் எலுமிச்சை சாற்றை கலந்து தினமும் பாதங்களில் தடவுங்கள். 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். தொடர்ந்து செய்தால் சுருக்கங்களின்றி, வெடிப்பு மறைந்து பாதம் பளபளக்கும்.

**அப்பிள் சைடர் வினிகர் :**
கால் பக்கெட் வெதுவெதுப்பான நீரில் 2 கப் அப்பிள் சைடர் வினிகரை கலந்து அதில் கால்களை அமிழ்த்துங்கள். இதிலுள்ள அமிலத்தன்மை பாதத்திலுள்ள கடினத்தன்மையை அகற்றி மென்மையாக்கிவிடும். வெடிப்பும் வேகமாக மறைந்து விடும்.



## முகத்தை எப்படி சுத்தம் செய்யலாம்




1 முகத்தைக் கழுவி சுத்தம் செய்து கொள்ளவும்.
2 படத்தில் காட்டியவாறு பவுன்டேசன் இட்டுக் கொள்க.
3 அதன் பின்னர் சற்று அடர்த்தியான நிறத்தில் படத்தில் காட்டியவாறு பவுடர் பூசிக் கொள்க.
4, 5 பின்னர் கையினால் மென்மையான முறையில் முகத்தில் பூசிக் கொள்க. இதன் போது இரு நிறங்களும் சேர்ந்திருப்பதை உறுதி செய்து கொள்க.
6, பின்னர் உதட்டுப்பூச்சு, கண்பூச்சுக்களை செய்து ஒப்பனையை நிறைவு செய்க.



# சுவை ஆறு அல்ல இருபத்தைந்து

இனிப்பு, கசப்பு, உறைப்பு உவர்ப்பு, புளிப்பு மற்றும் துவர்ப்பு என்று ஆறுவித சுவைகளை எமது நாக்கு அறியக்கூடியது. இதனையே நாம் சொல்லிவருகிறோம் மேலைநாட்டவர்களின் மொழிகளில் சுவைகள் என்பது ஐந்து வகையாக மட்டும்தான் உள்ளன. அவர்கள் துவர்ப்புச் சுவையை விட்டு விட்டதாக சொல்கின்றனர். இந்த விடயங்கள் இப்படியிருக்க ஜப்பானியர்கள் 'யுமாமி' என்ற ஒரு சுவையைக் குறிப்பிடுகிறார்கள். இந்தச் சுவையானது மாமிசம் உண்ணும் போது அனுபவிக்கும் சுவை என்பதாக அவர்கள் விளக்கம் தருகின்றனர். இதையறிந்துகொண்டு ஆங்கிலத்தில் சேவரி (Serory) என்று புதுச் சுவை உணர்வை அவர்கள் மொழியில் சேர்த்துக் கொண்டார்கள். சேர்த்துக் கொண்டுள்ளனர். உண்மையில் எமது நாக்கு 25 இற்க்கும் மேற்பட்ட சுவைகளை உணரக்கூடியது.


இனிப்புச் சுவையுடைய சக்கரைப் பொருள்கள் உடலும் மூளையும் தொடர்ந்து வேலை செய்வதற்குத் தேவையான எரிசக்தியை வழங்குகின்றன. உப்புச்சுவை குருதிக்கு வேண்டிய எலெக்ட்ரோ லைட் எனப்படும் உலோக அயனிகளை வழங்குகிறது. குருதியில் உப்பு அளவு குறைந்தால் இதயம் வேகமாகவும் சமனிலை இன்றியும் துடிக்க ஆரம்பித்துவிடுகிறது.

சேவரி அல்லது யுமாமி என்று அழைக்கப்படும் மாமிசச் சுவை (தமிழில் இதற்கு இணையான சொல் இல்லை எனச் சொல்லப்படுகிறது) உடலுக்கு தென்பைத் தருகின்ற புரதத்தை வழங்கும் பொருள்களுக்குச் சொந்தமானது. எனவே இனிப்பு, உவர்ப்பு, சேவரி (சைவ உணவுப் பழக்கமுடையவர்களுக்கு பருப்பிலிருந்து இச்சுவை கிடைக்கிறது) ஆகிய மூன்றும் நாம் விரும்பிச் செல்கின்ற சுவைகளாக விளங்குகின்றன.

மனிதர்கள் வேடர்களாக வாழ்ந்த காலங்களில் மேற்சொன்ன மூன்று சுவைகளையும் நாடி ஒடித் திரிந்ததில் ஒரு காரணமிருக்கிறது. அன்றைய காலத்தில் மனிதர்களுக்கு கரும்பாலையோ, உப்பளங்களோ, புரொயிலர் கோழிக் கடைகளோ இருந்திருக்கவில்லை. உடம்பில் உயிர் நிலைத்திருக்க வேண்டுமானால் மூன்று சுவைகளும் அவனுக்கு முக்கியமாக இருந்தது. இன்றும் கூட அதே மூன்று சுவைகள் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. அளவு பேதமின்றி அவற்றைப் உணவாக்கிக்கொண்டு நீரிழிவு, மனப்பதற்றம் மற்றும் மாரடைப்புபோன்றநோய்களால்துன்புறுகிறோம். ஐஸ்கிரீம் வேண்டுமானால் அதில் சீனி என்பது இருந்துவிடக் கூடாது, ஊறுகாயில் உப்பு அதிகம் உறைக்க வேண்டும். ஆனால் அதில் உப்பு என்பது இருக்கக்கூடாது, மாமிசச் சுவையும் அதிகம் வேண்டும். ஆனால் சைவமாக இருக்கவேண்டும் என்று எல்லோருக்கும் ஆசையிருக்கிறது. இது சாத்தியமா..?

உண்மையில் நாம் நாக்குக்கு அடிமையானவர்கள் தான். அதிலிருந்து நம்மால் விடுபட முடியாது. விடுபட முடியவில்லை. நாக்கின் பிடியிலிருந்து தப்பிக்க ஒரு வழியிருக்கிறது. துளியளவான சக்கரை போட்டாலும் அது இரண்டு கரண்டி சீனியின் இனிப்பைத் தரவேண்டும். சிட்டிகை உப்பிலிருந்து கால் தேக்கரண்டி உப்பின் கரிப்பு கிடைக்க வேண்டும்;. மாமிசமே இல்லாமல் மாமிசச் சுவையை ஏதாவது ஒரு உணவுப் பொருள் தரவேண்டும். இப்படி ஒரு மாய மந்திரம் அல்லது தந்திரம் எமக்குக் கிடைத்து விட்டால் கொலஸ்ட்ரோல், குருதி அழுத்தம், எடை கூடுவது போன்ற பிரச்சினையிலிருந்து விடுபட்டு நாம் விருப்பம் போல உணவருந்தலாம். எப்படிச் சீனிக்கு அதிகமாக இனிப்பைத் தருவது..? உப்புக்கு எப்படி அதிக உவர்ப்பைத்தருவது? மாமிசத்திற்கு எப்படித்திகட்டும் அளவுக்குரித்தான அதிக சுவையை ஊட்டுவது..?

(24 ஆம் பக்கம் பார்க்க)




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இரத்தினம்மா (பவி)
கேசவலிங்கம்
தோற்றம்
06.11.1952
மறைவு
04.02.2016

மன்மத வருடம் தை மாதம் 21 ஆம் நாள் (04.02.2016) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இரத்தினம்மா (பவி) கேசவலிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நினைவுக்ள் இன்று (23.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (ஜே/7856)(12.16) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
முருகேசு
அப்புத்துரை
திதி: தைமாத தேய்பிறை ஏகாதசி
23.01.2017
தோற்றம்
04.10.1939
மறைவு
04.02.2016

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறையுதையா எம் உள்ளங்களில்
என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(ஜே.7834) (13.16)
இல.82A, தாவடி தெற்கு,
கொக்குவில்.
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நட்பினி நல்லசிங்கம்
அவர்களின் தாயார்
திருமதி தெய்வானை கதிரேசு
அவர்கள் 21.01.2017 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை -
- கொக்குவில். (ஜே 7886) (11,17,18)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில்
கண்டாவளைப் பிரிவில் கடமையாற்றும்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு.ச.தனுஜன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
பரமேஸ்வரி சதானந்ததாசன்
அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதா பங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருக்கோயிலில் (அம்பாறை மாவட்டம்) 22.01.2017 இல் நடைபெற்றது.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
உத்தியோகத்தர்கள். நலன்புரிசங்கம்,
யாழ்ப்பாணம்.

தோற்றம் 05.12.1945
மறைவு 21.01.2017

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராசா இரங்கநாதன்
பிறப்பு
01.04.1951
இறப்பு
15.01.2011
திதி: தைமாத பூர்வபக்க தாரநசி

குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கிறேன்.

29/21 உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
அன்பு மனைவி
இ.சாரதாதேவி

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
விநாசித்தம்பி
சோமசுந்தரம்
(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் - ஸ்தாபகர், சித்தி ஹார்ட்வெயார் அன் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்)
(திதி : அபரபக்க ஏகாதசி (23.01.2017)
அன்னை மடியில்
09.04.1940
சிவன் அடியில்
25.01.2006

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள்
சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D. 1/1, சென்ரல் றோட்,
கொழும்பு 12.
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# ஜல்லிக்கட்டுப் போராட்டம் குழப்பத்தில்

ஜல்லிக்கட்டுக்காக தமிழகத்தில் கடந்த சில தினங்களாக நடத்தப்பட்ட போராட்டம் நேற்றுக் குழப்பமான நிலைக்குச் சென்றுள்ளது. மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் போராட்டத்தை ஒத்தி வைக்கவேண்டும் என்று ஜல்லிக்கட்டு அமைப்புக்களின் நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர். இளைஞர்கள் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருகின்றனர். தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வலியுறுத்தி இளைஞர்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போராட்டம் நடத்தினர். சென்னை மெரினாக் கடற்கரையில் லட்சக் கணக்கான இளைஞர்கள் கடந்த 5 நாள்களாக இரவு பகலாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இளைஞர்களின் போராட்டத்தை அடுத்து தமிழக அரசு அவசர சட்டம் இயற்றியது. ஜல்லிக்கட்டு மீதான தடை நீக்கப்பட்டது. ஜல்லிக்கட்டு மீதான தடை நிரந்தரமாக நீக்கப்படும் வரையில் தங்களது போராட்டம் தொடரும் என்று இளைஞர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம், இளைஞர்களின் போராட்டத்துக்கு உற்சாகம் கொடுத்த, ஹிப்பொப் தமிழா ஆதி, காங்கேயம் காளை அறக்கட்டளைத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் போராட்டத்தைக் கைவிடுமாறு இளைஞர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் நேற்று மாலை நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய கார்த்திகேய சிவசேனாபதி, ஜல்லிக்கட்டு போராட்டத்தை மார்ச் 31 ஆம் திகதி வரை ஒத்தி வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறோம். இப்போது போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருப்பது மாணவர்கள், இளைஞர்களுக்கு சிரமம்தான். 2 மாதங்கள் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். தடை நிரந்தரமாக நீங்கவில்லை என்றால் தேவைப்படும் பட்சத்தில் போராடலாம். ஜல்லிக்கட்டு போராட்டத்துக்கு யாரும் தலைவர் இல்லை. அதனால் போராட்டத்தை கைவிடுங்கள் என்று கூற எங்களுக்கு அதிகாரம் இல்லை. எனவே, போராட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுகிறோம் - என்றார். ஆதி, ஜல்லிக்கட்டு வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். ஆனால், ஒரு படத்தைப் போட்டு **(23ஆ ஆம் பக்கம் பார்க்க)**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா கார்த்திகேசு



தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கார்த்திகேசு நேற்று (22.01.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் நார்ராயணப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கணபதிப் பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), செல்லையா, சரஸ்வதி, பரமேஸ்வரி, கனகாம்பிகை, சிவபாக்கியம் (ஓய்வு நிலை தபாலதிபர், சாவகச்சேரி), சிவயோகம் (ஓய்வு நிலை ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வராணி (முன்பள்ளி ஆசிரியை மதுவன் பாடசாலை), கமலராணி, சசிகலா ஆகியோரின் அன்புத்தாயும் சரஸ்வதி, யோகம்மா, சண்முகராசா, மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபால் சேவகர், கிளிநொச்சி), சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், சிவபாலசேகரம் (ஓய்வு பெற்ற தபால் சேவகர், யாழ்ப்பாணம்), வரதராஜா, நாகேந்திரம், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜெயந்தாதேவி, குகனேசன், சரவணபவான், குகதாசன் (கீற்றர்), மேனகாதேவி, சிவகுமார், சிவநாதன், புஸ்பகுமாரி காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சிவகுமாரி மற்றும் ஜெயமஞ்சுளா, யோகச்செல்வன், இந்திரசேனன் காலஞ்சென்றவர்களான இந்திரவதனி, இந்திரஜீவிகா மற்றும் இந்திரஜீவினி, இந்திரஜித் காலஞ்சென்ற தமிழ்செல்வி மற்றும் மகாதீபன், பொன்விழி, சுகன்யா, சரண்யா, நக்கீரன், சஞ்சீவ், சதீஸ், கார்த்திக், சாம்பவி, கஜந்தினி, அனந், துஜிதன், பிரணவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2017) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**



### கந்தையா அமிர்தலிங்கம்

**(லயன் - திரியாய் அம்மன் ரான்ஸ்போட் உரிமையாளர்)**

யாழ்.சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா அமிர்தலிங்கம் 21.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - இளையாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவ ரும்,அனிந்திரா (கொழும்பு), சுகந்தி (லண்டன்), தயாநந்தி (கொழும்பு), மைதிலி (நியூசிலாந்து), சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, இரத்தினம், சண்முகராஜா, பத்மநாதன் மற்றும் யோகாம்பிகை, கமலாதேவி, பாமா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவானந்தன் (கொழும்பு),கோபிநாத் (லண்டன்), விமலச் சந்திரன் (கொழும்பு), மோகன் (நியூசிலாந்து),தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுரன், மயூரி, ஆரணி, சவித்துரு, தாமிரன்,துவிரன், சாயினி, துசாரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி,சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(J/7988)
(11,18)

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் பாலச்சந்திரன்



தனங்களப்பு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலச்சந்திரன் நேற்று (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரசடியைச் சேர்ந்த பசுபதி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக்கணவரும் காண்டீபன், தர்மினி, கபிதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகௌரி, சிவரஞ்சன் (சாவகச்சேரி நகரசபை சுகாதார மேற்பார்வையாளர்) ஆகியோரின் அன்புமாமனாரும் தவமணி கதிரேச பிள்ளை (கல்வயல்) காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அஸ்வினின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.01.2017) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தனங்களப்பு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தனங்களப்பு,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 469 4639/ 077 428 4094**

### வைத்திலிங்கம் தம்பிநாதன்

**(ஓய்வு பெற்ற லிகிதர் - தேர்தல் திணைக்களம்,யாழ்ப்பாணம்)**



யாழ்ப்பாணம், அச்செழுவைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தம்பிநாதன் 19.01.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுப்புலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் சுதா (கனடா), ஜெகதர்மினி(ஜெயந்தி), ராஜராஜன்(ஜேர்மனி), சற்குணராஜன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்றவர்களான ஞானசௌந்தரம், அமுதராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் கௌரீசனின் (கனடா) மாமனாரும் சங்கவி, ஹர்ஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவு டல் ஆவரங்கால் கரதடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.**

**021 205 8124**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமணி பேரானந்தம்



பிறப்பு 12.04.1934 இறப்பு 22.01.2017

இல.15/4, கடற்கரை வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி பேரானந்தம் 22.01.2017 ஞாயிற்றுக் கிழமை இறை வனடி சேர்ந்தார்..

அன்னார் காலஞ்சென்றவர் களான நாகமுத்து - வைரமணி தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்ற பேரானந்தம் (மாநகர சபை ஊழியர்) இன் மனைவியும் காலஞ் சென்ற சிவானந்தம் (மாநகர சபை ஊழியர்) மற்றும் சிவபாக்கியம் அருளானந்தம் (ஓய்வு பெற்ற மாநகர சபை ஊழியர்), பரமானந்தம் (ஆஸ்திரேலியா), விவேகானந்தம் (ஜேர்மனி) காலஞ்சென்ற சிவஜோதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியதேவி காலஞ்சென்ற பரமசிவம், தேவிகா, தாரணி (ஆஸ்திரேலியா), விஜிதா (ஜேர்மனி), நந்தகுமார் ஆகியோரின் மாமியும் தாரணி, விஜயதீபன், சிவதர்சினி, தயாநிதி (லண்டன்) , உமாசுதன், உமைநேசன், யசோதினி, கஜேந்தினி, கபிலநேசன், ரகுலநேசன், பிரசாந், மதுஷா, வினுகா, பிரசாந், பிரசாந்தி, சதீஸ்குமார், சங்கீதா, டயானி ஆகியோரின் பேர்த்தியும் ஜெகீஸ், ஜோகீஸ், ஆருஸ், கனுஷா, டயானா, சச்சின், ஆதீஸ், தஸ்மி (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2017) திங்கட் கிழமை இல.37 கச்சேரி வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று மு.ப. 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 37, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.
076 6762 913**

**தகவல்:
குடும்பத்தினர்.**

### திருமதி வள்ளிப்பிள்ளை தர்மராசா
### (அன்னமுத்து)



**அன்னை மடியில்
19.07.1945**

**ஆண்டவன் அடியில்
19.01.2017**

மந்துவில், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் 112, விவேகானந்தநகர், கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை தர்மராசா 19.01.2017 வியாழக் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராசாவின் அன்புமனைவியும் குணசிங்கம் (கிராம அலுவலர்-கிளிநொச்சி), புஸ்பலதா (கிளிநொச்சி), மனோரஞ்சன் (விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்), விஜயலதா (மருந்தாளர்-யாழ். போதனா வைத்தியசாலை), சசிலதா (ஆசிரியர்- யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலராணி, மகாதேவா, கௌரிதேவி, ராஜ்கரன், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரியங்கன், தர்சிகன், திசாயினி, நியோகிதன், அஜித்குமார், அஸ்விகா, அஸ்மிதா, அனிசா, மகிபன், வைசாலி, யதிக்சயா, பாமிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கமலா மற்றும் நல்லப்பிள்ளை, அம்மாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 20.01.2017 வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :
குடும்பத்தினர்.**

**இல. 112,
விவேகானந்தநகர் கிழக்கு,
கிளிநொச்சி.**

077 666 1141 (மனோரஞ்சன்),
077 233 9206 (குணசிங்கம்),
077 711 1716 (ஜெயக்குமார்)

## ஜல்லிக்கட்டுப்

(23அ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியைத் திட்டியோ, தலைமை அமைச்சரைத் திட்டியோ வாசகங்கள் வருகின்றன. அதில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்திய இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட முடியாது. இந்தப் போராட்டம் தற்போது வெற்றி பெற்று விட்டதால் அதிலிருந்து விலகுகிறேன் - என்றார். ஆனாலும் இளைஞர்கள் உறுதியாக தமது போர்ராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமது போராட்டத்தை குழப்பும் வகையிலோ - மன உறுதியைச் சிதைக்கும் வகையிலோ கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளனர். (5)


## நடனக்கலைஞர்கள் - நேர்முகத்தேர்வு

**புதிய திரைப்படம் மற்றும் வீடியோ பாடல்களில் பணியாற்றுவதற்கு**

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

நடனத்திறமையில் ஆர்வமுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும் மிக அரிய சந்தர்ப்பம்.

காலம் : 29.01.2017
நேரம் : காலை 9.00 மணி - 1.00 மணி வரை
களம் : YMCA மண்டபம் (கச்சேரி அருகில்)

**தொலைபேசி : 077 913 4524, 077 525 0998**


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் திருமதி **ஞானேஸ்வரி சிவபாலன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி மாணிக்கம் சுவாமிநாதன்**


அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

### அம்பலவாணர் நவரத்தினம்

**(காரைநகர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)**




விக்காவில், காரை நகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் நவரத்தினம் 21.01.2017 ஆம் திகதி இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தவிசாளரும் உறுப்பினர்களும்**
**மத்தியஸ்தர் சபை, காரைநகர்.**

## மரண அறிவித்தல்

### இராசதுரை செல்வகணேசபிள்ளை(RS)



பொலிகண்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பருத்தித்துறையில் வசித்தவரும் இல. 119/3, முன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை தற்போது வசிப்பிடமாகக் கொண்ட இராசதுரை செல்வகணேசபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்- முன்னாள் குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்) நேற்று (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - அஸ்வதியம்மா தம்பதியரின் அன்பு மகனும் வசந்த குமாரியின் அன்புக் கணவரும் வைத்திய கலாநிதி வத்சலன், வாணிஸ்ரீ ஆகியோரின் அன்புத்தந்தையும் வைத்திய கலாநிதி சிவகலாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சங்கர் (பெறாமகன்)**


ஓம் சக்தி

# டென்மார்க் பிரண்டாபதியில் அருள்மிகு அபிராமி அம்மாளின் அருளாட்சி

**வான் முட்டெழுந்த கோபுரம் கொண்ட திருக்கோயில் - தேன் சொட்டொழுகும் தாயார் உபாசகியின் அருள்வாக்கு**

இலங்கை, சுவிஸ், லண்டன், நோர்வே, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய இடங்களிலெல்லாம் அன்னையின் அடியார்களினால் மெய்சிலிர்க்க வைக்கும் திருவடி பூசைகள்



1995 பங்குனி உத்தர நன்னாளான 27 ஆம் நாளன்று தாயார் நாகசர்ப்பமாய் உருவெடுத்து தரையில் ஆடி அசைந்து தன்வாயினால் உமிழ்ந்த அதிசயிக்கத்தக்க அற்புதமான நாகமணிகள் உங்கள் தெய்வத்தன்மைக்கும் அருளாட்சிக்கும் சாட்சிகளாகும்....

**அம்மா ஒரு தெய்வப்பிறவி**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி திருநாவுக்கரசு மகேஸ்வரி தம்பதியருக்கு தெய்வப் புதல்வியாக அவதாரம். ஒன்பதாவது வயதில் அபிராமி அம்மனின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெற்றது. தெய்வ அருளாணையின்படி பாலன் ஐயாவினை திருமணம் செய்து ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். அம்மாவின் கனவில் தோன்றிய அபிராமி 'நீ என்னை ஆதரித்து இவ்வுலகில் வாழும் மக்களைக் காத்தருளவேண்டும்' என அருள்வாக்கிட்டார். அந்த ஆணைப்படி அன்று தொடக்கம் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அம்மாவை வணங்கி தாம் நினைத்தவற்றை அடைந்து அடியவர்களாகியுள்ளனர்.

**இலங்கையில் நொச்சிமோட்டை ஏ9 வீதியிலும் யாழ்ப்பாணம் ஏழாலை மேற்கில் புன்னாலைக்கட்டுவன் வீதியிலும் அமைந்துள்ள திருவடி நிலையங்களிலும் அபிராமி உபாசகி அம்மையாரின் பத்தர்களால் தாயாரின் ஜெயந்தி தினமான அன்று விசேட திருவடி பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.**


அபிராமி உபாசகியின் பக்தர்களை நாளை (24.01.2017) செவ்வாய்க்கிழமை வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் தாயாரின் அருளாசியினைப் பெற்று திருவருளிற்குப் பாத்திரமாகுமாறு அழைக்கின்றோம்.

24.01.2017 காலை 9 மணி விசேட பூஜைகள், அபிசேகங்கள், தொடர்ந்து தெய்வீக அருளுரைகள், கலை நிகழ்வுகள், வாழ்வாதார உதவிகள், கல்வி நன்கொடைகள். 12.30 மணிக்கு மாகேஸ்வரபூசை (அடியார்களுக்கு அன்னதானம்)


**அபிராமி உபாசகியின் பக்தர்கள், திருவடி பூசைநிலையம், ஏழாலை மேற்கு, ஏழாலை. 077 977 5554**

# சுவை

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)




Copyright © The McGraw-Hill Companies, Inc. Permission required for reproduction or display.




மோனோசோடியம் குளுட்டமேட் என்ற உப்பை இப்போது பிரியாணி போன்ற உணவுக் கலவைகளில்,சமையல்களில் சேர்த்துக் கொள்கிறார்கள். அஜினோ மோட்டோ தரும் சுவையைத்தான் சேவரி என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறார்கள் ஆய்வாளர்கள்.

அஜினோமோட்டோ மாமிசச் சுவையை அதி கரிக்கச் செய்கிறது. இதேபோன்று சீனியின் இனிப்பை அதிகப்படுத்திக்கொள்ள ஒரு பொருள் இருந்துவிட்டால் இரண்டு மேசைக் கரண்டி சீனி போடுவதற்கு பதிலாக அரை வாசி அல்லது அதற்கும் குறைவான சீனி யைக் கலந்து சமாளிக்கலாம்.

சக்கரின், அஸ்பார்ட்டேம் போன்றவை செயற்கையாகவே இனிப்பைத் தருபவை. அவை பொய்யானவை.போலியானவை. அவை தருகின்ற இனிப்பு சீனிபோல இருப்பதில்லை. இதன் காரணமாகவே நீரிழிவு நோயளிகள் வேண்டா வெறுப்பாக விருப்பமின்மையின்றி செயற்கை இனிப் பைப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் கருத்து ரைக்கின்றன.

### சுவை மொட்டுகள்

புத்தகங்களில் நாக்கின் படம் அச்சிடப்பட்டு அதில் பல பகுதிகளைக் கோடிட்டுக்காட்டி யிருப்பார்கள். இந்த இடத்தில் இனிப்பு, இங்கே கசப்பு, இங்கே காரம் என்று குறித் துக் காட்டியிருப்பார்கள். அடி நாக்கில் கசப்பு உணர்வு இருப்பதாகவும் அதில் சொல் லப்பட்டிருக்கும். இப்படி நாக்கில் சுவை களுக்கான குறித்த பிராந்திய வரைதல்கள் எதுவும் இல்லை என்பதான தகவலை சார்லஸ் ஸக்கர் (1996 Charles Zuko Professor of Biology, Univercity of California) என்பவர் கண்டுபிடித்து சொல் லியுள்ளார். நாக்கின் எல்லா இடங்களும் எல்லா சுவை களையும் தருகிறது.அவற்றை எங்கும் அறியமுடிகிறது. இனிப்பு. புளிப்பு, கசப்பு என ஒவ்வொன்றிற்கும் தனித்தனி இடங்கள் எவையும் ஒதுக்கப்படவில்லை என்பதை பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். எமது நாக்கின் மேற்பரப்பு என்பது சொற சொறப் பாக இருக்கிறது. அவையாவும் மெ ாட்டு வடிவ மேடுகள். அவற்றை சுவை அரும்புகள் அல்லது சுவை மொட்டுகள் என்கிறோம். ஒவ்வொரு சுவை மொட்டிலும் நூற்றுக்கணக் கான செல்கள் உள்ளன. அச்செல்கள் மூலம் நாம் ஆறு அல்ல 25 வகையான சுவை உணர்வுகளை அறிகிறோம்.

### சுவை அரும்புகள்

ஒவ்வொரு சுவைக்கும் தனியாகச் செல்கள் உண்டு. அதாவது ஒரு செல் ஒரு சுவையை மட்டும் அறியும். அதன் வேலை உணவில் உள்ள குறிப்பிட்ட சுவையை அறிந்து தகவலை மூளைக்கு அனுப்புவதே. ஒரு மொட்டு ஒரு சுவைக்கு என்பதும் குறிப்பிட்ட நாக்கின் பகுதி ஒரு சுவையை மட்டும் அறியும் என்பதும் தவறான கருத்து. நாக்கில் எல்லா பகுதியிலும் உள்ள எல்லா மொட்டுகளிலும் 25 வகையான சுவை களை அறிவதற்கான செல்கள் உள்ளன. சுவை உணரும் செல்களின் மேற்புறத்தில் உள்ள சவ்வில் சுவையை அறிவதற்கான புரதங்கள் நிறைவாக உள்ளன. பாயாசத்தில் முந்தி ரிப்பருப்பு மிதப்பதைப்போல சுவை அறியும் புரதங்கள் செல்லின் வெளிச் சவ்வில் மிதந்தபடியுள்ளன. இப் புரதங்களின் முப்பரிமாண வடிவம் ஒரு கிண்ணம்போன் றது. ஒரு சுவைக்கு ஒரு கிண்ணம் என்பதாக 25 சுவைகளுக்கும் தனித்தனி கிண்ணங்கள் உள்ளன. தேனை நாம் உட்கொள்ளும் போது குறிப்பிட்ட கிண்ணத் தின் பள்ளமான பகுதியில் சுவைக்குக் காரணமான மூலக்கூறு வந்து அமர்ந்து கொள்கிறது. சாடிக்கு ஏற்ற மூடி போல புரதமும் அதன் சுவை மூலக்கூறும் ஒன்றுடன் ஒன்று உடனடித் தன்மையோடு பொருந்திக் கொள்கின்றன. இதன் காரணமாக இவ் வகைக் கிண்ணங்களை ஏற்பி என் கிறார்கள். பேராசிரியர் ஸக்கர் நாக்கிலுள்ள சுவை ஏற்பிகள் அனைத்தையும் ஆராய்ந்து மனிதர்களுக்கு 25 வகைகளுக்கும் மேற் பட்ட ஏற்பிகள் இருப்பதை அறிந்துகொண்டு வெளிப்படுத்தியுள்ளார். அதனடிப்படையிலே மனிதர்கள் எத்தனைவகை சுவைகளையும் அறிந்துகொள்ள முடியும் என கருத்துரைத் துள்ளார்.

அவற்றையே நாம் தொகுத்துப்பார்க்கிறோம். ஆறு அல்லது ஐந்து சுவை வகைகளாகப் பிரித்துக்கொள்கிறோம்.பிரித்தறிந்து உணர்ந்துகொள்ள முற்படுகிறோம்.

உண்மையில் அன்றாட வாழ்வில் தேன், திராட்சை, மாம்பழம், பலா, சப்போட்டா ஆகியவற்றை உண்ணும் போது அனைத் தும் இனிப்புச் சுவையைத் தருகின்ற போதும் அவற்றில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சுவைத் தொனிப்பு இருப்பதை அவதானிக் கலாம்.அவதானிக்கிறோம்.

மிகப்பிரதானமாக ஸுக்கர் சுவை ஏற்பி மூலக்கூறுகளை கூர்ந்து கவனித்து ஆழ மாக ஆராய்ந்தபோது ஒவ்வொரு கிண் ணப்பகுதியிலும் இரண்டு அறைகள் இருப்பதைப் கண்டுகொண்டுள்ளார். ஒரு அறை சுவைக்குக் காரணமான சீனி, உப்பு, அமிலம், கசப்பு, துவர்ப்புச் சுவை களின் மூலக்கூறுகள் அமர்வதற்காகவும் அருகே உள்ளதான இன்னொரு சிறிய அறை சுவையில்லாத ஆயினும் சுவை உணர்வை பலமாகத் தூண்டிவிடக்கூடிய தான இன்னொரு பொருளுக்காகவும் இருப்பதைக் கண்டறிந்துள்ளார். அஜினோ மோட்டோ என்ற உப்பு தன்னளவில் சுவையற் றதாக இருந்தாலும் மாமிச உணவில் கலந்ததும் மாமிசத்தின் சுவை பன்மடங்கு கூடுவதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர்.ஆக,இயற்கையில் சுவைகளைக் கூட்டுவதற்கென்றே பல பொருள்கள் எம்மி டையே இருப்பதுபோலத் தோன்றுகிறது. இல்லாது போனால் ஏன் சுவை உணரும் ஏற்பிகளில் இரட்டை அறை அமைப்பு இருக்க வேண்டும் என்பதான கேள்வி எழுகிறது. எழுவ தாகவே பேராசிரியர் ஸக்கரும் கூறிக்கொள்கிறார். மேலும் ஆராய்ச்சிகளை மேற் கொள்வதன் மூலம் சுவை ஏற்பிகளின் இரண்டாம் அறையில் அமரக்கூடிய சுவைத்தூண்டிகள் எவை என்பதை அறிந்து கொள்ளலாம்.



சீனி முதலான பொருள்களின் சுவை களை பலமடங்காக அதிகரிக்கச் செய்யலாம். மேலும் முயற்சித்தால் கசப்பின் வீச்சையும் கணிக்கலாம்.தணிக்கலாம்.

ஆகவும், நல் மனிதர்களாய் நாம் சிந்தித்து செயற்பட வேண்டும்! உணவால் கெடுப்போகாமல் வாழ்நாள் சிறிதானாலும் நோயின்றி வாழ முயற்சிக்க வேண்டும்!

New
போத்தீஸ்
திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்
Alayam of Silks
ஆடவர்கள், சிறுவர் சிறுமியருக்கான
அனைத்துத் தெரிவுகளும்
ஒரே இடத்தில்
ஆண், பெண்களுக்கான
திருமண பட்டுப் புடைவைகள்
மற்றும் மங்கலகரமான
நிகழ்வுகளுக்கான அனைத்து புடைவைகளும்

New Collection New Style
காரியாலயத்துக்குரிய புடைவைகள்
(Office wear sarees)
ஒரே நிறத்திலும் ஒரே கூரையின்கீழ்
பெற்றுக் கொள்ளலாம்.
இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5464

## ரணிலை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய தலைவரை (விமல் வீரவன்ச) சிறையில் அடைத்துத் தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் நடவடிக்கைகளை ஒருபோதும் நிறுத்த முடியாது. எங்கள் பயணத்தை நிறுத்த ஆரம்பிக்கும்போது ரணில் தோல்வியடைந்துவிட்டார். இலட்சக்கணக்கான மக்கள் இங்கு உள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பயந்து ஒருபோதும் நாங்கள் அரசியல் செய்யவில்லை.
29 தடவை தோல்விடைந்த குப்பை வாளியில் இருந்து வந்த அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்கவால் ஒருபோதும் எங்களின் பயணத்தை நிறுத்த முடியாது. ரணிலை வீட்டுக்கு அனுப்பும் செயற்பாட்டை இன்று தொடக்கம் ஆரம்பிக்க எமது கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் உறுதி பூண வேண்டும்.
ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வார் என்பதனை அன்று நாங்கள் கூறியிருந்தோம். இன்று அவை நடைபெறுகின்றன. பிரிவினைவாதிகள் பலமடைந்துள்ளனர். நாட்டைத் துண்டுதுண்டாக்கும் வகையில் புதிய அரசமைப்பைத் தயாரித்து வருகின்றனர்.
அன்று தேர்தலின்போது ரணிலிடம் பிரிவினைவாதிகள் கூறியதுதான், உங்களை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தால் காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தரவேண்டும் என்பது. அதைத்தான் இன்று ரணில் செய்து கொண்டு வருகிறார்.
மக்களுக்குத் தேவையானதை ஒழித்து பிரிவினைவாதிகளுக்குத் தேவையான விடயங்களையே ரணில் அரசு கொண்டுவரவுள்ளது. நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் தலைமை அமைச்சர் ரணில் ஈடுபட்டால் அவரை ஓட ஓட அடித்து விரட்டுவோம். அதில் மாற்றமிருக்காது - என்றார். (வ-4)

## வயம்ப...

அதனால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பார்வையிட பகிடிவதை புரிந்த மாணவர்கள் இடையூறாகவுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
பல்கலைக்கழகத்தின் மூத்த மாணவர்களை பாதிக்கப்பட்ட மாணவியுடன் தொடர்பு கொள்ளவிடாது பகிடிவதை புரிந்தவர்கள் தடைபோடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வயம்ப பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறைக்குத் தேர்வான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பொறியியல் துறை சாராத மாணவர்களின் அதிக பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டது. தாம் உள ரீதியில் மட்டுமன்றி உடல் ரீதியிலும் பாதிப்படைவதாகத் தெரிவிக்கும் பாதிக்கப்பட்ட மாணவர்கள், தமக்கு மருத்துவ வசதிகளைப் பெறுவதற்குகூட சிலர் இடையூறாக இருப்பதாகவும் கவலை வெளியிட்டனர்.
நாள் ஒன்றுக்கு 3 மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக அதிக இழிவு வார்த்தைகளும் உணவு முதற்கொண்டு வேண்டாத திணிப்புக்களுமே இடம்பெறுகின்றன. ஆண் மாணவர்களுக்கும் இதே கொடுமையே தொடர்வதாகக் கூறப்படுகிறது.
வயம்ப பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறைக்கு 4 தமிழ் மாணவிகளே தெரிவான நிலையில் அவர்களுக்கு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்கு பகிடிவதை இடம்பெறுவதாகப் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இவ்வாறான பகிடிவதையினால்தான் ஒரு மாணவி பாதிக்கப்பட்டுக் கடந்த நான்கு நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாதுவிடின், தமது பிள்ளைகளுக்குக் கல்வியை விடவும் உயிரே முக்கியம் என்ற நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்துவிட்டு கல்வியை நிறுத்தும் நிர்ப்பந்தத்தில் தாம் உள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர்.
(வ-4,101)

## நாட்டைத்...

கொண்டிருந்தால், அப்போதே எமக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைத்திருக்கும்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில், தேசிய சுதந்திர முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது நாட்டில் போர் இடம்பெற்றபோது, அதன் வெற்றிக்கு குரல் கொடுத்த தலைவர்களில் முக்கியமானவர் விமல் வீரவன்ச. அவரின் அரசியல் பயணத்தை சிறையில் அடைத்து ஒரு போதும் நிறுத்திவிட முடியாது. அவ்வாறு அரசு கனவு காணுமாயின் அது கீழ்த்தரமானச் செயற்பாடேயாகும்.
தேசியத் தலைவர்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் அரசியல் பழிவாங்கல்களையே அரசு முன்னெடுத்து வருகின்றது. ஒடுக்குமுறைக்கு உள்ளாக உள்ளாக மக்கள் எழுச்சியே பெறுவர். இதனை அம்பாந்தோட்டையில் உணர்ந்திருக்கக் கூடும்.
இந்த அரசு நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் பன்னாட்டுச் சமூகத்துக்கு விற்கும் கீழ்த்தரமான அரசியலையே முன்னெடுத்து வருகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலை துறைமுகம், பலாலி வானூர்தி நிலையம், காங்கேசன் துறை துறைமுகம் என்பவற்றை விற்பனை செய்ய ஏலம் போட்டுள்ளது அரசு.
நாட்டில் தற்போது வறுமை, வாழ்வாதாரம் மற்றும் பட்டினித் தொடர்பில் ஒரு பிரச்சினையும் இல்லை. மாறாக ஓரினச் சேர்க்கைதான் பிரச்சினையாக உள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த யோசனைகளை அமைச்சரவையில் நிறைவேற்றிய பின்னரே அது தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ள ஆராய்கின்றனர்.
அவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளில், நாட்டைத் துண்டாடும் கூட்டாட்சி அரசமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், இராணுவத்தினரை தண்டிக்கும் சிறப்பு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிறுவுதல் போன்றனவாகும். அவற்றுக்குத் தற்போது அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டிருந்தால் அன்று எமக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைத்திருக்கும். அதனால் எமது நாட்டுக்கு எந்தவிதமான இலாபமும் இல்லை. நட்டமும் இல்லை. நாட்டை பிரித்து தேசிய ஒருமைப்பாட்டை சீர்க்குலைக்கும் செயற்பாடுகளை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது - என்றார். (வ-5)

## சிங்கள...

அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படவுள்ள 250 வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாதம் 30ஆம் திகதி வீடமைப்பு அமைச்சால் வீடுகளுக்கான அடிக்கல் நடப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.
அதற்கான சகல ஒழுங்குகளையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.
கடந்த வாரம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாவற்குழியில் சிங்கள மக்களுக்கு காணி வழங்குவதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையிலும் அதிகார சபை இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.
2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டதை அடுத்துத் தென்னிலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள், யாழ். குடா நாட்டுக்குப் படையெடுத்து யாழ். ரயில் நிலையத்தில் தங்கினர். சில தினங்கள் தங்கியிருந்த இவர்கள் நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அனுமதியின்றிக் குடிசைகள் அமைத்துக் குடியேறினர். அவர்களுடன் குடாநாட்டைச் சேர்ந்த காணி, வீடு வசதியில்லாத பல குடும்பத்தவரும் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். பல வருடங்களாக வசதியீனங்கள் மத்தியில் குடிசைகளில் வாழ்ந்து வருபவர்களின் நலன்கருதி மானிய அடிப்படையில் வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை 220 பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளனர். அவர்களுக்கான வங்கிக் கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் இந்த மாதம் 30ஆம் திகதி வீடமைப்பு அமைச்சரால் நடப்படவுள்ளது. வீடுகளுக்கான அத்திபாரங்கள் துரிதமாக வெட்டப்படுகின்றன. அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் அமைக்கப்படவுள்ள இந்த வீட்டுத்திட்டம் 6 மாத காலத்துக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ற-21,115)

## வாள்வெட்டு...

தாக்குதல் நடத்தியதால் படுகயமடைந்த 4 பேர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கொக்குவில் பள்ளத்தடிப்பகுதியில் 7 மோட்டார் சைக்கிள்களில் வேகமாகப் பயணித்த இளைஞர்கள் முதலில் வர்த்தக நிலையம் ஒன்றைத் தாக்கிச் சேதப்படுத்தினர். பின்னர் அங்கிருந்து செல்லும் வழியில் வீதியால் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.
அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த தாக்குதல்தாரிகள் அங்கு யன்னல்கள், கணினி , தொலைக்காட்சிப் பெட்டி என்பனவற்றையும் தாக்கிச் சேதப்படுத்தினர். வீட்டில் இருந்த மூவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 3 பேர் படுகாயமடைந்தனர்.
தாக்குதல் மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று பிறிதொரு வீட்டுக்குள் பாதுகாப்பு கேற்றை கொத்திச் சேதப்படுத்தியவாறு சென்றுள்ளனர். இவ்வாறு பட்டப்பகலில் இடம்பெற்ற அடாவடிகளினால் அந்தப் பிரதேசத்தில் பதற்றம் நிலவியது.
சம்பவ இடங்கள் யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டவையாதலால் இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொலிஸாரும் விசாரணையிலீடுபட்டனர். தாக்குதலாளிகளில் 2 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ-4,101)

## மிருகவதை...

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை தொடர வேண்டும். கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகளுக்குக் கிடைத்த பேரம் பேசும் சக்தியை அவர்கள் உரிய வகையில் பயன்படுத்தவில்லை. பிரபாகரனும் தனது சுயலாபத்துக்காக கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தவில்லை.

### பொருத்து வீடு அரண்மனை

தகரக் கொட்டி லிலும், கொட்டில் வீடுகளிலும் வசிக்கும் மக் களுக்கு பொருத்து வீடு - முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு அரண்மனை. வெளிநாட்டு வியாபாரி ஒருவர் தனது நாட்டில் விற்க முடியாததை இங்கே விற்கின்றார். அது உண்மை. நாம் கிடைப்பதைப் பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும்.

### அதிகாரமில்லை

யாழ். மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகாரமில்லாத நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான். குருநகரில் நீதிமன்றக் காணியில் இருந்த 70 குடும்பங்களில் 40 பேரை அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டிருந்தது. அவர்கள் அதிகாரமுள்ள எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் சென்றனர். யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இறுதியில் என்னிடம் வந்தார்கள். நான் நீதி அமைச்சருடன் பேசினேன். அவர் அந்தக் காணியை மக்களுக்கே வழங்கச் சொல்லி விட்டார். நாவற்குழியில் தமிழ் மக்களைக் குடியேற்றியவன் நான். அவர்களுக்கு வீடுகளை நான் வழங்கியே தீருவேன். இதனைச் சவாலாகச் செய்வேன் - என்றார். (வ-5-37)

## காணாமல்...

தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்தை வவுனியாவில் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பிப்பர் என்று அறிவிக்கப்பட்டது.
தமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? உயிருடன் இருந்தால், அவர்கள் எந்த இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? உயிருடன் இல்லாவிட்டால், அவர்களுக்கு என்ன நடந்தது? யாரால்? எப்படி? கொலை செய்யப்பட்டு, எங்கே புதைக்கப்பட்டுள்ளார்கள்? என்பவற்றை நாட்டு மக்களுக்கு அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்.
கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் உயிரோடு இருப்பின், அவர்கள் தத்தமது குடும்பத்தினரோடு இணைந்து வாழ்வதற்கு உடனடியாக வழி விடுவதோடு, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இன்று முன்னெடுக்கப்படவுள்ள தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்துக்கு தமிழ் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினருக்கும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சிவில் சமூக பொதுஅமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்குமிடையில் நேற்று வவுனியாவில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தமது முழுமையான ஆதரவை அவர்கள் வழங்கவுள்ளதாக தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி திருமதி கா.ஜெயவனிதா தெரிவித்தார். (வ-21.402)

## மகிந்தவை...

வெளியிட்டதாக, சத்ஹண்ட ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை, தமது தலைவராக அங்கீகரிப்பதன் மூலம் கூட்டு எதிரணியினால் எந்த ஆதாயமும் பெற முடியாது. மகிந்த ராஜபக்சவைக் கைவிடவில்லை என்றால், கூட்டு எதிரணி இன்னும் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதேவேளை, தனது மகன் நாமல் ராஜபக்சவை தேசியத் தலைவராக வளர்த்துவிடும், நம்பிக்கைக்கு அமெரிக்க அரசு உதவத் தயாராக இருப்பதாகவும், அதுல் கெசாப் இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட கருத்துக்களை மகிந்த ராஜபக்சவிடம் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தெரியப்படுத்தியுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
அதேவேளை, மகிந்த ராஜபக்சவை செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகுமாறு சக்தி வாய்ந்த நாடு ஒன்றும், அயல்நாட்டு புலனாய்வு அமைப்பும் அழுத்தம் கொடுத்து வருவதாக, திவயின சிங்கள நாளிதழும் செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த இரண்டு தரப்புகளும், கூட்டு எதிரணியின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரைச் சந்தித்து தனது நிலைப்பாடுகளை தனித்தனியாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
மகிந்த ராஜபக்சவின் செல் [illegible] க்கு சரிந்து வருவதாகவும், தாமதமன்றி [illegible] வர் அரசியலில் இருந்து விலகும் முடி [illegible] எடுப்பதே, அவரது குடும்பத்தினரின் [illegible] சியல் எதிர்காலத்துக்கு நல்லது என்றும் [illegible] லோசனை கூறப்பட்டுள்ளதாகவும், அ [illegible] செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

## அரிசியின்...

விலைக் குறைப்பு இதனூட [illegible] ாத்தியமாகியுள்ளது. மொத்த மற்றும் சி [illegible] றை விலைகளுக்கு அரிசியை விநியோ [illegible] தம் சந்தைகளுக்கு அரசினால் தேவைய [illegible] அளவு அரிசி விநியோகிக்கப்படுகின்றது. [illegible] ளூர் நாடு அரிசி ஒரு கிலோகிராம் இரு [illegible] ரூபா வால் குறைவடைந்துள்ளது - என் [illegible] ர். (வ-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

**நெடுந்தீவு கபடித் தொடர்**

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான கபடித் தொடர் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

**யாழ். கூடைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழக கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்சைன் அணியை எதிர்த்து கோல்ட் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**நெடுந்தீவு கால்பந்தாட்டம்**

நெடுத்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையர்ட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி இன்று மோதவுள்ளது. உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-422-23)



## மாகாணமட்ட குத்துச்சண்டை; முல்லை மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 23

வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான குத்துச்சண்டையில் முல்லைத்தீவு மாவட்ட அணி சம்பியனானது.

முல்லைத்தீவு மாவட்ட பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் போட்டிகள் இடம்பெற்றன. முல்லைத்தீவு மாவட்ட அணி 4 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப்பதக்கம், 3 வெண்கலப்பதக்கம் உட்பட 9 பதக்கங்களைச் சுவீகரித்து 27.5 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது. யாழ்ப்பாண மாவட்ட அணி 3 தங்கப்பதக்கம் 3 வெள்ளிப் பதக்கம், 3 வெண்கலப்பதக்கம் உட்பட 25 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வவுனியா மாவட்ட அணி 2 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப்பதக்கம், 3 வெண்கலப்பதக்கம் உட்பட 19.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் தமதாக்கின. தங்கப்பதக்கத்தை வென்றவர்கள் தேசியத்துக்குத் தகுதிபெற்றனர். (ம-422)

## பிங்பொங் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 23

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் அம்பன் பிங்பொங் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.



வடமராட்சி கிழக்கு பொது மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் அமைந்தது. அம்பன் பிங்பொங் அணியை எதிர்த்து செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் இழக்காமல் 85 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக நிறோசிகா 37 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பிலிப்நேரிஸ் 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் இழக்காமல் 57 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனையடுத்து 28 ஓட்டங்களால் பிங்பொங் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## ஒலிம்பிக் கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 23

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் இறுதிக்குத் தகுதிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற முதாலவது அரையிறுதியாட்டத்தில் ஒலிம்பிக் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம)



## காலிறுதியில் வீனஸ்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதிபெற்றார் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வீனஸை எதிர்த்து ஜேர்மனியின் மோனா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார் வீனஸ். (ம)

## சென்றலைட்ஸ் பதற்றமற்ற வெற்றி



இலங்கை கிரிக்கெட் சபையின் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி பதற்றமற்ற வெற்றியைப் பதிவு செய்தது.

தம்புள்ள பன்னாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கண்டி யுத் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி யுத் அணி, 44.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சந்துருகுமார 33 ஓட்டங்களையும், அபயக்கோன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தர்சன், ஜெரிக் துசாந் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் வதுசனன் இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி 26.2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. செல்ரன் 32 ஓட்டங்களையும், ஜெறுசன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், கிருபாகரன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

## கரவெட்டி பிரதேச கரப்பந்தாட்டம் உடுப்பிட்டி சிவகுமரன் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன. 23

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கரப்பந்தாட்டித்தில் பெண்கள் பிரிவில் சம்பியனானது உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம்.

உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளை யாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

3 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:13, 25:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றபெற்றுச் சம்பியனாகியது உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம். (ம-108)

## ஆஸி. முன்னிலை

பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது ஆஸ்திரேலிய அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் கவாயா. 30 ஓட்டங்களுடன் கவாயா ஆட்டமிழந்தாலும் வழக்கம்போல் ஆஸ்திரேலிய அணியை கட்டிக்காத்தார் வோர்ணர். சராசரியைப் பேணும்படியான அதிரடி வோர்ணரின் ஆட்டத்தில் இருந்தது. வோர்ணருக்கு நிகராகத் துடுப்பெடுத்தாடினார் சிமித். அவர் ஒரு ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவறவிட்டார். மறுமுனையில் வோர்ணர் சதம் கடந்தார். 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் மக்ஸ்வெல். ஹெட்டும் அரைச்சதம் கடந்தார். முடிவில் 353 ஓட்டங்களைக் குவித்தது ஆஸ்திரேலியா.
பந்துவீச்சில் கசன் அலி 5 இலக்குகளையும், ஆமிர் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆரம்ப வீரரான அசார் அலியை இழந்தது. சர்ஜீல் கான், அசாம் இணை ஆஸ்திரேலியாவுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தினாலும், 31 ஓட்டங்களுடன் அசாம் ஆட்டமிழந்த பிற்பாடு ஆஸ்திரேலியாவின் பக்கமே வாய்ப்புக் குவிந்தது. சர்ஜீல் கான் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரின் இழப்பை அடுத்து தொடர் சரிவுகண்டது பாகிஸ்தான். மத்திய வரிசையின் நம்பிக்கையான உமர் அக்மல், ரிஸ்வான் இருவரும் பதின்மத்துடன் வீழ்த்தப்பட்டனர். முடிவில் அந்த அணி 267 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.
பந்துவீச்சில் கசில்வூட், சாம்பா இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஹெட் இரு இலக்குகளையும், கும்மின்ஸ், ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



# ரபேல் நடால் முன்னேற்றம்

ஆஸ்திரேலியத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ரபேல் நடால்.
நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்றுவருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து ஜேர்மன் வீரர் அலெக்ஸாண்டர் மோதினார்.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்று கைப்பற்றினார் அலெக்ஸாண்டர். இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் நடால். மூன்றாவது செற், 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அலெக்ஸாண்டரின் வசமானது. மூன்று செற்களின் முடிவில் 2:1 என்று முன்னிலை பெற்றிருந்தார் அலெக்ஸாண்டர். இதனால் அடுத்த இரு செற்களிலும் வென்றால் மட்டுமே வெற்றி பெறலாம் என்ற நெருக்கடியான நிலமை நடாலுக்கு ஏற்பட்டது. 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் நடால். (ம)


## சாய்னா சம்பியன்

மலேசிய பூப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றார் இந்தியாவின் நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால்.
நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சாய்னா நேவாலை எதிர்த்து தாய்லாந்து வீராங்கனை பவி சோவுங் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் சாய்னா நேவால். அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றையும் 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கினார். முடிவில் 2:0 என்ற நேர்செற் வெற்றியுடன் சம்பியனானார். (ம)




## நியூசி. - பங்களாதேஷ் மழை மிகுந்த ஆதிக்கம்

பங்களாதேஷ் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று ஒருபந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. 289 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். அதிகபட்சமாக சர்க்கர் 86 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 59 ஓட்டங்களையும், நுறுல் ஹசன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 5 இலக்குகளையும், போல்ட் 4 இலக்குகளையும் வாக்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 260-7 என்றிருந்தது. நிக்கொல்ஸ் 56 ஓட்டங்களுடனும் சவுத்தி 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். மழை நேற்று கடும் ஆதிக்கம் செலுத்தியதை அடுத்து ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் மூன்றாம் நாள் முடிவு கண்டது. (ம)

## ஆஸி. வீரர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர் இப்படித் தெரிவித்தார் கிளேன் மெக்ராத்

வார்த்தை மோதல் விவகாரத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான கிளென் மெக்ராத்.
பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
உலகில் உள்ள அனைத்து அணிகளும் வார்த்தை மோதலில் ஈடுபடுகின்றன. ஆனால் ஆஸ்திரேலியா செய்யும்போதுதான் அது செய்தியாகிறது. மற்றைய அணிகள் வார்த்தை மோதலில் ஈடுபடும் போது நாங்கள் அமைதியாக இருக்கிறோம். ஆனால் நாங்கள் செய்யும் போது அவர்கள் முறைப்பாடு கொடுக்கிறார்கள். சச்சின்கூட என்னை வம்பிழுத்தார் என்று மெக்ராத் மேலும் தெரிவித்தார். (ம)



## செரீனா வில்லியம்ஸ் முன்னேற்றம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார் செரீனா வில்லியம்ஸ்.
பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை நிக்கொல் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:1, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் வெற்றியுடன் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார் செரீனா வில்லியம்ஸ். (ம)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் சம்பியன்

கரணவாய், ஜன. 23
கரவெட்டி பிரதேச செயலகத்தின் நடப்பு வருடத்துக்கான கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் ஆண்கள் அணி.
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி வாலிபர் வட்ட விளையாட்டுக் கழகமும் மோதின. 3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 25:21, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்று நேர்செற் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.



(ம-108)

## துரையப்பா வித்தியின் மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 23
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.
பாடசாலையின் அதிபரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)




# இங்கிலாந்துக்கு கௌரவ வெற்றி

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. இருப்பினும் முதலிரு ஆட்டங்களையும் கைப்பற்றிய காரணத்தால் 2:1 என்று தொடரை வென்றது இந்தியா.
கொல்கத்தாவில் பகலிரவு ஆட்டமாக நேற்று இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. றோய் - பில்லிங்ஸ் இணை சிறந்த அடித்தளம் அமைத்தது. 98 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னரே முதல் இலக்குச் சரிக்கப்பட்டது. வீழ்ந்தவர் பில்லிங்ஸ் வீழ்த்தியவர் ஜடேயா. அவர் 65 ஓட்டங்களுடன் றோயையும் போல்ட் செய்தார். பரிஸ்ரௌவ், ஸ்ரோக்ஸ் ஆகியோரின் அரைச்சதங்கள் கைகொடுக்க 321 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து.
பந்துவீச்சில் பாண்டியா 3 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், பும்ரா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்தியாவுக்கு ஆரம்ப வீரர்களான ரகானே 1 ஓட்டத்துடனும் ராகுல் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். கோக்லி, யுவராஜ் இணை பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களை எட்டவைத்தது. 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. 45 ஓட்டங்களுடன் யுவராஜை வீழ்த்தினார் பிளங்கட். கேதர் யாதவ், பாண்டியா இணைந்து இங்கிலாந்துக்கு கலக்கத்தை ஏற்படுத்தினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 56 ஓட்டங்களுடன் பாண்டியா வீழ்த்தப்பட்டார். அஸ்வின், ஜடேயாவால் தாக்கத்தை ஏற்படுத்த இயலவில்லை. கேதர் ஒரு முனையில் நிலைத்துநின்றார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்து சிக்சரானது. பிறிதொரு ஓட்டத்தை பெறாமல் மூன்று பந்துகளை வீணடித்து ஆட்டமிழந்தார் கேதர். இறுதிப் பந்தில் சிக்சர் அடித்தால் இந்தியாவுக்கு வெற்றி. ஓட்டமற்ற பந்தாக மாற்றினார் வோக்ஸ். 5 ஓட்டங்களால் இங்கிலாந்து வென்றது. ஸ்ரோக்ஸ் ஆட்டநாயகனாகவும் கேதர் யாதவ் தொடராட்ட நாயகனாகவும் தெரிவாகினர். (ம)

# சானியா வெளியே

ஆஸ்திரேலியத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது இந்தியாவின் சானியா மிர்சா செக்குடியரசின் பார்பேரா இணை.
பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சானியா பார்போரா இணையை எதிர்த்து ஜப்பானின் ஹோசுமி மியூ இணை மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஹோசுமி மியூ இணை. இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது சானியா பார்போரா இணை. சரிவில் இருந்து மூன்றாவது செற்றை ஹோசுமி - மியூ இணை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து அந்த இணை 2:1 என்ற செற் கணக்கில் வென்றது. (ம)





# தென்னாபிரிக்க அணிக்குப் பதிலடி இலங்கை முறையாகக் கவனிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது இலங்கை.
நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஸ்மிட்ஸ் மற்றும் ஹினோ இணை சிறந்த ஆரம்பத்தை வழங்கவில்லை. நான்கே ஓட்டங்களுடன் ஸ்மிட்ஸின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பேர்ணை வீழ்த்தினார் உதான. மொஸ்லி, மில்லர் இருவரும் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். முன்னவரிசை வீரர்கள் ஒவ்வொருவரும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா படிப்படியான தடுமாற்றத்தை உணர்ந்தது. சிறிது அடித்தாடிய ஹினோவை 29 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் சன்டகன். பெக்கார்டின் குவித்த 27 ஓட்டங்களே இரண்டாவது அதிகபட்சம். 113 ஓட்டங்களில் தென்னாபிரிக்கா சுருண்டது.
பந்துவீச்சில் சன்டகன் 4 இலக்குகளையும், உதான 3 இலக்குகளையும், குலசேகர 2 இலக்குகளையும், தனஞ்சய டி சில்வா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இலங்கைக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. தனஞ்சய டி சில்வா 2 ஓட்டங்களுடனும் மெண்டிஸ் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். டிக்வெல்லவால் முடிந்தது 22 ஓட்டங்கள். மூவரையும் நெக்டியே வீழ்த்தினார். முன்வரிசை தகர்ந்தாலும் மத்திய வரிசையில் மிகையான நம்பிக்கை வழங்கினார் மத்தியூஸ். மத்தியூஸுடன் இணைந்து சந்திமல் ஓரளவு தாக்குப்பிடித்தார். அவர் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நெக்டியிடம் வீழ்ந்தார். மேலும் சில இலக்குகள் சரிந்தாலும் தொடர்ந்தும் நிலைத்துநின்று அரைச்சதம் கடந்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் மத்தியூஸ். (ம)

# மீண்டும் களத்தில் பிரேசில் வீரர்கள்

விமான விபத்தில் இருந்து உயிர்தப்பிய பிரேசிலை சேர்ந்த சாபேகோயன்ஸ் கால்பந்து கழகத்தைச் சேர்ந்த வீரர்கள் மீண்டும் களமிறங்கியுள்ளனர்.
கொலம்பியாவில் நடைபெறவிருந்த இறுதியாட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரேசில் கழகமான சாபேகோயன்ஸின் வீரர்கள் பயணித்த விமானம் கொலம்பிய மலைப் பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. வீரர்கள் உட்பட 72 பேர் உயிரிழந்தனர். 3 வீரர்கள் மட்டுமே உயிர்பிழைத்தனர். விமான விபத்துக்கு பிறகு சாபேகோவில் உள்ள அரீனா கோண்டா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அவர்களில் இருவர் மீண்டும் களமிறங்கினர். அவர்களுக்கு விசேட கௌரவிப்பு வழங்கப்பட்டது. (ம)

# கலைமகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 23
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்கள் பிரிவு எல்லேயில் கலைமகள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
கலைமகளை எதிர்த்து பிங்பொங் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் அணி வழங்கப்பட்ட 40 பந்துகளில் ஓட்டம் எதனையும் பெறவில்லை. பதிலுக்கு துடுபெடுத்தாடிய கலைமகள் அணி 14 ஆவது பந்தில் ஒரு ஓட்டத்தை பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

# சுதந்திரக் கிண்ணத் தொடர்; இந்தியாவுக்கு இலங்கை அழைப்பு

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 'சுதந்திரக் கிண்ணம்' ஒருநாள் தொடரை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட்சபை முனைப்புக் காட்டி வருகிறது.
இலங்கை சுதந்திரமடைந்து அடுத்த வருடத்துடன் 70 ஆண்டுகள் நிறைவடைகிறது. இதனையடுத்தே 'சுதந்திரக் கிண்ணம்' என்ற பெயரில் ஒரு நாள் கிரிக்கெட் தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்து வருகின்றது.
குறித்த தொடர் தொடரில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, சுதந்திரக் கிண்ணத் தொடர் குறிப்பாக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தியா உட்பட சில நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான முழுத்தகவல்களும் எதிர்வரும் காலத்தில் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.
இந்தியா மட்டுமன்றி வேறுசில நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தமையால் இந்தத் தொடர் முத்தரப்புத் தொடராகவும் அல்லது பல அணிகள் பங்குபற்றும் தொடராகவும் நடத்தப்பட் வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

சீட்டிழுப்பு வாரம்: 90
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,615,960/-
சீட்டிழுப்பு திகதி: 22.01.2017
U 36 43 52 69

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
22.01.2017 | 2086 | ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள்
04 20 34 55
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 6, 892, 090/=
வெற்றி இலக்கங்கள்
25 79
டபள் சான்ஸ்

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
2 மாத ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
077 245 3673

கண்ணீர்க்காணிக்கை
எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான
திருமதி நட்பினி நல்லசிங்கம்
அவர்களின் தாயார்
திருமதி தெய்வானை கதிரேசு
அவர்களின் மறைவையொட்டி 21.01.2017 அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
யாழ். கல்வி வலய
இசையாசிரியர் கழகம்



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று இடம்பெற்றது. டோனி தலைமைத்துவத்தில் இருந்து விலகிவிட்ட நிலையில் அவரது தலைமைத்துவத்தைக் கௌரவிக்கும் விதமாக கொல்கத்தா கிரிக்கெட் சங்கம் நினைவுச் சின்னத்தை வழங்கியது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.